REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 23 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 92 இல. 47 | Friday 23, February, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க ஆயிரம் வாகனங்கள் இறக்குமதி



நாட்டுக்குள் சுமார் 1,000 வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ

06

### போட்டித் தன்மைமிக்க உலகச் சந்தையை வெற்றிகொள்ள

# இளைஞர், யுவதிகளுக்கு பொருத்தமான சூழல்

### உருவாக்கிக் கொடுக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி ரணில்

### அனைத்து தொழில் பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வரவும் திட்டம்

நவீன உலகுக்கு ஏற்றவாறு தொழில் கல்வியை மறுசீரமைத்து, நாட்டின் இளைஞர், யுவதிகள் போட்டித் தன்மையுள்ள உலக தொழில் சந்தையில் வெற்றி பெறுவதற்கு, உகந்த சூழல் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

இதற்கமைய நாட்டின் சகல தொழில் பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதோடு, புதிய விடயப்பரப்புக்களை உள்ளடக்கிய பாடநெறிகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இரத்மலானை லலித் அத்துலத்முதலி தொழில்பயிற்சி நிலையத்திற்கு நேற்று (22) காலை மேற்பார்வை விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

லலித் அத்துலத்முதலியின் நினைவாக பிள்ளைகளின் நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனம், தற்போது தேசிய

06



இரத்மலானை லலித் அத்துலத்முதலி தொழில் பயிற்சி நிறுவன மாணவர்களுடன் ஜனாதிபதி

## அமரர் டி.ஆர். விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தின மத அனுஷ்டானம்





லேக்ஹவுஸ் நிறுவன ஸ்தாபகர் அமரர் டி.ஆர். விஜயவர்தனவின் 138 ஆவது ஜனன தினத்தையிட்டு நிறுவனத்தில் (21) நடைபெற்ற பிரித் நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள். ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், விஜய நியூஸ்பேப்பர் நிறுவனத் தலைவரும் அமரர் விஜயவர்தனவின் புதல்வருமான ரஞ்ஜித் விஜயவர்தன ஆகியோர் அன்னாரின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிப்பதைக் காண்க..

### சனத் நிஷாந்தவின் மரணம்

## கொலையா விபத்தா?

### துரித CID விசாரணை அவசியம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் கொலையா அல்லது விபத்தா என்பதில் சந்தேகம் நிலவுவதாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன்

06

## மாத்தளையில் பஞ்சரத பவனி நகரெங்கும் விழாக் கோலம்





03

### புதிய கடற்றொழில் சட்ட வரைபு ஒரு மாதத்தில் சபையில் சமர்ப்பிப்பு

அமைச்சர் டக்ளஸ் உறுதி



03

### கண்ணிவெடி அகற்றும் தேசிய செயற்பாடுகள் 2027 வரை தொடரும்

யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

## ஆரம்பப் பிரிவின் 17 இலட்சம் மாணவர்களுக்கு இலவச உணவு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மார்ச் மாதம் முதல் இலவச மதிய உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் அதிகளவான சிறுவர்கள்

06

### UNDP அனுசரணையுடன் ஊடக செயலமர்வு

## அதிகளவிலான தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் பங்கேற்பு

### திருமலை, யாழ். நகரில் 90 தமிழ் ஊடகவியலாளர் இணைவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதி பங்களிப்புடன் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தில், அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் பங்கேற்றுள்ளதாக ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன

06

## கட்சிக்குள் பதவிப் போட்டியிருப்பின் போட்டியிடாமல் தவிர்த்துக்கொள்வேன்

### மூத்த உறுப்பினர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவிப்பு



இலங்கை தமிழரசுக்கட்சிக்கு தெரிவு செய்யப்படும் செயலாளர் தன்னிச்சையாக செயற்பட முடியாது. இது கட்சி யாப்பிலும் தெளிவாக உள்ளது. கட்சிக்குள் எந்த பதவிக்கும் போட்டி இருக்குமானால் அதில் பங்கேற்காது தவிர்த்துக் கொள்ள உள்ளதாக தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

06

### தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்

## ஜீவன் மீதான காழ்ப்புணர்ச்சியே சில அரசியல்வாதிகளின் பேச்சு

### பாரத் அருள்சாமி கண்டனம்



தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு மட்டும் அல்ல, தோட்டத்தில் பிறந்திருந்தாலேயே வீடுதான். பத்து பேர்ச்சஸ் காணியுடனேயே எமது மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும். சில அரசியல்வாதிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாகவே பேசி வருவதாக பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எதிராக

06

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்!!



அம்மனின் அருளாசிகள் அனைவருக்கும் கிடைக்கட்டும்...

114 Main St, Colombo 11
0112 320 009




மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருள் நாடெங்கும் வியாபித்து மகிழ்ச்சியான வாழ்வு அமைய பிரார்த்திக்கின்றோம். Tharisanam இலங்கையில் தனக்கென தனித்துவமான பாதையினை அமைத்து மாணவர்களின் கல்விக்காக உதவி நாடும் பாடசாலைகளின் ஊக்குவித்தலினை மேற்கொள்ளும் இலங்கையில் ஒரே ஒரு நிறுவனம் தரிசனம்.

Tharisanam
Reach out to unite

Tharisanam Australia
தரிசனம் அவுஸ்ரேலியா










லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர். விஜய வர்தனவின் 138ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் இரவு பிரித் ஓதும் வைபவமும் நேற்று பௌத்த பிக்குமார்களுக்கு தானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

(படங்கள் : ரஞ்சித் அசங்க, ஜின்தக குமாரசிங்க ருக்மல் கமகே)

# முதலீட்டு ஊக்குவிப்பு வலய ஊழியர்களின் மனநல மேம்பாட்டுக்கு விஷேட திட்டம்

## சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் அறிமுகம்

*மர்லின் மரிக்கார்*

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அளப்பரிய பங்களிப்பை நல்கிவரும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் பணியாற்றும் ஊழியர்களின் மனநல மேம்பாட்டினை நோக்காகக் கொண்ட விஷேட வேலைத்திட்டமொன்று சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டம் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தின் பிரதான அலுவலகக் கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள போதிலும் நாட்டிலுள்ள அனைத்து முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கும் இவ்வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், சர்வதேச நிதி அமைப்பு என்பன 'பெடர் வேர்க் ஸ்ரீலங்கா' கருத்திட்டமென இவ்வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி முன்னெடுக்கப்பட உள்ளது.

ஆடைத்தொழிற்சாலைகளில் மாத்திரமல்லாமல் இந்நாட்டிலுள்ள ஏனைய அனைத்து தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் ஊழியர்களின் மனநல மேம்பாட்டை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் ஊடாக மனநல மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தல், அது தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குதல் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் இலங்கை மாலைதீவு பிராந்திய பணிப்பாளர் ஜோனி சிம்பசன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றினால் அவர்கள் தனிமை அடைவதை தவிர்த்து நம்பிக்கைக்குரியவருடனான தொடர்பாடல்களுடன் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட உள்ளன.

இவ்வைபவத்தில் இலங்கை முதலீட்டு சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.கே.டி லோரன்ஸ், பெட்டர் வேர்க் கருத்திட்டத்தின் தலைவர் கேசவமுரளி கணபதி, விஷேட மருத்துவ நிபுணர் டொக்டர் ஹரிச்சந்திர யகந்தாவல உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# 'மிஷ்காதுல் மஸாபீஹ்' அறிமுக விழா நிகழ்வு

## மார்ச் 01, கொழும்பில்

தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் 'ஸிஹாஹுஸ் ஸித்தா' ஹதீஸ் கிரந்தங்களின் மிஷ்காதுல் மஸாபிஹ் தமிழ் மொழி பெயர்ப்பு தொகுதி அறிமுகமும் நூல் வெளியீட்டு விழாவும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் தமிழ் பிரிவுடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ள நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) கலந்து சிறப்பிக்க உள்ளார். இதன் போது சிறப்புரைகளை சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி, புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூத் பள்ளியின் தலைமை இமாம் ஹாபிழ் ஏ. பீர்முகம்மது பாகவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மனித நேய ஜனநாயகக் கட்சியின் தலைவருமான எம்.தமீமுன் அன்சாரி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொருளாளரும் மலேசியாவின் சயின்ஸ் இஸ்லாம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ஏ.ஏ.அஸ்வர் (அஸ்ஹரி) ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இவ்வருடம் தரம் 1 இல் பிரவேசிக்கும் மாணவர்களின் கற்கை தொடக்க விழா அக்கரைப்பற்று ஸாஹிரா வித்தியாலயத்தில் கல்லூரியின் அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி றிஹான் சேகு முகைதீன், ஆசிரிய ஆலோசகர்களான தாஹிர், ஜுஹைஸ் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் கலந்து சிறப்பிப்பதை படத்தில் காணலாம்.

# கபூரிய்யா OBA; கத்தார் கிளை புதிய நிர்வாகிகள்

மகரகம கபூரிய்யா அரபுக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கத்தார் கிளையின் இந்த வருடத்துக்கான புதிய நிர்வாக குழு தெரிவு அண்மையில் கத்தார் நாட்டில் இடம்பெற்றது. இதன்போது நிர்வாக குழு தலைவராக இம்தியாஸ் நாஜ் தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக சிபாஸ் அப்துல் சலாம் தெரிவாகியுள்ளார். செயலாளராக ருஜீஹான் ஜெமீல், உப செயலாளராக நவீஹ் நிஸாமும் பொருளாளராக பஹ்மி சதகதுல்லாஹ்வும் உப பொருளாளராக நுஸ்ரி நஜ்முதீனும் தெரிவாகியுள்ளனர்.

அதேநேரம் நிர்வாக குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாக நவாஸ் அப்பாஸ், முபாரிஸ் காஸிம், குர்ஷித் மன்சூர், ஆசிர் ஜஃபர், பாஹிம் பாரிஸ் மற்றும் சதீக் சம்சுதீன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

## தேசிய மட்ட விஞ்ஞானப்போட்டி

# தென் மாகாண பாடசாலைகள் சாதனை; அறபாவில் இருவர் தெரிவு

*(வெலிகம தினகரன் நிருபர்)*

2023 அகில இலங்கை தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டிகளின் பெறுபேறுகளின் படி இம்முறை தென் மாகாண பாடசாலைகள் சாதனை படைத்துள்ளன. மேற்படி போட்டியில் தென் மாகாண பாடசாலைகள் இதுவரை எட்டப்பட்ட அதி கூடிய சாதனை பெறுபேறாக இது கணிப்பிடப்படுகின்றது என தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஏ.எம். மஷாஹிர் (நளீமி) தெரிவித்தார்.

அகில இலங்கை மட்டத்தில் ஒவ்வொரு பாடசாலைப் பிரிவிலும் முதல் 10 ஸ்தானங்களுள் 26 மாணவர்கள் உள்ளடங்குகின்றனர்.

அவர்களுள் 8 மாணவர்கள் முதல் மூன்று ஸ்தானங்களைப் பெற்றுள்ளனர். இப்பெறுபேறு கடந்த வருடத்தை விட அதிகமாகும் .

இம்முறை அகில இலங்கை மட்டத்தில் முதல் மூன்று ஸ்தானங்களைப் பெற்ற 8 பேரில் 3 மாணவர்கள் தேசிய மட்ட ஸ்தானங்களைப் பெற்று சாதனை படைத்து தென் மாகாணத்துக்கு கௌரவத்தை ஈட்டித் தந்துள்ளனர்.

செல்வன் எம். ஐ.எம்.ஆகிப் அஹ்மத் (வெலிகம அறபா தேசிய பாடசாலை), செல்வி எம்.ஐ.எப் அஸாமா (காலி / முஸ்லிம் மகளிர் கல்லூரி)

மற்றும் செல்வன் எம்.அஸ்னத் (வெலிகம அறபா தேசிய பாடசாலை)

இதன் மூலம் தென் மாகாணம் தமிழ் மொழி பிரிவு தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தை சுவீகரித்துக் கொண்டது. முதலாம் இடத்தை வட மாகாணமும் இரண்டாம் இடத்தை கிழக்கு மாகாணமும் பெற்றுக் கொண்டது.

கடந்த வருடம் தென் மாகாணம் எட்டாம் இடத்தில் காணப்பட்டது. எனினும் இம்முறை முன்றாம் இடத்துக்கு வந்துள்ளமை பாராட்டத்தக்கது.



ஹம்பாந்தோட்டை, இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 1க்கு மாணவர்களை அனுமதிக்கும் வித்தியாரம்ப நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலைமையில் நடைபெற்றது. அதில் விசேட அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கையின் சவூதி அரேபியாவிற்கான முன்னாள் தூதுவர் அஸ்மி தாசிம் உட்பட அதிதிகளும் மாணவர்களும் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படங்கள்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 23 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மாசி 11
ராகுகாலம் : பகல் : 11.00 - 12.30வரை
சுபநேரம் : காலை : 6.30 - 8.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# புதிய கடற்றொழில் சட்ட வரைபு ஒரு மாதத்தில் சபையில் சமர்ப்பிப்பு

## உலக உணவு, விவசாய அமைப்பிடம் அமைச்சர் டக்ளஸ் உறுதி

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஐ.நா. உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் (Food and Agriculture Organization) பிரதி பணிப்பாளர் நாயகம் மனுவேல் பராங்கே தலைமையிலான பிரதிநிதிகள் பங்கேற்ற சந்திப்பொன்று கடற்றொழில் அமைச்சில் (21) நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

இலங்கை கடற்றொழில் சமூகத்தை சர்வதேச மட்டத்தில் உயர்த்துவதற்காக Food and Agriculture Organization அமைப்பின் உதவியுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக தற்போது புதிய சட்டவரைபு உருவாக்கப்படுகிறது. கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி இச்சட்ட வரைபு தயாரிக்கப்படுகிறது.

அமைச்சரவையின் அனுமதியுடன் இப்புதிய கடற்றொழில் சட்டமூலம்



ஒரு மாதத்துக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இச்சட்டமூலத்தை தயாரிப்பதற்கு Food and Agriculture Organization தரப்பில் வழங்கப்பட்ட உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

இலங்கை கடற்றொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் எமது அறுவடைக்குப் பின்னரான பதிப்புகளை தடுப்பதற்கும் எமது நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் Food and Agriculture Organization அமைப்பின் உதவி மற்றும் ஆலோசனை தேவைப்படுகிறது.எதிர்காலத்தில் மீன்வளம் அழிவடையும் அபாயம் இருப்பதால் கூடுகளில் மீன்களை வளர்ப்பதற்கான உதவிகளை செய்து தர வேண்டும். உலகெங்கும் இந்நடைமுறையுள்ளது. கொடுவா (மோதா) போன்ற மீன் இனங்களை வளர்ப்பதற்கு உதவி பரியுமாறும் Food and Agriculture Organization பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் நடவடிக்கைகள் காரணமாக இலங்கை மீனவர்களுக்கு கடும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. தற்போது எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைகளில் இருந்து மீட்சிபெறும் வரை கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதன் போது Food and Agriculture Organization பிரதி பணிப்பாளர் நாயகம் மனுவேல் பராங்கே கருத்து தெரிவிக்கையில்

அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக தமது அமைப்பு சாதகமாக பரிசீலிக்கும். இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை பரிசீலனை

06

# தவக்கால சிந்தனை



## தவக்காலத்தின் ஆன்ம பரிசோதனை

இன்றைய திருவழிபாட்டின் முதலாம் மற்றும் நற்செய்தி இறைவார்த்தைகள் நமது வாழ்வினை உற்றுப்பார்க்கவும், நமது பாவங்களையும் தவறுகளையும் அடையாளம் காணவும் அவற்றிலிருந்து மனமாற்றம் பெறுவதற்குமான சவாலை முன்வைக்கின்றன.

முதலாம் இறைவார்த்தையானது நாம் நமக்கு பரிந்துரைக்கப்பட்டவற்றைச் செய்து, தூய வாழ்வு வாழ்ந்தால் நிலைவாழ்வினைப் பெற்றுக் கொள்வோம் என்கிறது.

நம்முடைய பாவங்களை அடையாளம் காணவும், அவற்றிலிருந்து மனந்திரும்பவும் கடவுள் அருளும் மன்னிப்பினைப் பெறவும் கடவுள் மிகச் சிறந்ததொரு கருவியாக ஒப்புரவு அருளடையாளத்தை நமக்குத் தந்துள்ளார்.

இவ்வருடையாளத்தில் நாம் எமது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்கிறோம் என்றும் எமது வாழ்வினை மாற்ற விரும்புகிறோம் என்றும் கடவுளே நம் பாவங்களை மன்னிக்கின்றார் என்றும்அவரிடமே சொல்கிறோம்.

சில பல காலமாக ஒப்புரவு அருளடையாளத்தில் கலந்து கொள்ளதவர்களின் உதவிக்காக, நல்ல ஒப்புரவு அருளடையாளத்தின் படிமுறைகளை முன்வைக்கின்றேன்.

1. நாம் ஆன்ம பரிசோதனை செய்து, நமது பாவங்களுக்காக வருந்த வேண்டும். அவற்றை மீண்டும் செய்வதில்லை என முடிவெடுத்தல்

2. நமது பாவங்களை அறிக்கையிடல்

3. பாவத்திற்கான பரிகாரச் செயலை குருவானவர் வழங்குதல்

4. உத்தம மனஸ்தாப செபத்தின் பிற்பாடு மன்னிப்பைப் பெறல்

5. நமக்கான பரிகாரச் செயலினைப் புரிதல்

நாம் இப்போதுதான் தவக்காலத்தினை ஆரம்பித்துள்ளோம். கடவுளுடன் புதிய உறவினை இந்த அருள் நிறைந்த காலத்தில் பெற ஒப்பரவு அருளடையாளத்தில் இணைந்து கொள்வோம். நாம் ஒப்புரவு அருளடையாளத்தில் தவறாமல் கலந்து கொண்டு தூய வாழ்வு வாழ்ந்தால் நமது இறப்பின் பின்னதான வாக்களித்த நிலைவாழ்வு நமதாக மாறும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# 19 இந்திய மீனவர்களுள் 18 பேர் நேற்று விடுவிப்பு

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 18 தமிழக மீனவர்களை, ஊர்காவற்றுறை நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது.

எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கடந்த (08) தமிழக மீனவர்கள் 19 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 02 விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்நிலையில் இவர்கள் நேற்று (22) ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதன்போது 19 மீனவர்களில் 18 பேரை விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. ஒருவருக்கு மட்டும் 06 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள், ஓரிரு நாட்களில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

# மின்சார சபை ஊடகப் பேச்சாளர் இராஜினாமா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தாம் தெரிவித்த கருத்து சமூகத்தில் பாரிய விமர்சனத்துக்குள்ளானதை அடுத்து மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயெல் பிரியந்த நேற்று தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.இவர், இராஜினாமாக் கடிதத்தை கையளித்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.மேலும், இவரது கருத்துக்காக மின்சார சபை மற்றும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் சார்பில் மன்னிப்பு கோருவதாகவும் அமைச்சர் தமது x வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது (20) கல்வி கற்கும் மாணவர்கள் தேவைப்பட்டால் குப்பி விளக்குகளை பயன்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்திருந்த கூற்று சமூகத்தில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இந்நிலையிலேயே அவர் தனது கூற்றுக்காக வருத்தம் தெரிவித்துவிட்டு மக்களிடமும் மன்னிப்புக் கோரியுள்ளார். மேலும் மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பதவியிலிருந்தும் அவர் இராஜினாமா செய்துள்ளார்.

இவ்வாறான கருத்தை அவர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தெரிவித்த போது, கல்வியில் சிறந்து விளங்கிய தமது மூத்த தலைமுறையினரின் முன்மாதிரியையும் சுட்டிக்காட்டியே அவர், மேற்படி கூற்றை வெளியிட்டிருந்தார்.

இவரது மேற்படி கூற்று தொடர்பில் நேற்று பாராளுமன்றத்திலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் 2027 வரையில் இயங்கும்

## அமைச்சர் பிரசன்னவின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை கண்காணித்து வழிநடத்துவதற்காக தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தை 2027 வரை பராமரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ள ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


2027ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள்



இல்லாத நாடாக இலங்கையை மாற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, கண்ணிவெடி அகற்றும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு, திட்டத்தை மேலும் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டத்தை

06

# வரிசை நெருக்கடியை தீர்க்க E Passport சேவை ஆரம்பிக்க அரசாங்கம் துரித நடவடிக்கை



குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்தில் தற்போதுள்ள வரிசை நெருக்கடிகளை குறை க்கும் வகையில் E Passport சேவையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தயாராகி வருவதாக. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டிரான் அலஸ்: கொரிய மொழிப் பரீட்சை காரணமாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்திற்குமுன்பாக மீண்டும் வரிசைகள் அதிகரித்துள்ளன. அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கொரிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேர்வில் சித்தி பெறுபவர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

06

# சர்வதேச புனித பகவத் கீதா மகோற்சவம்–2024

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு சர்வதேச கீதா மகோத்ஸவா குருஷேத்ரா மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து சர்வதேச கீதை விழாவை நடத்தவுள்ளது.நாட்டின் பல்வேறு மத மற்றும் கலாசார அமைப்புகளின் ஆதரவுடன் ஏற்பாடாகியுள்ள இந்நிகழ்வு எதிர்வரும் மார்ச் 01,02, 03 ஆம் திகதிகளில் நடைபெறும்.

முதலாம் நாளன்று காலை சிறுவர், சிறுமியருக்கான சிற்பம் செய்தல்,சித்திரம் வரைதல், கோலம் போடுதல், கட்டுரை வரைதல், கீதா ஸ்லோகம் சொல்லுதல் முதலான போட்டிகள் இடம்பெறும்.

மாலை 3.30 மணியளவில் கீதை யாகம் நிகழ்த்தப்படும். கீதை யாகத்தைத் தொடர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பக்தர்களின் ஒன்றிணைந்த கீதை வழிபாடு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில், பகவத் கீதையின் சாரம், அன்றாட வாழ்வில் பகவத் கீதா போதனையின் பயன்பாடு, பகவத்கீதை பற்றிய பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் மதங்களின் ஒப்பீட்டுப் பகுப்பாய்வு முதலான தொனிப் பொருள்களில் கருத்தரங்கு நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. கருத்தரங்கு நிகழ்விலே இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஆன்மிகத் தலைவர்கள் மற்றும் கல்விப்புலம் சார்ந்த போராளர்கள் உரைகள் நிகழ்த்துவர்.

மூன்று அமர்வுகளாக நடாத்தப்படவுள்ள இக்கருத்தரங்கு அமர்வுகளுக்கிடையில் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நினைவு நாள் வைபவம், கீதா யாகத்துடன் ஆரம்பமாகி, இலங்கை மற்றும் ஹரியானா கலாசாரத்தின் இணைவாக மாபெரும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அகில இலங்கை ரீதியாகப் பங்கேற்கும் கலைஞர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இங்கு ஏற்பாடாகியுள்ளன. கீதா யாத்திரையின் போது யானைகளின் அலங்கார அணிவகுப்பு ஊர்வலமும் இடம்பெறும்.

# காலி முகத்திடல் நிலப்பரப்பை வெளிநாட்டு முதலீடுகளுக்காக அரசாங்கம் வழங்கவில்லை

## ஜே.வி.பியின் கூற்று பொய்யானது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகள் முறையற்ற விதத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிப்பதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காலி முகத்திடல் நிலப்பரப்பு வெளிநாட்டு முதலீடுகளுக்காக வழங்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

காலி முகத்திடல்' போராட்டக் களம்' நிலப்பகுதியை கசினோ சூதாட்ட நடவடிக்கைகளுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பி. எம்.பி. விஜித ஹேரத் தெரிவித்துள்ள கூற்று பொய்யானது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டுக்கு முதலீட்டாளர்களை அழைத்து வரும் போது அதற்கு தடையேற்படுத்தும் வகையில் மக்கள் மத்தியில் எதிர்க்கட்சியினர் தவறான தகவல்களை வழங்க முயற்சிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

06



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 12

## குறள் தரும் சிந்தனை



இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்.

# காய்கறிச் செய்கையாளருக்கு இழைக்கப்படுகின்ற அநீதி!

சாதாரண மக்களுக்கு எட்டாத உயரத்தில், மிகவும் உச்சத்தில் இருந்த காய்கறி விலைகள் சமீப தினங்களாக படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. ஆயிரம் ரூபாவையும் தாண்டியிருந்த ஒரு கிலோ மரக்கறியின் விலை தற்போது சுமார் அரைவாசியாகக் குறைந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். நுகர்வோருக்கு மகிழ்ச்சியளிக்கின்ற விடயம் இதுவாகும்.

மலைநாட்டு மரக்கறி வகைகள் மாத்திரமன்றி, ஏனைய பிரதேச காய்கறி வகைகளின் விலைகளும் கடந்த இரு மாதகாலத்துக்கு மேலாக அதிகரித்துக் காணப்பட்டன. நாட்டின் பல பகுதிகளில் சில மாதங்களாக தொடர்ச்சியான மழை பெய்து வந்த காரணத்தினாலேயே மரக்கறிகளின் விலைகள் அதிகரித்திருந்தன. தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ளம் காரணமாக மரக்கறிப் பயிர்கள் பெருமளவில் அழிந்து விட்டன. மலைநாட்டுப் பிரதேசங்களிலும் இவ்வாறான நிலைமையே ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரு கிலோ மரக்கறி இரண்டாயிரம் ரூபாவையும் தாண்டி விற்பனையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மழை தணிந்து விட்டது. அதன் காரணமாக மரக்கறிச் செய்கையாளர்கள் புதிதாக செய்கையை ஏற்கனவே ஆரம்பித்து விட்டனர். புதிய பயிர்களின் அறுவடை படிப்படியாக ஆரம்பமாவதால் காய்கறிகளின் விலைகள் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. நாட்டின் வடபகுதியில் இருந்தும் காய்கறிகள் தென்பகுதிக்குக் கொண்டுவரப்படுவதனால் அவற்றின் விலைகள் படிப்படியாகக் குறைவடைந்து கொண்டு வருவதைக் காண முடிகின்றது.

இலங்கை மிகவும் வளமானதொரு நாடாகும். நிலவளம், நீர்வளம் மற்றும் வாய்ப்பான சீதோஷண நிலைமை கொண்ட நாடாக இலங்கை விளங்குகின்றது. நெல், காய்கறி மற்றும் உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கு வாய்ப்பான நாடாக இலங்கை உள்ளது. நிலக்கீழ் நீரும் போதுமான அளவு உள்ளதனால் மரக்கறிச் செய்கைக்கு மிகவும் வாய்ப்பான நாடாக இலங்கை விளங்குகின்றது. உள்நாட்டு மரக்கறிகள் மற்றும் மேல்நாட்டு மரக்கறிச் செய்கைகளுக்கு ஏதுவான பிரதேசங்கள் இலங்கையில் காணப்படுவதால் வருடத்தின் எக்காலப் பகுதியிலும் காய்கறிச் செய்கையை இங்கு மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஆனாலும் எமது நாட்டில் காய்கறி உற்பத்தி அடிக்கடி வீழ்ச்சியடைவதும், அதன் காரணமாக அவற்றின் விலை உயர்வதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. மரக்கறி விலை உயர்வின் காரணமாக நுகர்வோர் மாத்திரமன்றி உற்பத்தியாளர்களும் வருமானம் குறைந்து பாதிக்கப்படுகின்றனர். ஆனால் உற்பத்தியாளர்களிடமிருந்து அவற்றை வாங்கி வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்ற இடைத்தரகர்கள் பாதிக்கப்படுவது குறைவாகும்.

மரக்கறி விலை உயர்வுக்கு 'மாபியாக்கள்' கூட காரணமாக அமைந்து விடுகின்றனர். நகரப் பகுதிகளில் உள்ள சந்தைகளில் காய்கறி விலைகளைத் தீர்மானிப்பவர்கள் இந்த மரக்கறி மாபியாக்கள் ஆவர். அவர்கள் காய்கறிகளுக்கு அதிக விலையைத் தீர்மானிக்கின்றனர். அவர்களது பிடியிலிருந்து காய்கறி வர்த்தகம் தப்பிக் கொள்வது இலகுவான காரியமல்ல.

காய்கறிச் செய்கையாளர்கள் எதிர்நோக்குகின்ற துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நிலத்தைப் பண்படுத்துவதில் இருந்து அறுவடையைப் பெறுகின்ற காலம் வரை அவர்களின் சிரமங்கள் மிகவும் அதிகம். காய்கறிச் செய்கையாளர்களில் பெரும்பாலானவர்கள் பல இடங்களிலும் கடன் பெற்றுத்தான் கமச்செய்கைளில் ஈடுபடத் தொடங்குகின்றனர். பயிர்விதைகளுக்கான செலவினம், பீடைநாசினிகள், கூலித்தொழிலாளர்களுக்கான சம்பளம், பிராணிகளிடமிருந்து பாதுகாப்பு என்றெல்லாம் கமநலச் செய்கையில் அவர்கள் பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

அதேசமயம் கடும்மழை, வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களும் பயிர்ச்செய்கையைப் பாழாக்கி விடுவதுண்டு. இத்தனை சவால்களிலிருந்து பயிர்களைப் பாதுகாத்த பின்னர் கிடைக்கின்ற அறுவடையை அவர்களால் நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் போகின்றது. கொழும்பு போன்ற நகர்ப்பகுதிகளிலிருந்து காய்கறிகளைக் கொள்வனவு செய்வதற்காக காலடி தேடி வருகின்ற மொத்த விற்பனையாளர்கள் மிகவும் குறைந்த விலையிலேயே காய்கறிகளைக் கொள்வனவு செய்கின்றனர்.

ஆனால் குறைந்த விலையில் காய்கறிகளைக் கொள்வனவு செய்கின்ற மொத்த வியாபாரிகள் அக்காய்கறிகளை நகர்ப்பகுதிகளில் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் அவ்வியாபாரிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கின்றது. அவர்கள் என்றும் செல்வந்தர்களாகவே உள்ளனர். ஆனால் அவர்களுக்கு மரக்கறிகளை விற்பனை செய்கின்ற பயிர்ச்செய்கையாளர்களோ என்றும் வறுமையிலேயே வாடுகின்றனர்.

காய்கறிச் செய்கையாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு உழைப்புக்கேற்ப ஊதியம் கிடைப்பதில்லை என்பதுதான் உண்மை. அவர்களுடைய உழைப்பானது வியாபாரிகளால் உறிஞ்சப்படுகின்றது. எத்தனையோ துன்பங்களின் மத்தியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற அவர்களால் மிகச்சிறு வருமானத்தையே ஈட்டிக் கொள்ள முடிகின்றது.

இவ்வாறான அநீதிக்கு முடிவு காணப்படுவது அவசியமாகும். காய்கறிச் செய்கையாளர்களின் காலடிக்குச் சென்று மரக்கறிகளைக் கொள்வனவு செய்கின்ற பொறுப்பை நியாயமான நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளாதவரை இந்த அவலத்துக்கு முடிவு கிடைக்கப் போவதில்லை.

editor.tkn@lakehouse.lk

# பக்தர்களுக்கு அருளாட்சி வழங்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்



'அன்பே சிவமாய் அமர்வாளாம் நம் ஆதிபராசக்தி
ஆறுதல் சொல்லிஅமுதம் பொழிவாள் ஆதிபராசக்தி
இப்புவி இன்பம் வேண்டாம் என்றால் ஆதிபராசக்தி
ஈடில்லாகாட்சிஅளிப்பாள் ஆதிபராசக்தி
உயர்வுதாழ்வுஒன்றும் பாரால் ஆதிபராசக்தி
ஏங்கும் நிறைந்தசோதியாய் நிற்பாள் ஆதிபராசக்தி
ஏகாட்சமாய் அவனிதனிலேவந்தாய் ஆதிபராசக்தி'

என்ற வரிகளுக்கிணங்க மனிதவாழ்வை முழுமையாக்குவது தெய்வபக்தியே. உலகின் பிறவிகளில் எல்லாம் தலைசிறந்த பிறவியாய் கருதப்படுவது மானிடப்பிறவியே. இந்தப் பாக்கியத்தை பெற்றதன் நோக்கமே வாழ்வுதந்த இறைவனை எப்பொழுதும் நினைந்து வணங்கி கொண்டிருப்பது.

இறைசிந்தனையுடைய ஒவ்வொரு நாளுமே பிறவாத நாளாக கருதப்படல் வேண்டும். அந்த வகையில் தெய்வசக்தி கொண்டாடுவது அறங்களிலே முதன்மையானதாக விளங்குவதாகும்.

தமிழர்களுக்கு 12 மாதங்களுமே மிகவும் சிறப்பான தெய்வபக்தி அளிக்கும் நாளாக விளங்கும். ஆகவே மாசி மாதத்தில் வரும் மாசிமகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மாசிபெளர்ணமியோடு கூடி வரும் மகநட்சத்திரத்தில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்புநாளாக மாசிமகம் விளங்குகிறது. மாசிமகம் என்றாலேஅனைவரதும் நினைவுக்கு வருவது மாத்தளை மாநகரிலே மாரியம்மனின் மாசிமக பஞ்சரதபவனி ஊர்கோலம் ஆகும். இருபத்தைந்து நாட்கள் மாத்தளை மாநகரமே விழாக் கோலமாக ஜொலிக்கும்.

"பஞ்சரதம் அசைந்துவர, பாவையர்கள் வடம் பிடிக்க, மஞ்சுதவில் மாத்தளையில் மாசிமகம் சிறந்திடுதே" என்ற பாடலில் பாடலாசிரியர் மிகவும் அழகாக ரதஅழகினை கூறுகிறார்.

1934 ஆம் ஆண்டளவில் கட்டுத்தேர் கட்டிஅலங்கரித்து விநாயகர், முருகன், சிவனம்பால் என முத்தேர் பவனி வருடாந்தம் நடந்தேறியது. ஒருதேரை ஆறு வடிவங்களாக கொண்டுஅமைத்து அதில் கலை, தத்துவம், வர்ணம், புவனம், பதம், மந்திரம் என ஆறு வகையாக திருத்தேரை வடிவமைத்து ஒரு சரீரமாக கருதி அதன் நடுவில் அம்பிகையை வைத்து வழிபட வேண்டும் என்பதுஆகமவிதியாகும்.

அதற்கமைய யாழைப் பிறப்பிடமாக கெண்ட தம்பித்துரை தம்பதியினர் கைவண்ணத்தில் எழில்மிகு சித்திரத்தேரை அமைத்து இலங்கை வரலாற்றில் பஞ்சரதபவனியை வரச்செய்து சரித்திரம் படைத்த பெருமை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானத்துக்கே உரியது.

பல சிறப்புகளும் சிறப்பாக அமையப்பெற்ற அன்னையின் ஆலயம் அருவிகொட்டும் அழகுமலைக்குன்றுகளுக்கு கிழக்கே இலங்கை திருநாட்டைஅழகுபடுத்தும் மகாவலிகங்கையின் தீர்த்தகரைக்கு மேற்கே ஸ்ரீஏழுமுகக்காளியம்மன் தேவஸ்தானத்திற்கு வடகிழக்குதிசையிலும் வெள்ளக்கள் ஸ்ரீஅழகர் பெருமாள் கோவிலுக்குதெற்கேயும் கோம்பிலிவல ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவிலுக்கு வடக்கேயும் மாத்தளைநகரில் அமையப்பெற்று முத்துவிநாயகர் ஆலயமும் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி ஆலயமும் பிள்ளையார் கோவில் ஆலயங்கள் நாற்புறமும் புடைசூழ அதன் நடுவே அன்னைமுத்துமாரி அருளாட்சி செய்கிறாள்.

## நாளை தேர்த்திருவிழா



1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது சித்திரத்தேர் எரிக்கப்பட்டது. பின் மீண்டும் 1992ம் ஆண்டு ஐந்து தேர்களையும் மீண்டும் உருவாக்க அம்பாள் சக்திகொடுத்து அருள்பாலித்தால் இதிலிருந்து அம்பாளின் மகிமை உலகிற்கோர் எடுத்துக்காட்டு. அன்னைமாரியை வேண்டி நிற்போருக்கு அனைத்தையும் அள்ளிக்கொடுப்பாள் மாரியம்மா . அதேபோல அடுத்த வெள்ளோட்டப் பெறுவிழா 1993ம் ஆண்டு பங்குனி மாதம் 5ம் திகதி நடைபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை அன்னையின் பஞ்சரதபவனியை வெகுசிறப்பாக பார்வையிட்டு வருகின்றோம் .

108 அடிவானளாவ உயர்ந்து நிற்கும் ராஜகோபுரத்தில் வீற்றிருந்து மாத்தளைவாழ் மக்களுக்கு அருளாட்சி கொடுத்துவருகின்றாள் அன்னைமுத்துமாரி. அன்னைமாரியின் குழந்தைகளில் நானும் ஒருத்தி. காலத்தால் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அன்னைமுத்துமாரியின் அன்பு என்றுமே மாறாது. மாத்தளை மண்ணில் பிறந்த ஒவ்வொரு உயிர்களுக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் என்றுமே கிட்டும். இவ்வருடமும் மாரியம்மனின் அலங்காரத்தைக் கண்டு மாரிஅம்மாவை வழிபட்டு அவளருள் பெற்று உயர்ந்து உயர்வடைவோமாக!



தொகுப்பு:
திருமதி தேவிகாசன் ஜெய் பிரசாந்த்...
(B.F.A. Dip in Media)

# தெல்தோட்டை முஸ்லிம் கொலனி பரிசளிப்பு, வரலாற்றுத் தொகுப்பு நூல்வெளியீடு நாளை

'முன்மாதிரி முஸ்லிம் கிராமம் 2040' இலக்கு நோக்கிப் பயணிக்கும் தெல்தோட்டை முஸ்லிம் கொலனி, அல் இலாஹிய்யா ஜும்ஆ மஸ்ஜித் கௌரவ நம்பிக்கையாளர் சபை, வருடாந்தம் நடத்தி வரும் கல்வியிலே உயர் நிலையை அடையும் மாணவர்களைப் பாராட்டி, பரிசு வழங்கி, கௌரவிக்கும் நிகழ்வும் தெல்தோட்டைப் பிரதேசத்தில் முஸ்லிம் குடியேற்றத்தின் வரலாறு தொகுக்கப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்வும் நாளை 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு இலாஹிய்யா விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் கண்டி மாவட்ட ஐ.தே.க அமைப்பாளருமான லாபிர் அவர்களும், வர்த்தகப் பிரமுகர் M.H.M. நஸீர் மற்றும் அந்நூர் நிறவனத்தின் பணிப்பாளர் S.M. அலியார் அவர்களும், சிறப்பதிதிகளாக இலங்கை ஜம்யிய்யத்துல் உலமா சபையின் தெல்தோட்டைக் கிளைத் தலைவரும் காதி நீதவானுமாகிய H.M.M. இல்யாஸ் மௌலவி அவர்களும், தெல்தோட்டை மஸ்ஜிதுகள் தக்யாக்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் முனீர் சாதிக் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




ஊரிலிலிருந்து இவ்வருடம் பல்வேறு பீடங்களுக்கும் நுழையும் பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தொழிநுட்பக் கல்லூரிகளுக்குள் நுழையும் மாணவர்கள், கல்வியற் கல்லூரிக்குள் நுழையும் மாணவர்கள், பட்டதாரியாக வெளியேறிய மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரத்தில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், தரம்_5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், மௌலவி அல் ஹாபில் பட்டம் பெற்றவர்கள், சிறந்த கிரிக்கெட் வர்ணனையாளர்கள் என பலதரப்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

முஸ்லிம் குடியேற்றத்தின் வரலாறு தொகுக்கப்பட்ட நூலும் இந்த தினத்தில் வெளியிடப்படவுள்ளது. இந்நூலில் ஊரின் முதல் அதிபர், முதல் அரசியல்வாதி, முதல் ஆசிரியர், முதல் காதிநீதவான், முதல் பேஷ் இமாம், முதல் அஷ்ஹரி போன்றவர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் ஊரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சமூகப்பணி செய்து கொண்டிருக்கும் அமைப்புகளின் தோற்றம், வளர்ச்சி என பல்வேறு விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வூரிலுள்ள ஆசிரியர்கள், உலமாக்கள், அரச தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் போன்றவர்களின் தகவல்களும் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வரலாற்று நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஆடைக்கைத்தொழில், ஜவுளி, நகைகள் சர்வதேச கண்காட்சி கொழும்பில்

ஆடைக் கைத்தொழில் மற்றும் ஜவுளி நகைகள் தொடர்பான மூன்று சர்வதேச கண்காட்சி இம் மாதம் 29ஆம் திகதியும் மார்ச் மாதம் 1,2ஆம் திகதிகளிலும் கொழும்பு_ 10 டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள Sri Lanka Exhibition & Convention Centre மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அமெரிக்காவின் செம்ஸ் குளோபல் நிறுவனத்தினர் இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளனர்.




ஜவுளித்துறையில் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ள செம்ஸ் குளோபல் பி2பி வர்த்தக கண்காட்சி நிறுவனமானது உலகளாவிய ரீதியில் நான்கு கண்டங்களில் கண்காட்சி மாநாடுகளை நடத்தி வருகின்றது. குறிப்பாக பங்களாதேஷ், பிரேசில், மொரோக்கோ, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் கண்காட்சிகளை நடத்தி வருகின்றது.

சர்வதேச ரீதியாக உற்பத்தி செய்யப்படும் நவீன கருவிகளை அறிமுகப்படுத்தி ஆடைக்கைத்தொழில் துறையையும் ஜவுளித்துறையையும் மேலும் வளப்படுத்தி சர்வதேச வர்த்தக வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதே இக்கண்காட்சியின் நோக்கமாகும். இலங்கையின் ஆடைக்கைத்தொழில் துறை மற்றும் ஜவுளி நகைகளை சர்வதேச ரீதியில் போட்டியிடும் அளவுக்கு உற்பத்திகளை அதிகரிப்பதுடன் கைத்தொழிலாளர்களுக்கான சர்வதேச வாய்ப்புகளை அடையாளம் காணக்கூடியதாகவும் அமையும். அவ்வாறே, இலங்கையின் பொருளாதாரத்துக்கு அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கான சந்தர்ப்பமாகவும் இருக்கும். அதுமாத்திரமன்றி இக்கண்காட்சியானது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கும் நல்லதொரு வாய்ப்பாகும் அமையும்.

2024 டெக்டெக் இலங்கை வர்த்தக கண்காட்சியானது 11ஆவது தடவையாக நடைபெறுகிறது. தொழில்நுட்பம் மற்றும் ஆடைத் தொழில் இயந்திரம், ஜவுளி ஆகியவற்றின் முன்னணி சந்தைப்படுத்தல் தளமாக இக்கண்காட்சி நடைபெற உள்ளது. சர்வதேச ரீதியாக செயற்படும் முன்னணி நிறுவனங்களின் வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், வியாபாரிகள் பங்குபற்றும் இந்நிகழ்வில் அதிநவீன தொழில்நுட்பங்களை இக்கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்படும்.

நிலையான மற்றும் நவீன நுட்பங்களை காட்சிப்படுத்தும் வகையில் சர்வதேச மற்றும் உள்ளூர் வர்த்தக கைத்தொமிலாளர்களுடன் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கண்காட்சியானது உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் நவீன நுட்பங்களின் ஊடாக செயற்திறனான உற்பத்திக்கு வழியேற்பட்டுள்ளது என செம்ஸ் குளோபல் வர்த்தக கண்காட்சியின் நிறைவேற்று பணிப்பாளர் எஸ்.எஸ். சர்வார் குறிப்பிட்டார்.



# கழா நோன்புகளை நிறைவேற்றுவோம்!

அல்லாஹ்வின் பேரருளால் புனிதமான ஷஃபான் மாதத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். ரஜப் மற்றும் ரமழான் மாதங்களுக்கு இடைப்பட்டதுவே ஷஃபான் மாதமாகும். இம்மாதத்தின் சிறப்பைப் பற்றி பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

உஸாமதிப்னு ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! ஷஃபானைப் போன்று வேறொரு மாதத்தில் நீங்கள் நோன்பு நோற்பதை நான் காணவில்லை' என்று கூறிய போது, நபியவர்கள், மனிதர்கள் ரஜப், ரமழான் ஆகிய இரு மாதங்களுக்கு மத்தியிலுள்ள ஒரு மாதம் (ஷஃபான்) விடயத்தில் பாராமுகமாக இருக்கின்றனர். அம்மாதத்தில் அகிலத்தாரின் அதிபதியாகிய அல்லாஹ்வின்பால் அமல்கள் உயர்த்தப்படுகின்றன. எனது அமல்கள் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உயர்த்தப்பட வேண்டுமென விரும்புகிறேன்' எனக் கூறினார்கள். (ஆதாரம் சுனனுந்அந்நஸயி).

ஷஃபானுக்கு அடுத்து வரும் மாதம் ரமழான் மாதமாகும். இதில் எமது முன்னோர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று எங்கள் மீதும் அல்லாஹுத ஆலா கடமையாக்கியுள்ளான். இருப்பினும் மார்க்கம் அனுமதித்த காரணங்களுக்காக சிலருக்கு நோன்பை விடுவதற்கு சலுகையும் வழங்கியுள்ளான்.

சலுகை வழங்கப்பட்டவர்கள் அந்நோன்பை அடுத்துவரும் ரமழானுக்கு முன்னர் நோற்றுக் கொள்ளுமாறு அல்லது அதற்குப் பகரமாக ஃபித்யாக் கொடுக்குமாறும் இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

இந்த சலுகைகளை பெற்றுக்கொள்ளக்கூடியவர்கள் எத்தகையவர்கள் என்பதையும் அவர்களுக்கான மார்க்க வழிகாட்டல்கள் யாது என்பதையும் அறிந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

அந்த வகையில், முதலாம் வகையினர், நோன்பு நோற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு கடுமையான நோய் வாய்ப்பட்டவர் ஆவார். மாதவிடாய், பிரசவம், (தொழுகையைச் சேர்த்து, சுருக்கித் தொழுவதற்கு முடியுமான தூர அளவு கொண்ட) பிரயாணம் போன்ற காரணங்களுக்காக நோன்பை விட்டவர்கள் போன்றோர் விடுபட்ட தங்கள் நோன்பை அடுத்துவரும் ரமழான் மாதத்திற்கு முன்னர் நோற்று கழாச் செய்து கொள்ள வேண்டும். அடுத்துவரும் ரமழானுக்கு முன்னர் நோன்பை நோற்றுக் கொள்வதற்கு சக்தியிருந்தும் கழா செய்யவில்லையெனில், அந்நோன்பைக் கழா செய்வதுடன், ஒரு வருடம் பிற்படுத்தியதற்காக பிரதான உணவான அரிசியிலிருந்து 600 கிராம் ஃபித்யாவாக ஏழைக்குக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு நோன்பைக் கழா செய்யாமல் வருடங்கள் கடந்து செல்லும் போது ஒரு வருடத்திற்கு ஒரு ஃபித்யா என்ற வகையில் ஃபித்யாவும் இரட்டிப்பாகும்.

இரண்டாம் வகையினரில் கர்ப்பிணித் தாய்மார்களும் பாலூட்டும் தாய்மார்களும் அடங்குவர். இவர்கள் தனக்கு மாத்திரம் அல்லது தனக்கும் தனது குழந்தைக்கும் ஏதும் ஆபத்துக்கள் ஏற்படும் என்று பயந்து நோற்காமல் விட்ட நோன்புகளை அடுத்துவரும் ரமழானுக்கு முன்னர் கழா மாத்திரம் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் ஃபித்யா கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்துவரும் ரமழானுக்கு முன்னர் நோன்பை நோற்றுக் கொள்வதற்கு சக்தியிருந்தும் கழா செய்யவில்லையெனில், அந்நோன்பைக் கழா செய்வதுடன், ஒரு வருடம் பிற்படுத்தியதற்காக பிரதான உணவான அரிசியிலிருந்து 600 கிராம் ஃபித்யாவாக ஏழைக்குக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு நோன்பை கழா செய்யாமல் வருடங்கள் கடந்து செல்லும் போது ஒரு வருடத்திற்கு ஒரு ஃபித்யா என்ற வகையில் ஃபித்யாவும் இரட்டிப்பாகும்.

அவ்வாறே கர்ப்பிணித் தாய்மார்கள் நோன்பு நோற்றால் கருச்சிதைவு போன்ற விளைவுகள் ஏற்படும் எனவும் பாலூட்டும் தாய்மார்கள் நோன்பு நோற்றால் தனது குழந்தைக்கு பாலில் குறைபாடு போன்ற விளைவுகள் ஏற்படும் எனவும் பயந்து நோன்பை விட்டால் அந்நோன்பை அடுத்துவரும் ரமழானுக்கு முன்னர் கழாச் செய்வதுடன் தான் உட்கொள்ளும் பிரதான உணவான அரிசியிலிருந்து 600 கிராம் ஃபித்யாவாக ஏழைக்குக் கொடுத்தல் வேண்டும்.

மூன்றாம் வகையினர், நோன்பை நோற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு நிரந்தர நோய் மற்றும் வயோதிபம் போன்ற காரணங்களுக்காக நோன்பை விட்டவர்களாவர்.

இவர்கள் ஒவ்வொரு நோன்புக்கும் பகரமாக உட்கொள்ளும் பிரதான உணவான அரசிலிருந்து 600 கிராம் பித்யாவாக ஏழைக்கு உணவளிக்க வேண்டும். இவர்கள் பித்யாவை பிற்படுத்தியதற்காக மேலதிகமாக பித்யாக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் அந்நோன்பை கழா செய்வதும் அவர்கள் மீது அவசியமில்லை.

எனவே, அடுத்து வரும் ரமழான் மாதத்தில் நற்காரியங்களில் அதிகமதிகம் ஈடுபடுவதற்கு முன்கூட்டியே நாம் தயாராக வேண்டும். இம்மாதத்தில் நபியவர்களைப் போன்று அதிகமதிகம் நோன்புகளை நோற்று பயிற்சிகளை எடுத்துக் கொள்ளும்போது ரமழான் மாதத்தில் நற்காரியங்களை அதிகமாகச் செய்வது மிக எளிதாகி விடுகிறது.


சென்ற ரமழானில் விடுபட்ட நோன்புகளை ஆண்களும், பெண்களும் கழாச் செய்துகொள்ள இம்மாதத்தைப் பயன்படுத்திக் கொள்வோம். வல்ல நாயன் அல்லாஹ் எம்மனைவருக்கும் தௌபீக் செய்யட்டும்.

**எ.எச்.எம்.மின்ஹாஜ் முப்தி...**
(காஷிபி, மளாஹிரி), நிந்தவூர்

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# அர்த்தபூர்வமான இறைவணக்கம்



இறைவணக்கம் குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு பார்வை கொண்டுள்ளனர். இஸ்லாத்தின் பார்வையில் வணக்கம் என்பது எது? வணக்கத்தை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் வைத்தே அனேகமானவர்கள் பார்க்கின்றனர். பள்ளிவாசலில் குனிந்து எழும்புவது மட்டுமே வணக்கம் என்று சிலர் கருதுகின்றனர். அத்தோடு நமது கடமை முடிந்துவிட்டது என்று வேறு சிலர் நோக்குகின்றனர்.இவ்வாறு வணக்கம் குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு பார்வையைக் கொண்டுள்ளனர்.

இஸ்லாத்தின் பார்வையில் வணக்கம் என்பது என்ன? என்பது தொடர்பில் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான். "நான் ஜின்களையும், மனிதர்களையும், என்னை வணங்க வேண்டும் என்பதற்காகவேயன்றி வேறு எதற்கும் படைக்கவில்லை" (அல் குர்ஆன் 51:56)

இவ்வசனத்தைப் படித்தபின் அனேக மானவர்களின் எண்ணங்களில் வெறும் தொழுகை, நோன்பு, ஜகாத் போன்றவை மட்டுமே வணக்கம் என்பதான ஒரு பிம்பமும் தவறான கற்பிதமும் தோன்றும். இவற்றை மட்டும் நிறைவேற்றுவதற்காக இறைவன் நம்மைப் படைத்தான் என்ற கேள்வியும் கூடவே எழும்.

இவைதான் வணக்கமென நாம் கருதும் தொழுகை, நோன்பு, ஜகாத் ஆகியவற்றுக்கு அன்றாட வாழ்வின் ஒருநாளில் எத்தனை மணி நேரங்களை நாம் ஒதுக்குகின்றோம் என்பதை யோசித்துப் பார்த்தாலே, வணக்கம் என்பது இவை மட்டுமல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

குறிப்பாக ஐவேளை தொழுகைக்காக 24 மணி நேரத்தில் 5 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்படுகிறது. மாதங்களைக் கணக்கிட்டால் 8.5 சதவீதம் மட்டுமே நோன்புக்காக ஒதுக்கப்படுகிறது. ஜகாத் என்பதோ வருடத்தில் ஒரு முறை மட்டும் தான். வாழ்நாளில் ஒரு முறை தான் ஹஜ்.

'என்னை வணங்க வேண்டும் என்பதற்காகவேயன்றி உங்களை நான் படைக்கவில்லை' என்ற இறைக்கூற்றின் அடிப்படையில் நோக்கும் போது 24 மணி நேரமும் தொழுது கொண்டோ, நோன்பு நோற்றுக்கொண்டோ அல்லது ஜகாத் கொடுத்துக்கொண்டோ தான் இருக்க வேண்டும்.

இது நடைமுறை சாத்தியமானதல்ல. இதனை அனைவரும் அறிவர். வணக்கம் என்பது தொழுகையும் நோன்பும் மட்டுமல்ல. ஓர் ஏழைக்கு உணவளிப்பதும் மத, இன, மொழி வேறுபாடு பார்க்காமல் கவலை சூழ்ந்த மனிதனின் கண்ணீர் துடைக்க உதவுவதும், அமானிதம் பேணி, அடுத்தவர் உரிமையில் கை வைக்காமல் இருப்பதும், நாவால் பிறர் மனதை நோகடிக்காமல் இருப்பதும், மலர்ந்த முகத்துடன் மக்களைச் சந்திப்பதும், தேவையற்றை கோபத்தையும் அவசியமற்ற ஆத்திரத்தையும் கட்டுப்படுத்திக் கொள்வதும் இலஞ்சம் வாங்க மறுக்கும் இலட்சியவாதியாக இருப்பதும், உண்மையை உரக்கச் சொல்வதும் வியாபாரத்தின்போதும், கொடுக்கல் வாங்கலின் போதும்நீதியுடனும்விட்டுக்கொடுக்கும்மனோபாவத்துடனும் நடந்துகொள்வதும் வணக்கம் தான்

உங்கள் வேலையையும் உங்களது பணியையும் ஈடுபாட்டுடனும் பொறுப்புடனும் நிறைவேற்றுவதும், ஊதியத்திற்கு உகந்த முறையில் உழைப்பதும், உண்ணும் உணவும் அருந்தும் பானமும் அனுமதிக்கப்பட்ட வழிமுறையினூடாக இருப்பதும், அணியும் ஆடையும், அத்தியாவசியப் பொருட்களும் அனுமதிக்கப்பட்ட முறையில் சம்பாதித்தவையாக இருப்பதும் வணக்கமேயாகும்.

இதைவிட ஆச்சரியம் என்னவென்றால் வாழ்க்கைத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவும் உழைப்பதும் சிலபோது வணக்கத்தில் கட்டுப்படும். வயலில் உழைப்பவரும், தொழிற்சாலையில் இயங்குபவரும், கடைவிரிக்கும் வியாபாரியும், அலுவலகத்தில் பணி செய்யும் ஊழியரும், துறைசார் நிபுணர்களும் தங்களுடைய பணிகளை வணக்கமாகவும், மறுமை வெற்றிக்கான ஆதாரமாகவும் மாற்றிக்கொள்ள முடியும்.

ஆயினும் அதற்கென சில நிபந்தனைகள் உள்ளன. ஒன்று: இஸ்லாம் அனுமதித்த தொழிலாக அது இருக்க வேண்டும். இரண்டு: நோக்கம் (நிய்யத்) நல்லதாக இருக்க வேண்டும். மூன்று: செய்வன திருந்தச் செய்ய வேண்டும். ஏனெனில் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், "உங்களில் ஒருவர் ஒரு செயலைச் செய்தால் அதைச் செவ்வனே செய்வதை இறைவன் விரும்புகின்றான்" என்று கூறினார்கள். (ஆதாரம்: பைஹகி).

அந்தப் பணியில் இறை வரம்புகளை மீறக்கூடாது. (மோசடி, திருட்டு, துரோகம் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது). இறைக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு அந்தப் பணி தடையாக இருக்கக் கூடாது. இந்த வரம்புகளை பேணும்போது யார் எப்பணி செய்தாலும் அப்பணியை வணக்கமாகவே இஸ்லாம் கருதுகிறது. ஒரு தடவை பலசாலியான ஒரு மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் கடந்து சென்றார். அப்போது தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! இவர் மட்டும் இறைப் பாதையில் போராட முன் வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?" என்று கூறினர்.

அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "அறிந்துகொள்ளுங்கள்! தமது குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இவர் உழைக்கச் செல்கின்றார் என்றால் இவரும் இறைப்பாதையிலேயே இருக்கின்றார். தமது வயதான பெற்றோரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இவர் உழைக்கச் செல்கின்றார் என்றால் அப்போதும் இவர் இறைப்பாதையிலேயே இருக்கின்றார். அடுத்தவரிடம் கையேந்தாமல் தமது சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உழைக்கச் செல்கின்றார் என்றால், அப்போதும் இவர் இறைப்பாதையிலேயே இருக்கின்றார். ஒருவர் பெருமைக்காகவும், பகட்டுக்காகவும் உழைக்கச் செல்கின்றார் என்றால் அப்போதுதான் இவர் சைத்தானின் பாதையில் இருக்கின்றார்" என்று கூறினார்கள். (ஆதாரம்: தபரானி)

இஸ்லாத்தின் பார்வையில் வணக்கம் இப்படித்தான் பட்டியலிடப்படுகிறதே தவிர, தொழுகையையும் நோன்பையும் மாத்திரம் வைத்தல்ல. இந்த வணக்கங்கள் தான் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும்.

**அப்பாஸ்...**

# இறையச்சத்தின் முன்மாதிரி

பாவம் செய்யாத மனிதர் யாரும் உண்டா? என்று வினவினால் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும். உலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் கள்ளம், கபடமில்லாத உள்ளத்துடன், பாவம் என்றால் என்னவென்றே தெரியாத நிலையில் தான் பிறக்கின்றன.

பருவம் அடைந்த பிறகு, எது தவறு என்று அறிவு சுட்டிக்காட்டும் பொழுதும் கூட மனிதர்கள் ஏன் தவறுகள் செய்கிறார்கள்? முதல் காரணம், தான் செய்வது தவறுதான் என்பதை தவறு செய்பவர்கள் உணர்வதில்லை. அதேநேரம் ஷைத்தான் தவறை செய்வதற்கான எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறான்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் பாவத்தைப் பற்றி வினவிய போது, "பாவம் என்பது உன் மனம் அச்சுறுத்துவதும், மக்களிடம் அதை வெளியாக்குவதை நீ வெறுப்பதுவும் ஆகும்" என்று கூறினாரர்கள்.



பொது வெளியில் மற்றவர்கள் பார்க்கும் வண்ணம் பெரும்பாலான தவறுகள் நிகழ்வதில்லை. சிலர் எவ்வளவு பாவங்கள் செய்தாலும், எதுவுமே தெரியாதவர்கள் போன்று நல்லவர்கள் போல நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இப்பிரபஞ்சத்தில் இறைவனுக்கு தெரியாத இரகசியங்கள் உண்டா? நம்முடைய ஒவ்வொரு செயலும், பேச்சும் அல்லாஹ்வின் கட்டளையின் படி அவரவர்களின் பதிவேட்டில் வானவர்களால் பதிவு செய்யப்படவே செய்கிறது.

தஹ்லபா என்னும் சிறுவன் நற்பண்புகள் உடையவராகவும், மற்றவர்கள் மீது கண்ணியம் உடையவராகவும் இருந்தார். நபி (ஸல்) அவர்கள் ஏவும் பணிகளைப் பாக்கியமாகக் கருதி செய்து வருபவராகவும் இருந்தார். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், ஒரு வேலை காரணமாக தஹ்லபாவை வெளியில் அனுப்புகிறார்கள். போகும் வழியில் ஒரு வீட்டின் முன்பாக தொங்க விட்டிருந்த திரைச்சீலை காற்றில் விலகிய போது, உள்ளே ஒரு பெண்மணி குளித்துக் கொண்டிருந்த காட்சியை தற்செயலாக அவர் பார்த்திட நேருகிறது. உடனே தன் பார்வையைத் திருப்பிக்கொண்ட தஹ்லபா அவ்விடத்தை விட்டு பயந்து ஓடுகிறார். தவறு செய்து விட்டோமோ என்று மனம் பதறி வெகுதூரம் ஓடுகிறார். நபியவர்களை இனி எப்படி நேருக்கு நேர் சந்திப்பது என்று மனம் உடைந்து புலம்புகிறார். அவர் எங்கு சென்றார் என்று யாருக்கும் தெரியவில்லை. தினமும் அவரைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடம் விசாரிக்கிறார்கள். அவரைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வர உமர் (ரழி) அவர்களை அனுப்புகிறார்கள். ஒரு வழியாக மலை அடிவாரம் ஒன்றில் அழுது, அழுது உடல் நலம் குன்றிய அவரைக் கண்டுபிடித்து தூக்கிக்கொண்டு வந்து அவருடைய வீட்டில் படுக்க வைக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தஹ்லபாவைப் பார்க்க வருகிறார்கள். படுக்கையில் இருந்து அவருடைய தலையைத் தூக்கி தன் மடியில் வைக்கிறார்கள். தஹ்லபா அழுது கொண்டே 'யா ரசூலுல்லாஹ் என்னுடைய தலையை கீழே கிடத்தி விடுங்கள். உங்களுடைய மடியில் தலை வைப்பதற்கு நான் அருகதை அற்றவன். நான் பெரிய பாவம் செய்து விட்டேன். அதனால் இறைவன் என்னைத் தண்டிப்பானோ என்று அச்சமாக இருக்கிறது' என்று புலம்புகிறார்.

உன்னுடைய பாவம் வானத்திற்கும், பூமிக்கும் இடைப்பட்ட அளவாக இருந்தாலும் அல்லாஹ் உன்னை நிச்சயம் மன்னிப்பான்' என்று நபி (ஸல்) அவர்கள் ஆறுதல் அளிக்கிறார்கள். மனம் வெம்பி அழுது கொண்டே இருக்கும் நிலையில் அவர் உயிர் பிரிகிறது. அவருடைய ஜனாஸாவை தூக்கிக் கொண்டு போகும்போது நபி (ஸல்) அவர்கள் தங்கள் குதிகால்களைத் தூக்கிக்கொண்டு நடப்பதைப் பார்த்து உமர் (ரழி) அவர்கள் 'யா ரசூலுல்லாஹ் நடப்பதற்கு விசாலமாக இடம் இருக்கும் பொழுது ஏன் இவ்வாறு நடக்கிறீர்கள்?' என்று வியப்புடன் வினவுகிறார்கள்.

'ஓ உமரே, தஹ்லபாவின் நல்லடக்கத்திற்கு பல்லாயிரக்கணக்கான வானவர்கள் வந்துள்ளார்கள். அதனால் என் கால் பதிக்க இடம் இல்லாமல் இவ்வாறு நடக்கிறேன்' என்று பதில் அளித்தார்கள்.

எப்படிப்பட்ட இறையச்சம் தஹ்லபாவுடையது. அவர் தெரிந்து பாவம் எதுவும் செய்யவில்லை. பார்க்கக் கூடாததை தற்செயலாக கண்கள் பார்த்ததற்கே இறைவனின் தண்டனைக்கு பயந்து உயிரையே விட்ட அவரின் இறையச்சம் மகத்தானது. இது போன்ற இறையச்சம் நம்மிடம் உள்ளதா? யாரும் இல்லையென்ற தைரியத்தில் தவறான ஒளிப்பதிவுகளை தொலைக்காட்சியிலும், சமூக வலைத்தளங்களிலும் எந்தவித கூச்சமும், குற்ற உணர்ச்சியும் இல்லாமல் இளைய தலைமுறையினர் மட்டுமின்றி, பெரியவர்களும் பார்த்து ரசிக்கும் ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தவறு செய்வது மனிதர்களின் இயல்பு என்று கூறலாம். ஆனால், தவறு செய்து, உடனடியாக அதை உணர்ந்து இறைவனிடம் மன்றாடி மன்னிப்பு கேட்பதை அல்லாஹ் விரும்புகிறான், அவர்களை மன்னித்தும் விடுகிறான்.

செய்த தவறுகளுக்கு எல்லா நிலைகளிலும் மன்னிப்பு கேட்கக் கூடியவர்களாக இருப்போம்! எல்லா விதமான பாவங்களில் இருந்தும் விலகி இருந்து நரக நெருப்பில் இருந்து பாதுகாப்பு பெறுவோம். நாம் தனிமையில் இருக்கும் போது நம்முடைய உள்ளத்தில் இறையச்சத்தோடு, மெய் நடுங்கி கண்ணீர் விட்டு இரு கரம் ஏந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால், நிச்சயமாக நமது பாவம் மன்னிக்கப்படும்.

**அபூ மதீஹா...**



# உண்மையே நன்மை தரும்

ஏக இறைவனான அல்லாஹ்வின் படைப்புகளில் சிறந்த படைப்பு மனித இனம் ஆகும். அந்த மனித இனத்திற்கு 'தன்னை மட்டும் வணங்க வேண்டும்' என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். மனித இனத்தை நேர்வழிப்படுத்த இறைவன் தூதர்களையும் அடையாளம் காட்டி இருக்கின்றான்.

அந்த தூதர்கள், மனிதன் தற்போது வாழும் இம்மை வாழ்வை விட இறைவனின் அரியாசனத்தின் கீழ் வாழும் மறுமை வாழ்வின் சிறப்புகளை எடுத்துக்கூறியுள்ளனர். சிறப்பு மிகுந்த அந்த மறுமை வாழ்வுக்கு நம்மை எப்படி தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் அல்லாஹ்வின் திருத்தூதர்கள் விளக்கிக் கூறியுள்ளனர்.

மனிதன் இம்மையில் எப்படி வாழ வேண்டும் என்று இறைவன் கூறியதில் முக்கியமானது, உண்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். குறிப்பாக முதலில் தன்னை படைத்த இறைவனுக்கு உண்மையாக நடந்து கொள்ள வேண்டும். இறைவன் எப்படி எல்லாம் தன்னை வணங்க வேண்டும், எப்படி எல்லாம் வாழ வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கின்றானோ அதற்கு ஏற்ப மனிதன் உண்மையுடன் வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் சபலங்களுக்கும், ஆசைகளுக்கும் அடிமையான மனித மனம் உண்மையில் இருந்து விலகி இருக்கவே விரும்புகிறது. இந்த உலக வாழ்க்கை குறித்து அல்லாஹ்த ஆலா இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

"இன்னும் மனிதர்களில் "நாங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாள் மீதும் ஈமான் (நம்பிக்கை) கொள்கிறோம்" என்று கூறுவோறும் இருக்கின்றனர். ஆனால் (உண்மையில்) அவர்கள் நம்பிக்கை கொண்டோர் அல்லர்'. (அல் குர்ஆன் 2:8).

"இவ்வாறு கூறி அவர்கள் அல்லாஹ்வையும், ஈமான் (இறை நம்பிக்கை) கொண்டோரையும் ஏமாற்ற நினைக்கின்றார்கள். ஆனால் அவர்கள் (உண்மையில்) தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கிறார்களே தவிர வேறில்லை. எனினும் அவர்கள் (இதை) உணர்ந்து கொள்ளவில்லை. (அல் குர்ஆன் 2:9).

"மனிதர்களே! நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். இந்த உலக வாழ்க்கை எல்லாம் வீண் விளையாட்டும், வேடிக்கையும், வெறும் அலங்காரமும் தான். தவிர, உங்களுக்கிடையில் ஏற்படும் வீண்பெருமையும், பொருளிலும், சந்ததியிலும் அதிகரிக்க வேண்டும் என்ற வீண் எண்ணமும் தான். இதன் உதாரணமாவது, ஒரு மழையின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது. அந்த மழையினால் முளைத்த பயிர்கள் நன்கு வளர்ந்து விவசாயிக்குக் களிப்பை உண்டுபண்ணிக் கொண்டிருந்தன. பின்னர், அவை மஞ்சனித்துக் காய்ந்து, சருகுகளாகி விடுவதைக் காண்கின்றான். இந்த உலக வாழ்க்கையும் அவ்வாறே இருக்கின்றது. மறுமையிலோ அவர்களில் பலருக்குக் கொடிய வேதனையும், பலருக்கு அல்லாஹ்வின் மன்னிப்பும், அவனது திருப்பொருத்தமும் கிடைக்கின்றன. ஆகவே, இந்த உலக வாழ்க்கை மனிதனை மயக்கும் சொற்ப இன்பமேயன்றி வேறில்லை". (அல் குர்ஆன் 57:20).

ஏக இறைவனான அல்லாஹ்வை உண்மையுடன் வணங்கி, அவன் காட்டிய வழியில் வாழ்ந்து வருபவர்களுக்கு மறுமையில் சொர்க்கத்தில் இடம் உண்டு என்று அல்லாஹ் உறுதியாக கூறுகின்றான்.

"எவர் ஈமான் (இறையச்சம்) கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களை நாம் (அல்லாஹ்) சுவனபதிகளில் நுழைய வைப்போம். அவற்றின் கீழே ஆறுகள் சதா ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் என்றென்றும் தங்கி இருப்பார்கள் அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. இன்னும் வார்த்தைகளில் அல்லாஹ்வைவிட உண்மையானவர்கள் யார்? (அல் குர்ஆன் 4:122).

இறைவன் காட்டிய வழியில் உண்மையுடன் நடந்து, அதற்கு பரிசாக இறைவன் தரும் சொர்க்க வாழ்வை அடைந்து கொள்ள உறுதி கொள்வோம்.

**அப்துல்லாஹ்...**



# கொக்குத்தொடுவாயில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள்: 1994–1996 காலத்துக்குரியவை

## ராஜ்சோமதேவ அறிக்கையில் உள்ளதென்கிறார் சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன்

கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 1994 முதல் 1996 காலப் பகுதிக்குரியவையென, ராஜ் சோமதேவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் தெரிவித்தார்.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பான வழக்கு நேற்று (22) முல்லைத் தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி.கே. நிரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது எடுக்கப்பட்ட மனித எச்சங்களிலிருந்து பிறிதாக எடுக்கப்பட்ட சகல பிற பொருட்கள் தொடர்பான பேராசிரியர் ராஜ் சோமதேவ அறிக்கை, நேற்று நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையின் அடிப்படையில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

பகுப்பாய்வின்படி இது 1994 ஆம் ஆண்டுக்கு முற்படாததும் 1996 ஆம் ஆண்டுக்கு பிற்படாதது மான காலப்பகுதியை கொண்டிருக்கலாமென பல பக்க அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு இடைக்கால அறிக்கையாக பார்க்கப்படுகிறது.

அத்தோடு மீண்டும் எஞ்சிய எலும்புக்கூட்டு தொகுதியை அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள், அனேகமாக மார்ச் 04 இல், ஆரம்பிக்கப்படவுள்ளன.

இருப்பினும், அமைச்சினால் இதற்கான நிதி வழங்கப்படும் பட்சத்திலே அகழ்வு நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.இதனால், மீண்டும் மார்ச் மாதம் 04 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வைத்தியர்களின் அறிக்கையின் மனித எச்சங்களின் வயது, பால், இறப்புக்கான காரணம் போன்றவை இன்னும் வெளிவராமல் நிலுவையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாங்குளம் குறூப் நிருபர்

## இளைஞர், யுவதிகளுக்கு...

இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் இயங்கி வருகிறது. மோட்டார் இயந்திரவியல், தகவல் தொழில்நுட்பம், முப்பரிமாண வடிவமைப்பு 3D,பாலர் பாடசாலை ஆசிரியர் பாடநெறி, நவீன தொழில்நுட்பப் பாடநெறி, அழகுக்கலை நிபுணர் பாடநெறி, மொழிப் பாடநெறிகள் உள்ளிட்ட, நவீன உலகிற்கு தேவையான பல்வேறு பாடநெறிகள் இங்கு நடத்தப்படுகின்றன.

பாடநெறிகள் நடத்தப்படும் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களின் நலன்புரி மற்றும் பிற நலன் தொடர்பிலான விடயங்கள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி மாணவர்களுடன் சிநேகபூர்வமாகவும் கலந்துரையாடினார்.மாணவர்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக இலங்கையின் இளைஞர் யுவதிகள் முன்னோக்கிச் செல்லக் காணப்படும் வாய்ப்புகள் குறித்து இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, தற்போது டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னெடுப்புக்கள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதன்போது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் எனவும் தெரிவித்தார்.

முன்பள்ளி கற்கைநெறியை மேற்கொண்டு சொந்தமாக முன்பள்ளியொன்றை நடாத்த எதிர்பார்ப்பதாகவும் அதற்கு ஒழுங்கான முறைமையொன்றை உருவாக்கித் தருமாறும் முன்பள்ளி கற்கைநெறியை கற்கும் மாணவியொருவர் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த ஜனாதிபதி, முன்பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டத்துடன் இணைந்ததாக இந்தக் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

அதனையடுத்து தொழில் பயிற்சி நிலையத்தின் விசேட விருந்தினர்களுக்கான பதிவேட்டில் குறிப்பை பதிவு செய்த ஜனாதிபதி, மாணவர்களுடன் குழுப் புகைப்படம் எடுக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

பின்னர் மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதுடன், மாணவர்களின் செல்பி புகைப்படங்களிலும் இணைந்து கொண்டார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மஹேஷன், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரும் பணிப்பாளருமான பசிந்து குணவர்தன,இளைஞர் மற்றும் நிலைபெறு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர, லலித் அத்துலத்முதலி தொழில் பயிற்சி நிலையத்தில் ஆசிரியர்கள் குழாம், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இதில் இணைந்திருந்தனர்.

## கொலையா விபத்தா...

பெர்னாண்டோ எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இது தொடர்பான விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமரர் சனத் நிசாந்தவுக்கான அனுதாப பிரேரணையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் மரணம் கொலையா? அல்லது விபத்தா? என்பதில் பாரிய சந்தேகம் உள்ளது.அதனால்தான் அவரது மனைவி குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த வகையில் இந்த முறைப்பாட்டை துரிதமாக விசாரணை செய்து உண்மையை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். இதில் தொடர்புள்ள குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் விமர்சிப்பது தற்போது புதிய கலாசாரமாக காணப்படுகிறது. 225 பேரில் மூன்று பேரைக் கொண்டவர்கள் முழு அரசியல் கட்டமைப்பையும் விமர்சிக்கிறார்கள்.அரசியல் கலாசாரத்துக்கு எதிரான கருத்துக்களையும் குறிப்பிடுகிறார்கள்.

சனத் நிஷாந்த கௌரவமானவர், பண்பாளர், மனிதாபிமானமிக்கவர். பாராளுமன்றத்தில் சிறந்த முறையில் செயற்பட்டவர். அவருக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் அவரது இறப்புக்கு வருகை தந்த பெருந்திரளான மக்கள் அந்த குற்றச்சாட்டுக்களை பொய்யாக்கினர்.

சனத் நிஷாந்த உயிருடன் இருந்த போதும் சமூக வலைத்தளங்கள் அவரை கடுமையாக விமர்சித்தன.அவர் உயிரிழந்த பின்னரும் கடுமையாக விமர்சிக்கின்றன.அவரை கழுதை என்று விமர்சித்ததுடன் புத்தளம் மாவட்ட மக்களையும் கழுதைகள் என்று விமர்சிக்கும் மனநிலையிலேதான் ஊடகங்கள் இருந்தன.

சனத் நிஷாந்தவை போன்று பெரும்பாலான அரசியல்வாதிகள் இறக்க வேண்டும் என்று மூன்று பேரைக் கொண்டுள்ள அரசியல் தரப்பினர் நினைக்கின்றனர் .பொய்யான கருத்துக்களை வெளியிட்டு மக்களை தவறாக வழிநடத்துகின்றார்கள். இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிகளவிலான தமிழ், சிங்கள...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஊடகவியலாளர்களுக்கான தெளிவூட்டல் மற்றும் தொழில் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் இந்த வேலை திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அமைச்சு தொடர்பான அறிவிப்பை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி வேலைத் திட்டம் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்துவதற்கு மேலதிகமாக சமூக சகவாழ்வை மேம்படுத்துவது, குரோத மனப்பான்மையுடனான விடயங்களை எதிர்ப்பது, பிரதேச ஊடகவியலாளர்களை தெளிவூட்டுவது, சமூக பொறுப்புக்களை புரிந்து ஊடக சம்பிரதாயங்களை நிலை நாட்டுதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இதற்கான இனக்கப்பாட்டையும் இதன் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் இந்த வேலை திட்டம் வடக்கு, கிழக்கு,மேல் மாகாணம், வடமத்திய, வடமேற்கு, தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் நடத்தப்பட்டுள்ளன. 377 ஊடகவியலாளர்கள் இந்த வேலைத் திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இந்த வேலைத் திட்டத்தில் பலரதும் அர்ப்பணிப்பான உழைப்பு பெறப்பட்டுள்ளதுடன் அதனை நடத்துவதற்கு நிபுணர்கள் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஆசிய பிராந்திய ஊடக ஆலோசகர் கலாநிதி ரங்க கலன்சூரிய, ஊடகத்துறை அமைச்சின் ஆலோசகர் மொஹான் சமர நாயக்க, பத்திரிகை பேரவையின் தலைவர் மஹிந்த பத்திரன, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் சுதர்சன குணவர்த்தன, தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் தலைவர் ஆணையாளர் ஜகத் லியன ஆராய்ச்சி சுரேஷ் நாலக்கு குணவர்தன திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் மதுஹாசினி கலகெதர, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரிய பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், உதவி தகவல் பணிப்பாளர் ஹர்ஷ அபேகோன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மந்தனா இஸ்மாயில் ஆகியோரும் இந்த நிபுணர் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில் வடக்குக்கான இந்த வேலைத் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் சுற்றாடலில் இரண்டு தினங்கள் நடைபெற்றன. இதன் போது மாவட்ட செயலாளர் சிவ பாலசுந்தரம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் ராஜாராம் ஆகியோர் விஷேட உரையாற்றினர். இந்த நிகழ்வில் 46 தமிழ் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். அனைத்து உரைகளும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன. கிழக்கு மாகாணத்திற்கான செயலமர்வு திருகோணமலை ஹோட்டல் சுற்றாடலில் இடம்பெற்றது.இதில், 46 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கட்சிக்குள் பதவிப் போட்டியிருப்பின்...

யாழ். கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போது கட்சி விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவி பேசுபொருளாக அமைந்துள்ளது. இவ்வருடம் தேர்தல் காலம் என்பதால் இப்போது அதைப் பற்றியே பலரும் பேசி வருகின்றனர்.

பலராலும் பரிகசிக்கப்படுகின்ற நிலைக்கு வந்துள்ளோம்.

இதில் யார் சரி,யார் பிழை என்பதற்கு அப்பால் போட்டிகள் தவிர்க்கப்பட வேண்டும். கட்சி பிளவுபடவிடாமல் செயற்பட வேண்டும்.

கட்சிக்குள் எந்த பதவிக்கும் போட்டி இருக்குமானால் அதில் நான் பங்குகொள்ளமாட்டேன்.

கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாகமொன்று தெரிவு செய்யப்படுகின்ற போது கட்சியின் அனைத்து பொறுப்புக்களும் தலைவரிடமே இருக்கும்.

## ஜீவன் மீதான காழ்ப்புணர்ச்சியே...

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சபையில் முன்வைத்த கருத்துக்கு, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் பாரத் அருள்சாமி கண்டனம் தெரிவித்தே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு இளம் அரசியல் தலைவராக மக்களுக்கான அரசியலை வெற்றிகரமாக முன்னெடுத்து, மக்களின் கோரிக்கைகளை அமைச்சர் ஜீவன் தொண்டமான் நிறைவேற்றி வருகிறார்.இதனால், அரசியலில் தாம், காணாமல் போய்விடுவோம் என்ற எண்ணத்தில் அவர் மீது சில எதிரணி மலையக அரசியல்வாதிகள் விமர்சனக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

காழ்ப்புணர்ச்சி, வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

வீட்டுரிமையையும், காணி உரிமையையும் வைத்து இதுவரை அரசியல் நடத்தி வந்தவர்களுக்கு இவ்விரண்டு உரிமைகளையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொடுத்துவிட்டால், தாம் அரசியலில் அநாதையாகிவிடுவோம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால்தான் இவ்வாறு பேச ஆரம்பித்துள்ளனரெனவும் அவர் தெரிவித்தார்.

## ஆரம்பப் பிரிவின் 17 இலட்சம்...

போஷாக்கு குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அண்மையில் தெரிவித்திருந்தது.

இதனையடுத்தே அரசு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதற்கமைய, தரம் ஒன்று முதல் ஐந்து வரை கல்வி பயிலும் 17 இலட்சம் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படவுள்ளது. இந்த உணவு வழங்கும் திட்டத்துக்காக 16.6 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறையின் அடிப்படையில், பொது சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையில் உணவு தயாரிக்கப்படுமெனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## காலி முகத்திடல் நிலப்பரப்பை... (03ஆம் பக்கத் தொடர்)

விஜித ஹேரத் எம். பி கடந்த (20) பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், காலி முகத்திடல் நிலப்பகுதியை கசினோ சூதாட்ட நடவடிக்கைகளுக்கு வழங்க நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,'விசும்பாய' கட்டிடத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவது பிரச்சினைக்குரியது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அவரது இத்தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவில் பெற்றுக்கொள்வதற்காக 2022 நவம்பர் 14 இல், இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கிணங்க வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கோரிக்கைகள் 2023 ஜனவரி19 இல், இடம்பெற்ற நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை கூட்டத்தில் ஆராயப்பட்டன.

பொருளாதாரம்,சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி பொருத்தமான முதலீடுகளை மாத்திரம் தெரிவு செய்ய உரிய வழிமுறைகளை பின்பற்றுமாறு இதன் போது ஆலோசனை வழங்கப்பட்டது.

அந்த வகையில் காலி முகத்திடலிலுள்ள நிலப்பரப்பு வெளிநாட்டு முதலீடுகளுக்கு வழங்கப்படவில்லை. எனினும், கொழும்பு 03 பாலதக்ஷ மாவத்தையிலுள்ள ஒரு ஏக்கர் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்ய பாலி இன்வெஸ்ட்மென்ட் தனியார் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கமைய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியை நேரடியாக வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளுக்கு அமைய, இம்மாதம் (16) புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை,நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் கடந்த காலங்களில் வலியுறுத்தினார்கள்.பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்ததை குறிப்பிட வேண்டும்.

பொருளாதார நெருக்கடியின் போதே, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருகை தருகிறார்கள்.முதலீடுகளை முன்னெடுக்கிறார்கள். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்தியாவில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படுகின்றன.அவ்வாறான நிலைக்கு நாமும் செல்லாவிடில் வெளிநாட்டு முதலீடுகளை இழக்க நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

(23.02.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைத்து வருமானம் உயரும் .

**ரிஷபம் :**
ஊர் மற்றும், இடமாற்றம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். தொழிலுக்காக கூடுதல் முதலீடு செய்ய பணம் இல்லையே என்ற கவலை மாறும்.

**மிதுனம்:**
நினைத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள். இடம் பூமி வாங்குவதில் இருந்த தடை அகலும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு.

**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும் .

**சிம்மம்:**
உத்தியோகத்தில் உங்களுக்கு முக்கிய பொறுப்புக்கள் கிடைக்கும். அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு மேலிடத்தில் இருந்து ஆதரவு திருப்தி தரும்.

**கன்னி:**
பிள்ளைகளின் கல்யாணம் முயற்சி கைகூடும். கொடுக்கல் வாங்கல்கள் சீராகவும் சிறப்பானதாகவும் இருக்கும்.

**துலாம்:**
பெண் பிள்ளைகள் வழியில் சுபச்சடங்குகள் ஏற்படலாம். கல்யாணம், காதுகுத்து போன்ற காரியங்களில் இருந்த தடை அகலும்.

**விருச்சிகம்:**
விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் விரயங்களை சுப விடயங்களாக மாற்றிக் கொள்ளலாம்.

**தனுசு:**
மகிழ்ச்சி காண்பீர்கள். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் நேரம் இது. புண்ணிய தளங்களுக்கு சென்று தரிசிக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:**
இடம் ,பூமி சேர்க்கை உண்டு, மங்கல ஓசை மனதில் கேட்கும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:**
விரயங்கள் அதிகரிக்கும் நேரம் என்பதால் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்யுங்கள்.

**மீனம்:**
வாங்கிய இடத்தை கொடுத்து விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது மீண்டும் இடம் வாங்கும் யோகம் உண்டு.

## புதிய கடற்றொழில்... (03ஆம் பக்கத் தொடர்)

செய்யும். புதிய கடற்றொழில் வரைபை உருவாக்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் மற்றும் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய அரப்பணிப்பை தாம் பெரிதும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில்கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நயனா குமாரி சோமரத்ன Food and Agriculture Organization அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வரிசை நெருக்கடியை... (03ஆம் பக்கத் தொடர்)

புதிய டிஜிட்டல் அடையாள அட்டையை ஆட்கள் பதிவு திணைக்களத்தின் ஊடாக வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கண்ணிவெடி அகற்றல்... (03ஆம் பக்கத் தொடர்)

அமுல்படுத்துவதற்கு திட்ட முகாமைத்துவ பிரிவு தேவையில்லை எனவும், 2027 ஆம் ஆண்டு வரை வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமாயின், வருடாந்தம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் பாதிப்பு கண்ணிவெடி தடை உடன்படிக்கையின் (APMBC) பிரகாரம், 2028 ஜூன் 01 ஆம் திகதிக்குள் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணியை முடிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

ஜெனிவா சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் மத்திய நிலையத்தின் ஆதரவுடன் கண்ணிவெடிகள் தொடர்பான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் 2023 முதல் 2027 வரை இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை மூலோபாய வேலைத் திட்டத்தை தயாரித்துள்ளது. இதன் கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் நெருக்கமாக பணியாற்ற அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

2002 ஆம் ஆண்டு முதல் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டுக்குள் செயற்பட்டு வந்ததுடன், 2010 ஆம் ஆண்டு 'கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம்' ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நேரடி பங்களிப்பை வழங்குகிறது மற்றும் அது இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான நிலக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு மூலம் செய்யப்படுகிறது. மேலும், Halo Trust மற்றும் Mag ஆகிய இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் Dash மற்றும் SHAF ஆகிய இரண்டு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து தனி நபர் பாதிப்பு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும் 15 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட உள்ளன.

2023 ஆம் ஆண்டு 5.2 சதுர கிலோமீற்றர் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகவும், 18,064 தனி நபர் பாதிப்பு கண்ணிவெடிகள், 51 யுத்தகள கனரக தாங்கிகளை அழிக்க வல்ல கண்ணிவெடிகள் மற்றும் 15,070 வெடிக்காத குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் மீள்குடியேற்றத்திற்காகவும் அவர்களின் வாழ்வாதாரத்திற்காகவும் காணிகள் விடுவிக்கப்பட்டதாக கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க...

தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான பிரேரணைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, சுமார் ஆயிரம் வான்களையும், கார்களையும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பிரேரணைக்கு அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி கிடைக்குமென எதிர்பார்ப்பதாக, ஹரின் பெர்ணான்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை புதிய கொள்கையின் கீழ் இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை

## பிரதம அதிதியாக அமைச்சர் அலிசப்ரி பங்கேற்பு



கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை 24ஆம் திகதி பி. ப. 6.30 மணிக்கு த கிரேண்ட் கண்டியன் ஹோட்டலில் தலைவர் எம். எச் சலீம்டீன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். கௌரவ அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, விசேட விருந்தினர்களாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் எம். ஐ. எம். ரிஸ்வி முப்தி, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்த, பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் பதில் தூதுவர் வாஜிட் ஹஸன் ஹஸ்ஃமி, பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எச். ஏ. ஹலீம், ரவூப் ஹக்கீம் ஆகியோர்களுடன் முன்னாள் கண்டி மாநகர முதல்வர் கேசர சேனநாயக, சந்தன தென்னகோன், கண்டி மாநகர சபையின் ஆணையாளர் இசான் விஜயதிலக, முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட் ஏ. எம். பைஸல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் ஆலோசனை சபை உறுப்பினர் எம். முஸ்லிம் சலாஹுதீன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

**முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் வரலாறு**

கண்டியில் முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகள் நீண்ட வரலாற்றை கொண்டுள்ளன. ஆரம்ப காலம் முதல் எமது ஆதிக்குடிகள் இங்கு குடியேறியமையை இதற்கு முக்கிய காரணமாகக் கூறலாம். அந்தக் காலத்தில் இருந்த முஸ்லிம்கள் வியாபாரத்தில் நம்பிக்கை, நாணயத்துடன் பல்லின மக்களிடையே மிகுந்த விசுவாசத்துடன் நடந்துகொண்டனர் என்றால் மிகையாகாது.

1993ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த முஸ்லிம் வர்த்தக சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், கண்டி பிரதேசத்திலிருந்த மேமன் சமூக வர்த்தகர்கள் அதில் அதிகமாக அங்கத்துவம் பெற்றிருந்தனர்.

1948 ஆம் ஆண்டில் 9 முக்கிய வர்த்தகர்கள் சேர்ந்து கண்டி, திருகோணமலை வீதியில் காணப்பட்ட 279 ஆம் இலக்க கட்டடம் அமைந்துள்ள காணியைக் கொள்வனவு செய்து, அதனை மத்திய மாகாண முஸ்லிம் லீக்கிற்கு வக்பு செய்தனர். இந்த இடத்தில்தான் தற்போது ஜின்னா ஞாபகார்த்த மண்டபம் எனும் பெயரில் சங்கம் இயங்கி வருகின்றது. 1990 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் முஸ்லிம் வர்த்தக சங்கம் பல்வேறு சவால்ககள சந்தித்து வந்தது. இச்சந்தர்ப்பத்தில் காலத்தின் தேவையை உணர்ந்த கண்டி நகரில் பிரபல வர்த்தகர்களில் ஒருவராகத் திகழ்ந்த அல்ஹாஜ் ஏ.எம். இஸ்மாயில் அவர்கள் சமூக சிந்தனையாளர்களுடன் சேர்ந்து தனது வியாபார நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தார்.

அதன் பின்னர் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் முதலாவது நிர்வாகக் கூட்டம் 1993.06.27 ஆம் திகதி கண்டி ஹனபி பள்ளிவாசலில் அதன் அப்போதைய பேஷ் இமாம் அல்ஹாஜ் மௌலவி சலாஹுதீன் அவர்களின் ஆசியுடன் நடைபெற்றது.

இதில் ஹாஜிகளான ஏ.எம். இஸ்மாயில், என்.ஏ.எஸ்.முபாரக், எம்.ஐ.எல்.எம்.ஹுசைன், ஏ.ஏ. எம். யூசுப், எம்.எச்.சலீம்தீன், எம். உகவஸ், எம்.எம்.நியாஸ், எஸ். எஸ்.ஜே.ஜே.ஆப்தீன், எப்.எம். அக்பர், ஏ.எம்.ஏ.மஜீத், ஜே.ஏ.எம். இப்றாஹீம், ஜே.ஏ.எம். பாரூக், ஏ.ஜே.எம்.முபாரக், என்.எம்.எம். நஹீம், எஸ்.எம்.எம்.கபஸல், எச். எம்.சபீக் உட்பட 16 பேர் கலந்துகொண்டனர். இதன்போது 1993.07.11 ஆம் திகதி முஸ்லிம் வர்த்தக சங்கத்திற்கான

பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் சுமார் 300 பேர் வரை பங்குபற்றியதுடன், அதில் அல்ஹாஜ் எச்.எல்.எம். நிஸாம் தலைவராகவும் எம்.எச்.சலீம்தீன் செயலாளராகவும் மொஹமட் உவைஸ் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் சட்டத்தரணி எம். நசீர் சட்ட ஆலோசகராகவும் ஏ.ஜே. எம். முபாரக் கணக்காய்வாளராகவும் எச்.எல்.எம். மன்சூர் பிரசார செயலாளராகவும் ஐ.ஏ. ரசாக் நிர்வாக செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், மொத்தமாக 21 நிர்வாக அங்கத்தினர்கள் இதன்போது தெரிவாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் சங்கத்திற்கு என புதிதாக யாப்பொன்றும் உருவாக்கப்பட்டது. அதன் முக்கிய அம்சங்களாவன –

(அ). கண்டியிலும் கண்டியை அண்மித்துள்ள வர்த்தகர்கள் மற்றும் கைத்தொழில் துறையினரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவி செய்தல்.

(ஆ). வர்த்தகர்களின் நலன்புரி விடயங்களில் ஈடுபடுதல்.

(இ). வர்த்தக சமூகத்தினரின் ஒற்றுமையை பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளல்.

**முக்கிய திட்டங்கள்**

இவ்வமைப்பு பல்வேறு வகையான திட்டங்களை மேற்கொண்டு வருவதுடன்,

வர்த்தகர்களின் நன்மை கருதி துறைசார் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகளை நடத்துதல், விற்பனைத் துறை மேம்பாட்டிற்கான செயற்றிட்டங்கள், தொழில்நுட்பத்துறை (IT) மேம்பாட்டிற்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பெண்களுக்கான தையல் வகுப்புகளை நடத்துவதற்கு வழிவகை செய்கொடுத்தல், இயற்கை அனர்த்தங்களின் போது முக்கியமான உதவி ஒத்துழைப்புகளை சகல சமூகங்களுக்காகவும் பெற்றுக்கொடுத்தல் போன்ற திட்டங்களை முஸ்லிம் வர்த்தக சங்கம் செய்து வருகின்றது.

குறிப்பாக கடந்த Covid19 நோய் காலப்பகுதியில் தடுப்பூசி மருந்துகளை பெற்றுக்கொடுத்தமை, கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள் மற்றும் சித்திலெப்பை மகா வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்தமை, முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் என்பனவும் வர்த்தக சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் கண்டியில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளுக்கு முஸ்லிம் வர்த்தக சங்கம் சார்பாக பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தல், உதாரணமாக – கண்டி நகர அபிவிருத்தி, எசல பெரஹரா வைபவம், வெசாக் வைபவம், போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் போன்றவற்றிற்காக உதவி ஒத்துழைப்புகளை நல்குதல் என்பவற்றை சுட்டிக்காட்டலாம்.

கடந்த 30 வருடங்களில் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் நிர்வாகத்தில் பொறுப்புகளை வகித்த தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் என பலரும் அர்ப்பணிப்புடன் முஸ்லிம் வர்த்தக சமூகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்காகவும் சேவையாற்றியுள்ளனர்.

**வர்த்தக முன்னெடுப்புகள்**

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கமானது வர்த்தகத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் வெளிநாடுகள் உட்பட உள்ளூரின் பல்வேறு பகுதிகளுக்கும் அதன் தூதுக்குழுக்களை அனுப்பியுள்ளது. குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், மலேஷியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கும் உள்ளூரில் நீர்கொழும்பு, புத்தளம், யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களுக்கும் சங்கத்தின் சார்பாக தூதுக்குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எமது வர்த்தக சங்கம் மூலமாக சிறந்த வளவாளர்களைக் கொண்டு வர்த்தக மேம்பாடு பற்றிய கருத்தரங்குகள், வரிசம்பந்தமான விழிப்புணர்வுகள், வர்த்தக செயற்பாடுகளை விரிவுபடுத்தல், இஸ்லாமிய நிதி, வர்த்தகப் பாதுகாப்பு, முன்மாதிரியான இஸ்லாமிய வியாபாரம் போன்ற பல்வேறு அம்சங்களில் கருத்தரங்களும் விரிவுரைகளும் நடத்தப்பட்டுள்ளன. (2017 Sales Training Programe நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது).

எமது வர்த்தக சமூகத்தினரின் முதலீட்டுக் குறையை நிவர்த்தி செய்து வைக்கும் நோக்கில் அங்கத்தவர்களிடம் இருந்து நிதியை திரட்டி உதவிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மூலம் வர்த்தக சமூகத்தினர் பயனடைந்து வருகின்றனர். முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் சம்பந்தமாக தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நிதியமைச்சர், உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண உள்ளூராட்சி அதிகாரிகளையும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் பலமுறை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். மத்திய மாகாண வர்த்தக சபை (Chamber of Commerce) அதிகாரிகளுடன் நல்லிணக்கத்துடன் உறவாடி, சமூக உறவினைப் பேணுவதுடன், இருதரப்பும் பயன்பெறும் விதமாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய மாகாண வர்த்தக சபையில் முஸ்லிம் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் நால்வர் பணிப்பாளர்களாக தற்போது செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பல்லின சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவதில் இச்சங்கம் முன்னின்று செயற்பட்டுள்ளது

வெளிவிவகார அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி (PC)



கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 30ஆவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாக என்னை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இச்சங்கத்திற்கு மூன்று தசாப்த காலம் என்பது ஒரு மைல் கல்லாகும். உண்மையிலேயே இச்சங்கம் சமூகத்தின் வளர்ச்சியிலும் வர்த்தக மேம்பாடு தொடர்பான விடயங்களிலும் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்துள்ளன. அவை பாராட்டத்தக்கது. இந்தச்சங்கம் பல ஆண்டுகளாக வர்த்தகத்தை மட்டும் வளர்க்கவில்லை. பல்லின சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. சமூக சேவையின் வாயிலாக மக்களுக்கு எண்ணற்ற உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் மக்கள் மத்தியில் நல்ல ஆதரவையும் நற்பெயரையும் இச்சங்கம் பெற்றுள்ளது.

இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாக ஒரு நெருக்கடியான சூழல் நிலவி வருகிறது. அது பொருளாதார நெருக்கடியாக இருந்தாலும் சரி கடினமான நிகழ்வுகளாக இருந்தாலும் சரி நாம் முன்னெப்போதையும் விட ஒற்றுமையாக இருக்க வேண்டும். நமது நாடு பல்லின மற்றும் பல மத கலாசாரங்களை கொண்ட நாடாகும். சகல விடயங்களிலும் நாம் ஒன்றுபட்டு இருந்தால் மட்டுமே அதன் முழுத் திறனை அடைய முடியும். அது வலிமை மிக்கதாகவும் மற்றும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்றாகவும் அமையும்.

சங்கத்தின் வளர்ச்சியில் அங்கத்தவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருடைய ஒரு பெரிய பங்களிப்பு இருந்து கொண்டிருக்கிறது. இச்சங்கம் இன்னும் பல்லாண்டு காலம் தனது நல்ல பணியை தொடர வேண்டும் என்பது எனது எதிர்ப்பாகும்.

## சங்கத்தின் வளர்ச்சி அனைவரின் அர்ப்பணிப்புக்கு கிடைத்த வெற்றி

எம்.எச்.எம்.சலீம்டீன் (தலைவர், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம்)



இச்சங்கத்தின் தலைவர் என்ற வகையில், எமது சங்கத்தின் ஸ்தாபகர்கள் முதல் இற்றை வரை பணியாற்றிய தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், போசகர்கள் அனைவரையும் எம் நெஞ்சில் நிறுத்தி நினைவு கூருவதோடு எமது மனமார்ந்த நன்றியையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம். மூத்த தலைவர்களின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்பு மற்றும் தியாகம் என்பதுதான் இச்சங்கத்தின் வலுவான அடித்தளத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தது என்று குறிப்பிடலாம். கடந்த மூன்று தசாப்தங்களாக, பலத்த சவால்களுக்கு மத்தியில் இச்சங்கம் அற்புதமான வெற்றியைப் பெற்றுள்ளது. அதன் உண்மையான நோக்கம் முஸ்லிம் வணிகர்களின் குரலாகவும் மேம்பாட்டுக்காகவும் உருவாக்கப்பட்டவையே. பல்லின சமூகத்தவர் மத்தியிலும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு மத்தியிலும் அங்கீகாரமும் மரியாதையும் பெற்று பெருமையுடன் செயற்பட்டு வருகின்றன.

இச்சங்கம் வணிக மேம்பாட்டுத் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் போன்ற செயலமர்வுகள், நடத்தி பொருளாண்மை வளர்ப்பதில் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றது. அதே போன்று சமூக விடயங்களிலும் கவனம் செலுத்தி கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், இயற்கை அனர்த்தங்களின் நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். கல்வி மற்றும் இளைஞர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இளைஞர் வணிக கவுன்சில் சமீபத்தில் தொடங்கப்பட்டது. அதன் 30 ஆண்டு பயணத்தை பிரதிபலிக்கும் வகையில், வணிகங்களை மேம்படுத்தும் பார்வையில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதேவேளையில் சமூகங்களை செழுமைப்படுத்துதல், வர்த்தக தலைமைத்துவத்தை உருவாக்குதல், சமூகப் பொறுப்பு, வர்த்தகக் கல்வி, கண்டியின் பொருளாதார மற்றும் சமூக நிலப்பரப்பில் ஒரு முக்கிய பங்காளியாக நாங்கள் உறுதியோடு எழுந்து நிற்கின்றோம்.

## 30 ஆண்டு நிறைவை எண்ணி எம்மனங்கள் மகிழ்ச்சியடைகின்றன

ஏ. சி. எம். ரகுமான் (பொதுச் செயலாளர்)



வணிகம் தொடர்பான அறிவுக்கும் அதன் மேம்பாட்டிற்கும் சமூக, மனிதாபிமான பணிகள் மீது பற்றுக் கொண்டவர்களின் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்கும் அடித்தளமாக அமையப்பெற்றதே எமது கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் ஆகும்.

இந்த வர்த்தக சங்கத்தின் 30 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது மனதிற்கு மகிழ்ச்சியூட்டுகிறது. இந்த 30 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் ஆரம்ப முதல் இற்றைவரையிலும் இச்சங்கத்தை கட்டியெழுப்புவதற்காக தோளோடு தோள் நின்று பங்காற்றிய கடந்த காலத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலதரப்பட்டோர் அர்ப்பணிப்புடன் சேவை புரிந்துள்ளனர். அவர்களை இத்தினத்தில் நினைவு கூர்ந்து கொள்வதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

மனித வாழ்வு, வர்த்தக மேம்பாடு மற்றும் சமூக இருப்பினை மேம்படுத்தும் வகையில் எமது கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் அளப்பரிய சேவைகளைப் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூக மக்களுக்கிடையே சகவாழ்வை வலுப்படுத்தும் வகையில் கண்டியில் பெறுமதிமிக்க சேவைகள் இச்சங்கம் ஆற்றியுள்ளது.

குறிப்பாக வர்த்தகம் மேம்பாடு தொடர்பான பயற்சிப் பட்டறைகள், மாணவர்களுக்கான கணினி கல்வி அறிவு, சர்வ சமய , அனர்த்தங்களின் போது பங்காற்றுதல், மற்றும் தேசிய ,சமூக மனிதாபிமானப் பணிகள் போன்ற பல்வேறு விவகாரங்களிலும் கவனம் செலுத்தி தூர நோக்குடன் செயற்பட்டு வருகின்றோம்.

முஸ்லிம்களுடைய வர்த்தக நடவடிக்கைகளையும், நன்மதிப்புக்களையும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் எடுத்துக் காட்டுவதில் எமது சங்கத்தினர்கள் அளப்பரிய சேவையாற்றி வருகின்றனர். இவ்விழா செழித்து சிறப்புற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.02.21
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5397 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 41,615,808.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 9 0 0 7 0 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3639 — சீட்டிழுப்பு திகதி 2024.02.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,381,827.52
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 02 10 48 49 — விசேட எழுத்து H — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 72199

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1745 — 2024.02.21 — 18934 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 424,803,070.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 17 — வெற்றி இலக்கங்கள் 13 28 44 45
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.02.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0223
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 7 6 3 5 9 6 — L7 எழுத்து D
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.25,694,491.08

ராசி சுப பலன் — திகதி 2024.02.21 — சீட்டிழுப்பு இலக்கம் 706 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,600,591.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 08 19 35 39 — தனயோக இலக்கம் 49576 — நாளுக்கான விதி எண் 16

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1427 — 2024.02.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,231,735.20
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 13 16 19 29 — விசேட எழுத்து I — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 15770

# கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸின் சான்றிதழ் வழங்கும் விழா

**கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸ் ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கண்டி இந்து கலாசார நிலையத்தில் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரும் தலைவருமான ஏ.எம்.எம். பரக்கத் அலி தலைமையில் நாளை மறுதினம் 25ஆம் திகதி காலை 8:30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக MR.Saheed M. Rismy (Chairman of National issues, Former president of Ceylon YMMA conference, Member of CCMSL, Former Director of SLILG &National Institute of co-operative Development), விசேட அதிதிகளாக Mr. M. M. Ramzy (Managing Director, Digana International SchoolDigana, Kandy), Mr. Mohammed Fahmy Farook (Managing Director yes virtual campus Private Limited, Chairman Yaqeen Education Systems private limited and CEO Panacea Business Consultancy.), Mr Wazeer Mukhtar (Director of Lanka Guardian commodities Private Limited vice president RPSL Consortium former member of pradeshiya Sabah Yatinuwara.) ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.**







இலங்கையில் வாழும் அனைவருக்கும் கல்வி சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதை தமது இலக்காகக் கொண்டு கல்விச் சேவையினை கோல்டன் கொலேஜ் கல்வி நிறுவனம் வழங்கி வருகிறது.

மத்திய மலை நாட்டின் தலைநகரமான கண்டி மாநகரில் 15 ஆண்டுகளாக சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பாட நெறிகளை சர்வதேச தரச்சான்றிதழ்களுடன் தொடர்ந்து வழங்கி வருவதுடன் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கற்கை நெறியினை திறன்பட வழங்கி வரும் அதிஉயர் கல்வி நிறுவனமாக கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸ் திகழ்கின்றது.

நாட்டின் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டலை மேற்கொள்வதற்கும் மாணவர்களது முன்னேற்றகரமான கல்வி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக இக்கல்வி நிறுவனம் 2009 ஆகஸ்ட் 8ம்திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முகாமைத்துவப்பணிப்பாளராகவும் தலைவராகவும் ஏ. எம்.எம். பரக்கத் அலி செயற்பட்டு வருகிறார். தொழிற்கல்வி விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுமத்தினர்கள் இணைந்து மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கற்கை நெறியை திறன் பட வழங்கி வருகின்றனர்.

இக்கல்லூரியில் கற்கை நெறியை மேற்கொள்ளவரும் மாணவ மாணவிகள் அனைவருக்கும் திறன்பட கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பட்டம் பெற்று வெளியே செல்லும் மாணவர்கள் தம் தொழில் துறையில் ஆரோக்கியமானதாகவும் சிறப்பாகவும் மேற்கொள்வதற்கு அதி உட்ச கற்பித்தலை இக்கல்வி நிறுவனம் வழங்கி வருகிறது.

சர்வதேச ரீதியாக மற்றும் உள்நாட்டு மட்டத்திலும் மாணவர்களின் திறமையை மேம்படுத்துதல் என்பனவற்றின் ஊடாக சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய அதிக சந்தை வாய்ப்புள்ள மூன்றாம் நிலை தொழில் முறை கல்விக்குரிய கற்கை நெறிகளே இங்கு போதிக்கப்படுகின்றன. கூடிய அளவிலான மாணவ மாணவிகள் தொழில் தகைமையைப் பெற்றுக்கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.

இலங்கையர்களுக்கு உலக அங்கீகாரம் பெற்ற வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குவது கல்லூரியின் முக்கியமான தொழில் நோக்காகும். அந்த நோக்கத்திற்கு அமைய சிறிய மற்றும் பட்டப்படிப்பு, முகாமைத்துவம், கணினி தொழில் நுட்பம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் கல்வி, கணக்கியல், எயார்லைன் டிக்கெட்டிங், ஆங்கில மொழி, இஸ்லாமிய வங்கி முறை, கையடக்கத் தொலைபேசி திருத்துதல் என இன்னும் எத்தனையோ கற்கை நெறிகள் திறமை மிக்க இலங்கை மாணவர்களுக்கு உரிய கல்வியை சிறந்த முறையில் பயிற்சி உடன் பெற்றுக் கொடுத்து அவர்களது தொழில் வாழ்க்கையை மேம்படுத்தி வருகின்றது.

கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸ் எனும் இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி மூன்றாம் நிலை கல்வி தொழில் கல்வி ஆணைகுழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டு அரசு அங்கீகாரச் சான்றிதழ்கள் (TVEC Reg. No. PO9/0148) மற்றும் சர்வதேச நாடுகள் உடைய பல்கலைக்கழக சான்றிதழ் அங்கீகாரத்தையும் (ISO 9001:2015| Asian College of TeachersThailand | OTHMUK | Qualifi UK | TCSD) பெற்று செயல்படும் கல்வி நிறுவனம் ஆகும்.

கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸ் கல்வி நிறுவனமானது ஆசிரியர்களுக்கான கற்கைநெறிகளை Asian College of Teachers என்னும் சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து பின்வரும் பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

எனவே, இக்கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு கற்கை நெறிகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன.

அதுவும் திறன் வாய்ந்த விரிவுரையாளர்கள் திறன்பட தமது பங்களிப்பை மாணவர்களின் நலன்களுக்காக செய்து வருகிறார்கள். பாடசாலையை விட்டு வெளியேறுவோருக்கான தொழில் வழிகாட்டி நிகழ்ச்சி திட்டங்களில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். இக்கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கு தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களின் நலன் கருதி ஆண், பெண் இருப்பாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட விடுதி வசதிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும். தொழிலை நாடி நிற்கும் இளைஞர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுபவர்கள் இணைந்து கொள்ளும் விதத்தில் இங்கு பல்வேறுபட்ட கற்கை நெறிகள் மூன்றாம் நிலை தொழில் முறை கல்விகள் கற்பிக்கப்படுகின்றன.

தற்போது கா.போ.த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்கு காத்திருக்கும் மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு குறுகிய காலத்தில் சான்றிதழை பெற்றுக் கொள்ளும் வகையில் கற்கை நெறிகள் போதிக்கப்படுகின்றன.





















# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பஞ்சரத பவனி



## ஆலய பிரதம குருக்களின் ஆசிச்செய்தி



**'ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை**
**அண்டமெல்லாம் பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை**
**புவி அடங்கக் காத்தாளை அங்குச பாசாங்குசமும்**
**கரும்பு மங்கை சேர்த்தாளை முக்கண்ணியைத்**
**தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே'**

காஞ்சியில் காமாட்சியாகவும் காசியில் விசாலாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் நின்று தன் அருளாட்சியை புரிகின்ற சக்தியானவள் இலங்கையில் எழில் கொஞ்சும் மலையக மண்ணின் மணிவிளக்காய விளங்கும் மாத்தளையில் அனைத்து சக்தி சொருபங்களையும் தன்னுள் உள்ளடக்கி மகா சக்தியாய் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகையாய் மந்திர சிம்மாசனத்தில் இராஜ மாதாவாக அமர்ந்து அருள் புரிபவள் அன்னை ஸ்ரீ முத்துமாரி. இன, மத,மொழி பேதமின்றி அனைத்து மக்களையும் அரவணைத்து ஆதரிப்பவள் நம் அன்னை முத்துமாரி. அருள் சக்தியை ஒப்பிட முடியாத வேதவல்லியும் அவளே. அழகுக்கே நிகரில்லாத அபிராமிவல்லியும் அவளே. அத்தகைய மகா சக்தியானவள் இம்மாத்தளை மண்ணிலே இவ் ஆலயத்தில் எழுந்தருளி பல்வேறு சக்தி ரூபங்களாய் பரிணமிக்கிறாள் என்பதையும் நாமறிவோம்.

அன்னை அருளாசியோடு நடைபெறும் இம்மாசி மக மகோற்சவ தேர்த்திருவிழா சிறப்புற பூலோக நாயகி திரிபுர சுந்தரி அன்னை முத்துமாரியம்பிகையின் திருமென் மலர்ப்பாதம் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

கிரியாபானு, கிரியாமணி,
சிவஸ்ரீ. சு. மணிகிருஸ்ண குமார குருக்கள்
ஆலய பிரதம சிவாச்சாரியார்



**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் – மாத்தளை**

***முன் வரிசை : இடமிருந்து வலம்:*** திரு. கந்தையா கனகரட்ணம் , திரு. வேலாயுதம் சுதர்ஷன் (உப தலைவர்), திரு. பெரியசாமி மனோகரன் (பொருளாளர்), திரு. விக்னேஸ்வரா சர்வானந்தா (தலைவர்) , திரு. செல்லையா ஜெயராஜ் (செயலாளர்) , திரு. அங்கமுத்து யோகராஜா செட்டியார் (உப செயலாளர்), திரு. மாரிமுத்து நாகேந்திரன் ராஜதுரை , திரு. வேலு அழகேஸ்வரன்

***பின் வரிசை : இடமிருந்து வலம்:*** திரு. தியாகராஜா கிஷோகுமார் , திரு. செல்லதுரை விஸ்வநாதன் , திரு. வீரையா முத்துசாமி , திரு. சுப்பையா பிரதீபன் , திரு. அங்கப்பன் திருச்செல்வம் ஆசாரியார் , திரு. இராமசாமி கிருஷ்ணகுமார்

## தலைவரின் வாழ்த்துச் செய்தி



இயற்கை எழில் கொஞ்சும் எமது இலங்கைத்திருநாட்டின் அழகு மலை அடிவாரத்தில் மலைவளமும் கலை வளமும் மாண்புற்று விளங்குவதாகவும் தொன்மையான வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான பன்னாகமம் எனப் போற்றப்படுவதுமான மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் திவ்விய சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் முத்துமாரியம்மனுக்கு ஆண்டு தோறும் மிகச்சிறப்பாக மகோற்சவ பெருவிழாவானது இடம் பெற்று வருகின்றது.

கடந்த 02.02.2024 கொடியேற்றத்தோடு ஆரம்பமாகி மாசிமக நன்னாளிலே பஞ்சமுக விநாயகர் வள்ளி தேவசேனா சமேத சோமசுந்தரேஸ்வரர் சண்டேஸ்வரி என பரிவாரங்களை அழைத்துக்கொண்டு பஞ்சரதமேறி வரும் காட்சி கண்கொள்ளா காட்சியாகும். மாத்தளை வாழ் மக்களுக்கு 'வேண்டுவோர்க்கு வேண்டுவன' எல்லாம் வாரி வழங்க பஞ்சரதத்தில் ஆரோகணித்து வருகிறாள். எத்தனை விழாக்கள், உற்சவங்கள், விரத அனுட்டானங்கள் யாவும் ஆண்டாண்டு தோறும் அம்பாளின் அருட்சக்தியினால் இனிதே நிறைவேற்றப்படினும் ஆண்டு தோறும் நடைபெறும் மாசி மக மகோற்சவ திருவிழா இலங்கை திருநாட்டில் மட்டுமல்லாது உலகெங்கும் உள்ள இந்துக்கள் அனுபவித்து கொண்டாடும் ஓர் ஆன்மீக திருவிழா ஆகும்.

மாத்தளை மாநகரில் அருள் சுரக்கும் அகிலாண்ட கோடி பிரமாண்டமான நாயகி அன்னை ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருவருளும், அம்பிகை அடியார்களின் பரிபூரண ஒத்துழைப்போடும், ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் வருடாந்த மாசிமக மகோற்சவத் தேர்த்திருவிழா 24.02.2024ம் திகதி சனிக்கிழமை மிகச்சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற இனிய நல் வாழ்த்துக்களை இச்சிறப்பு மலரின் மூலமாக தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு, எமது நாட்டுக்கும், நகருக்கும், அன்னையின் நல்லருளும், திருவருட்கடாட்சமும் கிட்ட வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

'எல்லா புகழும் என் அன்னைக்கே'

இங்ஙனம்,
விக்னேஸ்வரா சர்வானந்தா
கௌரவ தலைவர்

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எழில் கொஞ்சும் மலையகத்தின் மண்ணாம் மாத்தளை மாநகரில் உறையும் அன்னை முத்துமாரியவள், நலங்கள் யாவும் பொழியவும் நாட்டில் சாந்தி, சமாதானம், நல்லுறவு ஏற்படவும், நாட்டில் மழை பொழிந்து வளம் சுரந்து நாடும் வீடும் செழித்து, பஞ்சம் பட்டினி நீங்கி மக்கள் இன்புற்று வாழவும், அன்னையின் அருள் நோக்கால் நம் திருநாடு அவனியெங்கும் புகழ்பெறவும், இன்றைய பக்திப்பூர்வமான மகோற்சவத்திருவிழா அமையப் பெற்றிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். சக்தி வழிபாட்டின் கேந்திரஸ்தானமாக விளங்கும் மாத்தளை மாநகரில் அருள் சுரக்கும் ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருவருளும், அம்பிகை அடியார்களின் பரிபூரண ஒத்துழைப்போடும், ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் வருடாந்த மாசிமக மகோற்சவத் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற இந்நன்நாளில் இனிய நல் வாழ்த்துக்களை இச்சிறப்பு மலரின் மூலமாக தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு, எமது நாட்டுக்கும், நகருக்கும், அன்னையின் நல்லருளும், திருவருட்கடாட்சமும் கிட்ட வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

அன்னை முத்துமாரி அருள்வாய் நலம் யாவும்

சுபம்

இப்படிக்கு
செல்லையா ஜெயராஜ்
கௌரவ செயலாளர்


## பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவ தேர்த்திருவிழாவினை முன்னிட்டு வெளியிட இருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் திருவருள் பெறும் பேறாக இவ்வாண்டும் மாசிமக மகோற்சவம் வேதாகம விதிமுறைகளுக்கு சற்றும் வழுவாது சமயாச்சிரியர்கள் மூலம் சிறப்புற நடாத்தப்பட வாய்ப்பினைப் பெற்றுள்ளது. அம்பிகையின் கருணையால் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பிரார்த்தனையுடன் மிக அலங்காரமான பஞ்சரத பவனி விமர்சையாக நடைபெறவுள்ளது. தன்னை நாடி வரும் பக்தர்களின் குறை தீர்த்து அருளாசியை பொழிகின்றவள் அன்னை முத்துமாரி என்றால் அது மிகையாகாது. மேலும் இப்பஞ்சரத பவனி சீரோடும் சிறப்போடும் நடந்தேறுவதற்கு சிறப்பான செயல்முறைகளை வகுத்து செயற்பட்ட ஆலய அறங்காவல் சபை உறுப்பினர்கள், பொது மக்கள், வர்த்தக பெருமக்கள், மாத்தளை பொலிசார், மாத்தளை மாவட்ட செயலகத்தினர், மாத்தளை மாநகர சபையினர் மற்றும் மாத்தளையில் இயங்கி வரும் பல்வேறு சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஆலய பரிபாலன சபை மிக பக்தி சிரத்தையோடும் சமய சமூக நல அக்கறையோடும் செயற்படுவதுடன் அறப்பணிகளுக்காக பெருந்தொகையான பணத்தையும் ஒதுக்கிட்டு வருவது போற்றுவதற்கு உரியதாகும். பஞ்சரத பவனியன்று காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் காலை 10.00 மணிக்கு சுவாமி ரதத்திற்கு எழுந்தருளல் நிகழ்வு நடைபெற்று பஞ்சரத பவனி நடைபெறும். தேர்த்திருவிழாவன்று ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும். அடியார்கள் உள்ளம் குதூகலிக்கும். அனைவரும் வேறுபாடின்றி திருத்தேர்களில் பவனி வரும் உற்சவ மூர்த்திகளின் அருளாசியைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றேன்.

சுபம்

இங்ஙனம்,
பெரியசாமி மனோகரன்
கௌரவ பொருளாளர்



*மலர் தயாரிப்பு:*
எம். சதுர்தீன்
மாத்தளை சுழற்சி நிருபர்


மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்!!



அம்மன் அனைவருக்கும் அருள்பாளிப்பாளாக

SARITA Textorium
Right Place for Right Choice

No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023
Web : www.saritatex.com
www.facebook.com/saritatextorium

# என் எண்ண அலைகளில் உறையும் மாத்தளை முத்துமாரியம்மன்



மானுடராய் இப்பூமியில் பிறக்க மாதவம் செய்திட வேண்டுமென ஆன்றோர்கள் சான்றோர்கள் கூறிச் சென்றுள்ளார்கள். அரிது அரிது மானுடராய் பிறப்பது அரிது என அவ்வையாரும் மானிட பிறப்பைப் பற்றி எடுத்தியம்புகிறார். இந்த உடம்பு இறைவன் பணி செய்து முத்திப் பேற்றை அடைவதற்கே படைக்கப்பட்டுள்ளது.

இப்பூமியில் நாம் எங்கு பிறக்க வேண்டும் எங்கு வாழ வேண்டும் என்பததை நாம் முடிவு செய்வதில்லை. அந்த இறைவனே முடிவு செய்கின்றான். நான் பிறந்த இடம் வேறாக இருந்தாலும் சிறு வயது முதலே வாழ்ந்த இடம் மாத்தளை. அச்சிறு வயதில் நான் வசிப்பது அன்னை முத்துமாரியின் புண்ணிய பூமி என எனக்கு தெரியாது.

அன்னை தந்தையுடன் ஆலயம் என்று எனக்கு விவரம் தெரிந்த நாளில் முதலில் சென்றது முத்துமாரி அம்மனின் சந்நிதிக்கு தான். இன்றும் என் மனக்கண்ணில் அந்த ஆலய காட்சிகள் விரிகின்றன. சுற்றிலும் பசுமையான வயல். அதன் அருகில் அன்னையின் ஆலயம். கருவறையில் தீப ஒளியில் முத்து மாரி அன்னை கம்பீரமாக வீற்றிருந்தாள். முகத்தில் கருணை ஒளி. அடியார்களை காக்கும் அபய கரம்.

எனது வாழ்க்கையில் பல நிகழ்வுகள் அந்த ஆலயத்திலேயே நடந்தேறியுள்ளன.பொங்கல் என்றால் அனைவருக்கும் மகிழ்ச்சியான நாள். அனைவரும் தமது வீட்டு முற்றத்தில் பொங்கலிடுவார்கள். ஆனால் நாங்கள் அன்னை முத்துமாரியின் ஆலய முன்றலிலேயே பொங்கல் இடுவோம். அது ஒரு அழகான அனுபவம் உடலை ஊசி போன்று குத்தும் பனிக்குளிர். அழகு மலையில் ஊற்றெடுக்கும் ஆறுபீலியில் அதிகாலையிலே குளிப்போம். பின்னர் ஆலயத்திற்கு வந்து வரிசையாக மூட்டியிருக்கும் அடுப்பில் நாம் பொங்கலிடுவோம். பின்னர் அன்னைக்கு படைத்து அருந்தும் பொங்கலின் சுவையை என்றென்றும் மறக்க முடியாது.

அது மாத்திரமல்ல திருவெம்பாவை காலத்து புளியோதரை நினைக்கும் போதே நாவூறுகிறது.

மாசி மகோற்சவம் என்றால் மாத்தளையில் வாழும் அனைவரும் அது தங்கள் வீட்டு திருவிழா என்றே எண்ணுவார்கள். எனது வாழ்க்கையிலும் பல பருவங்கள் இந்த ஆலயத்தில் கடந்து போய் உள்ளன பாவாடை சட்டை, தாவணி, சாரி என பல பருவங்கள். பள்ளித்தோழிகளுடன் தேர்த்திருவிழாவில் வடம் பிடித்து ரதம் இழுத்தது என பல அனுபவங்கள் உண்டு. ஆலய உற்சவங்களின் போது எண்ணற்றோரின் சொற்பொழிவுகள் எனது செவிகளை குளிரவைத்துள்ளன. நாதஸ்வர, மேள கச்சேரிகளை மறக்க முடியுமா. கிருபானந்த வாரியார், வசந்தா வைத்தியநாதன், கண்டி அசோகா கல்லூரியின் அதிபர் நடராஜா என பலரின் சொற்பொழிவுகள் என் வாழ்க்கையை புடம் போட்டிருக்கின்றன.

என்னுடைய எழுத்தார்வமும் இந்த ஆலயத்தில் தான் ஆரம்பித்தது என்று கூறினால் மிகையல்ல. சிவராத்திரி அதில் முக்கியமான ஒரு தினம். எனது சகோதரனுடன் சேர்ந்து கவிதைகளை எழுதி பாடசாலை காலத்திலேயே சிவராத்திரி தினத்தில் அரங்கேற்றி இருக்கின்றோம்.கோயில் கும்பாபிஷேக மலரில் நான் எழுதிய கட்டுரை வரவில்லை என்று அன்னையின் சந்நிதியில் கவலைப்பட்ட சந்தர்ப்பமும் உண்டு. இன்று அந்த அன்னையின் அருளால் பத்திரிகைகளில் எழுதும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அவ்வன்னையின அருள்தான் என்னே.

எனது தாயார் ஏதேனும் கஷ்டங்கள் ஏற்படும் போது முத்துமாரி அன்னையை வேண்டி காணிக்கை முடிந்து வைப்பதை கண்டுள்ளேன். அவளது கோரிக்கை நிறைவேறிய பின் காணிக்கையை செலுத்துவதையும் என் கண்களால் பார்த்துள்ளேன். மாத்தளையில் கலவரம் ஏற்பட்டபோது கோயிலுக்கு ஏற்பட்ட அழிவை எண்ணி கண்ணீர் விட்டிருக்கின்றேன். ஆனால் இன்று அதே அன்னையின் ஆலயம் பிரமாண்டமாக எழுந்து நிற்கும் காட்சியை காணும் போது கண்களில் ஆனந்த கண்ணீர் தான் வருகிறது.

மாத்தளை வாழ் தமிழ் மக்கள் மாத்திரம் அல்ல எல்லா மதத்தினரும் நம்பிக்கை வைத்துள்ள அன்னை தன்னை வேண்டுபவர்களுக்கு தாய்மை உணர்வுடன் அருள் பாலிப்பாள். மாத்தளையில் வசிக்கும் அனைவருக்கும் அவளுடன் இணைந்த பல நினைவுகள் இருக்கும் என்பது எனது எண்ணம். நான் எங்கு வாழ்ந்தாலும் என் மனதில் நிறைந்திருப்பவள் மாத்தளை முத்துமாரி அன்னையே. அவள் பாதம் பணிகின்றேன். அணுவிற்குள் அணுவும் நீஅண்டங்கள் அனைத்தும் நீ ஆள்கின்ற அரசியும் நீகருணைக்கு எல்லையும் நீ

இராஜகனி வயலட்




V.Sutharshan,
BBA in Acc, IFA (UK), IAB (UK)

MASTER ACCOUNTANCY SERVICE
ACCOUNTANTS, AUDITORS & TAX CONSULTANTS

Head Office:
No. 360A, Main Street,
Matale.
☎: 066 2230905
✆: 077 4114101
✉:mas_matale@yahoo.com
Kandy : 53, Katugastota Road.
Welimada: 4/1, Pettiyamedawatta.

A & B Events Management
T. Kishor Kumar, Proprietor
Banquet Hall for Weddings/Receptions/Seminars/ Birthday Parties / A/C, Non A/C Family Rooms with Ala Carte Meals
A & B Events Hall
No. 90, Rattota Road, Matale.
Henas Reception Hall
No. 9A, Kaikawala,
Rattota Road, Matale.
Tel.: 077 6455888/ 066 2233733
Email: abeventsmatale@gmail.com
web: www.ebevents.com.lk

M Manamagal
FANCY & TEXTILES





Dealers in all kind of Fancy Goods, Gift Items, Covering Jewellery & Indian Textiles





No/612A, Main Street, Matale
Tel: 066 2222075


# தேவஸ்தான வரலாற்றில் 108 அடி நவதள இராஜகோபுரம்

வாழ்க்கையோடு இணைந்துள்ளது தான் சமயம் என்பதை எமது இந்து மதம் வலியுறுத்துகிறது. இத்தகைய சமய வாழ்க்கை ஆலய வழிப்பாட்டோடு தொடர்புபட்டிருப்பதுதோடு, மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்ற வழிமுறைகளையும் போதித்திருப்பது எமது சமயமாகும்.

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். அந்த குறிக்கோளை அடைவதற்கு மக்களை நெறிப்படுத்துவதில் சமயங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. சமயத்தோடு இணைந்ததே வாழ்க்கை. மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழவைப்பதற்கு எமது சமயம் நெறிகளைக் காட்டுகின்றது. ஆலய வழிபாடு அதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

எமது சமயத்தில் சமய வழிபாடு எவ்வளவு தொன்மையானதோ அதேபோல் சக்தி வழிபாடும் மிகவும் தொன்மையானது என்பதை சிந்துவெளி அகழ்வாராய்ச்சிகள் தெளிவுப்படுத்துகின்றன. எமது ஈழத்திருநாட்டில் சக்தி வழிப்பாட்டின் தொன்மையை நயினை நாகபூஷனி அம்மன் ஆலயம் எடுத்தியம்புகின்றது. அவ்வகையில் எமது மாத்தளை மாநகரிலும் எமது மூதாதையர் சக்தி வழிபாட்டை வேரூன்ற செய்தனர். அதற்காக உருவாக்கப்பட்டதே மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானமாகும். மாத்தளை என்ற பெயரால் இன்று அழைக்கப்படும் இவ்வூர் அன்று பன்னாகமம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது.

மலையகத்தின் வடக்கு வாயிலாக திகழும் பன்னாகமம் என்ற மாத்தளையானது நீர்வளமும், நிலவளமும், கொண்டது. அன்று சில பெரியவர்களால் சிறுகொட்டில் ஒன்று அமைத்து அதில் பிரதிஸ்டை செய்து வணங்கப்பட்டு வந்த அன்னை மாரியின் ஆலயமனது இன்று மலையகத்தில் மட்டுமல்ல ஈழத்திருநாட்டிலேயே பிரசித்திப்பெற்ற ஓர் ஆலயமாக திகழ்கின்றது.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக இதுவரை காலமும் இயங்கிவந்த நிர்வாக சபையினரும், தனவந்தவர்களும், அம்பிகை அடியார்களும் அன்னையின் மீது கொண்ட அளப்பெரும் பக்தியின் காரணமாக தம்மை முழுமையாக அர்ப்பணித்து திருப்பணிகளை மேற்கொண்டதினால் படிப்படியாக வளர்ச்சியடைந்த ஆலயம் இன்று ஒரு தேவஸ்தானமாக விளங்குகின்றது.

ஆரம்பகாலம் முதல் இன, மத, வேறுபாடின்றி சகல மக்களையும், ஒரே மாதிரியாக வரவேற்கும் பண்பு காலங்காலமாக இங்கு காணப்படுகின்றது. இதனால் பிறமதத்தவர் தாம் விரும்பியவாறு தேவைகளுக்கேற்ப அன்னையை ஆராதித்து நன்மை பெறுகின்றனர். இத்துடன் இங்கு நேரம் தவறாது பூஜைகளும் கிரியைகளும், நடாத்தப்படுகின்றன. யாருடைய வருகையும் எதிர்பாராது குறித்த நேரத்தில் பூஜைகளை ஆரம்பித்து சிறப்பாக செய்து முடிப்பது ஒரு மரபாகவே தொன்று தொட்டு பேணப்படுகின்றது. உற்சவ காலங்களில் நித்திய, நைமித்திய கிரியைகள், பூஜைகள், பற்றிய முன்னறிவித்தல்கள் நேரகாலத்துடன் அடியார்களின் நலன்கருதி அறிவிக்கப்படுவதால் சிரமமின்றி அடியார்கள் பூஜைகளில் பங்குபற்றுவதற்கும், அன்னையின் அருள் பெறுவதற்கும் மிகவும் வாய்ப்பாகவுள்ளது. இவ்வாறு திட்டமிட்டு செயலாற்றுதல் இவ்வாலயத்தின் அதிமுக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

மகோற்சவக் காலங்களிலும், ஏனைய உற்சவங்களின்போதும் ஆன்மீகப்பேருரைகள் ஏற்பாடு செய்து அடியார்களின் சமய அறிவினை மேம்படுத்தி சமயத்தில் மேலும் ஈடுபாடு கொள்வதற்கு ஆவண செய்வது இவ்வாலயத்தின் இன்னுமோர் கைங்காரியமாகும். இதனால் மாத்தளை வாழ் மக்களின் கல்வி, கலை வளர்ச்சி மேலோங்குகின்றது.

மேலும் இவ்வாலயத்தின் ஒரு சிறப்பு என்னவெனில் பாரிய பொறுப்பு வாய்ந்த நிர்வாகத் திறமையை இங்கு காணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக ஒரு நாட்டின் மந்திராலோசனை சபை அதாவது ஒரு அரசாங்கம் எவ்வாறு இயங்குகின்றதோ அவ்வாறான அடிப்படையில் இந்த ஆலயத்தின் நிர்வாகசபை இயங்ககின்றது. நிதி, பாதுகாப்பு, மின்சக்தி, நீர்விநியோகம், சுகாதாரம், வெளிவிவகாரம், போன்ற பல பொறுப்புக்கள் இலாக்களாக பிரிக்கப்பட்டு சபையின் அங்கத்தவர்களுக்கு அப்பொறுப்பான பதவிகளைக் கொடுத்து அதன் மூலம் அடியார்களின் தேவைகளை நிறைவேற்றி வருவதுடன், ஆலயத்தின் பராமரிப்பையும், ஆண்டவனுக்கு செய்யவேண்டிய ஐந்துகால பூஜையுடன், சரியை, கிரியைகளை சரிவர செய்யக்கூடியதாகவுள்ளது. இச்செயல்பாடுகளுக்கான உந்து சக்தியை மக்களிடமிருந்து பெற்று அவரவர் கடமைகளைத் திறம்படச் செய்வதால் தேவஸ்தானம் முறையாக நிர்வகிக்கப்படுகின்றது. அத்தோடு ஆலயத்தின் சொத்துக்கள் பாதுகாக்கப்டுவதுடன், கிடைக்கும் காணிக்கைகளைக் கொண்டு ஆலய வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றப்படுவதும், இவ்வாலயத்தின் ஓர் சிறப்பாகும்.

ஆரம்பகாலத்தில் திருவிழாக்களையும், வருடாந்த திருவிழாக்களையும் சாதாரணமாகவே நடாத்தி காலப்போக்கில் சிறு சிறு மாற்றங்களுடன் சப்பரத் திருவிழாக்களை நடாத்தி திருவிழாக்களை மெருகூட்டியிருக்கிறார்கள். அப்படி சாதாரண உள்வீதி திருவிழாக்கள் சப்பரம் கட்டி சுவாமிகளை அலங்கரித்து விழாக்களை நடாத்திவந்துள்ளார்கள். இன்று மாத்தளை நகரென்றால் அம்மனின் பஞ்சரதபவனியே அனைவருக்கும் கண்முன் தோன்றுகின்றது.

இந்த பஞ்சரத பவனியின் ஆரம்ப கால வரலாறு எப்படி தோன்றியது என்பதனை பார்ப்போமானால், 1934ம் ஆண்டளவில் கட்டுத்தேர்கள் கட்டி அலங்கரித்து ஸ்ரீ விநாயகர் தேர், சிவனம்பாள் தேர், முருகன் தேர் என முத்தேர் பவனி நடைபெற்றுள்ளது. 1965ம் ஆண்டளவில் பஞ்சரதங்கள் ஆரம்பிக்கப்பட்டு மகோற்சவத்தை நடாத்தி வந்துள்ளதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. கட்டு தேர் ஓடிய காலத்தில் திரு. சின்னு வேளார், திரு. கோவிந்தசாமி, திரு. மயில்வாகனம், மற்றும் திரு. இராமலிங்கம் ஆகியோர் இக்கட்டுத்தேர்களை செய்விப்பதில் கைந்தேர்ந்தவர்களாக இருந்தார்கள். 1927ம் ஆண்டுக்கு முன்பிருந்தே தேர்த் திருவிழாக்கள் இத்தேவஸ்தானத்தால் நடைபெற்று வந்துள்ளது என்பதை சான்றுகளில் அறியக்கூடியதாக உள்ளது.

ஒரு தேரை ஆறு வடிவங்களாகக் கொண்டு அமைப்பார்கள். அதாவது கலை, தத்துவம், வண்ணம், புவனம், பதம், மந்திரம், என ஆறுவகைகளாக திருத்தேரை வடிவமைத்த ஒரு சரீரமாக (உடம்பாக) கருதி அதன் நடுவில் அம்பிகையை வைத்து வழிபட வேண்டும் என்பது ஆகம விதியாகும் அதற்கமைய யாழ் நகரை பிறப்பிடமாகக் கொண்ட திரு. தம்பிதுரை ஸ்பதியார் அவர்களது கைவண்ணத்தில் எழில்மிகு சித்திர வேலைபாடுகளுடன் சித்திரத் தேர் ஒன்றினை அம்பிகைக்கு நிர்மாணித்து இலங்கை வரலாற்றிலேயே மாத்தளை மாநகரில் 'பஞ்சரத பவனி'யை ஏற்படுத்தி செய்து சரித்திரம் படைத்தது என்றால் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானமேயாகும்.

இப்படியான ஒரு அழகான சித்திரத் தேரை நிர்மாணித்து 1977ம் ஆண்டு மாத்தளை மாநகரில் வெள்ளோட்டம் விடப்பட்டு, தேர்த்திருவிழா செய்த பெருமை திரு க. குமாரசாமி அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய நிர்வாக சபையினருக்கே சாரும் முத்தேர் பவனி நடைபெற்று வந்த ஆலயத்தின் பஞ்சரத பவனியை நடாத்தி தேவஸ்தானத்திற்கு நற்பெயரை பெற்றுக்கொடுத்த பெருமையும் அவரையே சாரும்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரில் ஐந்து வருடங்கள் அம்பிகை அடியார்களுக்கு அருட்காட்சி கொடுத்தார். இத்திருத்தேர் 1983ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது கயவர்களால் எரித்து நாசமாக்கப்பட்டது. கல்யாண மண்டபம். ஏனைய கட்டிடங்கள், தளபாடங்கள், விடுகள், அனைத்தையும் எரித்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தினார்கள்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பர் ஆனால் இந்த வாசகம் உயிரோட்டமாக நின்று நிலைக்கும் இடம் இத்திருத்தலம் என்பது கண்கூடு. இந்த பாதகச் செயலில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் தண்டணையிலிருந்து தப்பிக்க முடியவில்லை.

11ஆம் பக்கம் பார்க்க...


கல்விக்குப் பயன் அறிவு,
அறிவுக்கு பயன் ஒழுக்கம்

seylantour





மத்திய மாகாண வர்த்தக சங்கத்தின் முகாமையாளர் Seylan Tour சுற்றுலா நிறுவனத்தின் உரிமையாளர், களுதாவள 01ஆம் வட்டார சமூக அபிவிருத்தி மற்றும் மரண உதவி சங்கத்தின் தலைவர், மாத்தளை சுவாமி விபுலானந்தர் கலா மன்றத்தின் செயலாளர் மற்றும் RTS நிறுவனத்தின் உரிமையாளர், மற்றும் பிரபல சமூக சேவையாளருமான தியாகராஜா சத்தியசீலன்.

இல. 84, இரத்தோட்டை வீதி, மாத்தளை
தொலைபேசி : 075 - 6606220 / 071 6664669

# மாசிமக பஞ்சரத பவனி



மாத்தளை ஸ்ரீ முத்துமாரிஅம்பிகையின் திருவருட் கடாட்சத்தின் பெரும்பேறாக இவ்வாண்டும் மாசிமக பஞ்சரத பவனியைக் கண்டுகளிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள இவ்வேளையில் அம்பிகையின் பக்தன் என்ற வகையில் ஒரு சில சிந்தனைச் சிதறல்களை பக்த கோடிகளான தங்களோடு பகிர்ந்து கொள்வதோடு எல்லாம் வல்லஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் திருவருளால் இப்பெருவிழா வெற்றிகரமானதாக அமைந்து பக்த பெருமக்கள் அனைவருக்கும் நல்லருள் கிட்டி, நலமும் வளமும் பெறவேண்டி வாழ்த்திக் கொள்ள விளைகின்றேன்.

இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் இலங்கை மணித் திருநாட்டின் சிறப்புக்கு மெருகூட்டும் அதன் புவியியல் அமைவிடம் மிக வியத்தகு தன்மையினைக் கொண்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறித்தவம் என்று நான்கு முக்கிய மதத்தவர்களையும், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல் இனத்தவர்களையும் கொண்டதோர் தனித்துவம் காத்து தேசியம் போற்றும் பன்மைச் சமூக அமைப்பை நாம் பேணுகின்றமை குறிப்பிடத்தக்கதோர் சமூக கலாசார விழுமியங்களுக்கு பாரம்பரிய உரித்தாளர்களாக எம்மை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருப்பது பெருமைக்குரியது. இலங்கைத் திருநாட்டின் இந்தப் பண்பியல்புகளை முற்றும் முழுதாக பேணிக்காக்கும் இடங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பிரதேசம் என்றால் அது மாத்தளைப் பிரதேசமே என்பது இன மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு மாத்தளை மைந்தர்கள் அனைவருக்கும் பெருமை தருவதாகும்.

மலையகத்தின் வடக்கு நுழைவாயிலாக மாத்தளை அமைந்துள்ளது. இயற்கை அன்னையின் எழில் வனப்பின் கொடையாகவும், வரலாற்றுச் சிறப்பின் பொக்கிஷமாவும் விளங்குவதோடு ஆன்மீக மணங்கமழும் புண்ணிய பூமியாகவும் சீர்பெறுகிறது. பன்னகாமம் எனும் பழம் பெருமைக்குரித்தான மாத்தளை நகருக்குள் எத்திசை வழியாக நுழைய விழைந்தாலும் அவ்வழியின் தொடக்கம் ஒரு இந்து ஆலயத்தின்; அமைவிடமாவே காணப்படுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. அவற்றோடு மாத்தளை நகருக்குள் சித்தி விநாயகர், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள், களுதாவளை ஸ்ரீ ஏழு முகக் காளியம்மன், சிந்தாக்கட்டி ஸ்ரீ குமரப்பெருமான் ஆலயம், கோம்பிளிவெல ஸ்ரீ மத்து மாரியம்மன், மந்தண்டாவளை பரம குரு சுவாமிகள் மடத்தடி பிள்ளையார், உடுப்பீலி விநாயகர் ஆலயம் விரிவஞ்சி இங்கே தவிர்க்கப்பட்டவை உள்ளாக என பல ஆலயங்கள் மாத்தளை மண்ணின் அறநெறி வாழ்விற்கு பண்டை தொட்டு அடித்தளமாக அமைந்து விளங்குகின்றன. இது போன்றே வரலாற்றுப் பெருமைமிக்க அலுவிஹார முதல் பல பௌத்த விகாரைகளும், இஸ்லாமிய பள்ளிவாசல்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் நகருக்குள் அமைந்து தத்தமது அறநெறி வாழ்க்கை முறைகளுக்கு வழிகாட்டி புனிதம் சேர்த்து பேணுகின்றன. கல்வி, மொழி, கலை இலக்கியங்களை வளர்ப்பதிலே தத்தம் தனித்துவங்களுக்கேற்பவும் பன்னிலை பண்பாட்டியல்புகளுக்கு ஒப்பவும் பல கல்விக் கூடங்கள் அயராது உழைத்து வருகின்றன. தமிழ் இலக்கித்துறையிலே தமிழ் படைப்பாளர்களும் இஸ்லாமியபடைப்பாளர்களும் மதசாயல்களுக்குஅப்பால் தமிழ் மொழிப்பற்றினைபார்போற்றப் பதித்துபலஆக்கங்களைப் படைத்துதமிழ் அன்னையின் வளத்தையும் நலத்தையும் காத்து வந்துள்ளனர். இவ்வாறு பாங்கினில் உயர்ந்த பண்பாட்டாளர்களை மனித நேயத்தோடு உருவாக்கி உயர்வு காணும் இன மத பேதங்களுக்கு அப்பாலான ஒற்றுமையின் உயிர்ப்பிடமாக இதுவரை மாத்தளை விளங்கி வருகிறது.


இதமான இந்த சூழலில் இறையுணர்வு நிறைந்த சிவபூமியிலே வாழும் அரும் பாக்கியத்தை எமக்கு என்றும் ஈந்து இறையருளை மென்மேலும் செம்மையாக்கி செழுமைப்படுத்தி வலிமை கூட்டி ஆன்ம ஈடேற்றத்தை நல்கும் மாத்தளை

ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் பஞ்சரத பவனி ஒரு தேசிய விழாவாகவே கொண்டாடப்படுகிறது. கொடியேற்ற உற்சவ் தினம் தொடங்களாக ரதபவனி காணும் இன்றையநாள் வரை நகரிலுள்ள அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள், பொலிஸ் பாதுகாப்புப்பிரிவு,பொது மற்றும் தனியார் போக்குவரத்து, நகரசபை, பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம் என அனைத்துப் பகுதியினரினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதில் எந்தவிதமான தடைகளும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இச் சேவைகள் அனைத்தும் அவரவரால் பக்தி சிரத்தையுடன் அர்ப்பணிப்புச் செய்யப்பட்டன என்றால் இவ்விழாவில் அவர்கள் காட்டிய ஈடுபாடும் அக்கறையும் எத்தகையது என்பதை புரிந்து கொள்ள முடியும். பஞ்சரத பவனி கண்டு அன்னையின் அருள்பெற்றுய்ய வெளியிடங்களிலிருந்து வருகை தரும் அடியார் பெருமக்களின் எண்ணிக்கை வழமையை விட இவ்வாண்டு அதிகரித்துக் காணப்படலாம் என்பது பிரதேச மக்களின் எதிர்பார்ப்பாகும். இவ்விழா தேசிய விழா என்பதை விடவும் உலகெங்கும் வாழும் இந்துப் பெருமக்கள் அனைவராலும் பக்தி சிரத்தையுடன் போற்றப்பட்டு வருகின்ற மிகப்பிரசித்தமான விழாவாகவும் நோக்கப்படுகின்றது.

நவீன யுகத்தில் உலகளாவ மலிந்து காணப்படும் பண்பாட்டு, சமூக, ஒழுக்க சீரழிவுகளுக்கு தண்டனைகளையோ, கண்டணங்களையோ பிரயோகிப்பதை விட சமய அறநெறி வழிகாட்டல்களே சிறந்த விளைதிறன் மிகு பயனைத்தர முடியும் என்பதை உலகம் வெகுவாக உணர்ந்து கொண்டுள்ளது. இந்து சமயமும் தான் தோன்றிய காலத்திலிருந்தே இந்த கட்டுக்கோப்புக்குள்ளும், கட்டுப்பாட்டுக்குள்ளும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. 'அன்பேசிவம்' என்பது உணரப்பட்டு அதனடிப்படையில் 'அறப்பணியே இறைபணி' என்பதை செயல் வலுவூட்டி சமூக உணர்வுகளுக்கும் விழுமிய மேம்பாடுகளுக்கும் தமது பாரிய பங்களிப்புகளை வழங்கும் வகையில் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபை மிக அக்கறை கொண்டு செயற்படுவதுடன் அத்தகைய அறப்பணிகளுக்காக பெருங்தொகையான பணத்தையும் ஒதுக்கிட்டு வருவது பெரிதும் போற்றுதற்குரியதாகும். இவ்வாறான அறப்பணிகளில் பல இந்து சமூக நலன்புரி ஒன்றியங்கள், சபைகள், மன்றங்கள் போன்றவையும் ஈடுபடுவதற்கு இது ஒரு வழிகாட்டலாக அமைந்துள்ளமை சிறப்பாகும்.

மாசிமக பஞ்சரத பவனியுடன், அது சார்ந்த அனைத்து செயற்பாடுகளையும் தேவஸ்தான பிரதம குருக்களின் வழிகாட்டலோடு அறங்காவலர் சபை தலைவர் திரு. விக்கினேஸ்வரன் சர்வானந்தாவுடன் அறங்காவலர் சபை உறுப்பினர்கள், ஆலய சிப்பந்திகள், தொண்டர்கள் பொதுமக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து எக்குறையுமின்றி அன்னையின் திருவருளால் மிகச் சிறப்பாக நிகழ்த்தி வருவது பாராட்டுக்குரியது. மாசிமக பஞ்சரத பவனி காட்சி கொள்ளும் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருவருட் பெரும்பேறு அனைவருக்கும் கிட்டி திருப்பணிகளும், அறப்பணிகளும், இறைபணிகளாய் மக்கள் பல நலனும் பெருவளமும் பெற்றுய்ய நிறைபணிகளாய் மிளிரட்டும்.

**(கட்டுரை ஆக்கம் – முன்னாள் மாத்தளை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.செல்வகுமார். ச.நீ (அ.இ) தொகுப்பு எம்.சதுர்தீன் மாத்தளை சுழற்சி நிருபர்**



சித்திரத்தேர்கள் கட்டி
முத்தேராக வடமிழுத்து
பஞ்சரத பவனியாக
உலாவரும்
மாரிக்கு அற்புத நாளும்
இன்று...
சிலிர்க்கும் சித்திரத்தேரில்
சிம்மாசனமாரூட
சிம்மவாஹினிக்கு
பொன்னாளாம்
இன்று...

பஞ்ச ரதங்களோடு
ரத பவனி வரும்
அன்னை

# சர்வலோக நாயகிக்கு நன்நாளாம் இன்று

அழகு மலைகளில்
சூழப்பட்ட
அன்னை பராசக்திக்கு
பொன்னாளாம் இன்று...

சர்வமும் கொண்ட
சர்வ லோக நாயகிக்கு
பஞ்சரத பவனியாம் இன்று...

வடம் இழுத்து பன்னாக
மமே
மகிழும் அற்புதத் திருநாளாம்
இன்று...

நவ கலசங்களொடு நவமாய்
மின்னிடும் நவசக்திக்கு
பொன்னாளாம் இன்று...

ஜாதி மத பேதமின்றி
அருள் மாரி பொழியும்
மாரி அம்மனுக்கு
பொன்னாளாம் இன்று...

முத்துமாரிக்கு அருள் நிறை
நன் நாளாம் இன்று...

மாசிப் பௌர்ணமியில்
திருவீதி உலாக் காணும்
அன்னை முத்துமாரிக்கு
மாசி மகமாம் இன்று...

வானுயர்ந்து வரலாறு
படைத்து
மாத்தளை மண்ணே
பெருமை கொள்ளும்
மாரி அம்பாளுக்கு
பஞ்சரத பவனியாம் இன்று...



**மாத்தளை தேவிகா**


**Sam Multi Shop**
**செல்வக்குமார் சியாமளன்**
**இலக்கம் 50, இறத்தோட்ட வீதி,**
**மாத்தளை**
066 – 2231727 / 077 – 5946626


# தேவஸ்தான வரலாற்றில்...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அன்று ஐந்து தேர்களை நாசப்படுத்திய போதும் 1992ம் ஆண்டு ஐந்து சித்திரத்தேர்களை மீண்டும் உருவாக்குவதற்கு திருவருட்கடாட்சம் பெற்றிருந்ததை மறக்கமுடியாது.

அந்தவகையில் இவ்வாலயத்தை நிர்வகித்து வந்த அனைத்து நிர்வாகிகளும் ஆலயத்தை சிறப்பாகவே நிர்வகித்து வந்துள்ளனர் என்று கூற வேண்டும். ஆலய வளர்ச்சியின் தேவையை மனதிற் கொண்டு தற்போதைய நிர்வாகம் ஆலயத்திற்கான வெளிவீதியின் அவசியத்தை அறிந்து ஆலயத்திற்கு முழுமையான சுற்றுப்பிரகாரம் (வெளிவீதி) அமைப்பதற்காக ஆலயத்திற்கு அண்மையில் இருந்த காணிகளை மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஏராளமான பொருட்செலவில் பெற்று அடியார்கள் முழுமையாக வலம் வந்து அன்னையை தரிசிக்க வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். என்றால் அது அமரர் த. மாரிமுத்து செட்டியார் அவர்களது சிரத்தையும், முயற்சியுமே என்பதோடு அவருக்கு இணையாகவிருந்த அறங்காவல் சபையினர் வழங்கிய ஒத்துழைப்புமேயாகும். என்றால் அது மிகையாகாது.

அத்தோடு மிகப்பாரிய திருப்பணியான 108, அடி நவதள இராஜகோபுரத்திருப்பணியும் இந்த நிர்வாகசபையினரின் திறமைக்கு சான்றாக அமைந்துள்ளது. இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணி எளிதில் யாருக்கும் கிட்டாது. அதற்கும் இறையருள் வேண்டும் அன்னையின் திருவருள் பெற்ற அமரர் த. மாரிமுத்து செட்டியாரின் எண்ணத்தில் உதித்த இப்பாரிய கைங்காரியம் செயலளவில் பூர்த்தியாவதற்கு

அன்னையிடம் அவருக்கிருக்கும் அளவுகடந்த பக்தியும், திருவருளுமேயாகும். அவருக்குத்துணையாக, பக்கபலமாக இருந்த அறங்காவலர்களது உந்து சக்தியும், ஒத்துழைப்பும், அம்பிகை அடியார்களது பங்களிப்புமே மாத்தளை வாழ் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற 'கோபுர தரிசனமாகும்'

கோபுர கும்பாபிஷேகத்தின்போது சிவாச்சாரியர்களினால் நடாத்தப்படும் யாக பூஜைகள், தீபாரதனைகள். யந்திர பூஜைகள், திரவியபிஷேகம், கும்ப கலச அபிஷேகங்கள், தூபி அபிஷேகங்கள், கோபுர விமானங்களின் அபிஷேகங்கள், என்பன நாம் காண்பதற்கு இனியதும், கிடைத்ததற்கரியதுமான நிகழ்வுகளாகும். இவ்வாறான கும்பாபிஷேக பூஜைகளில் பக்திப் பரவசத்தோடும்,இறைசிந்தனையோடும்,வழிபடுவோமேயானால் ஆரோக்கியமான வாழ்வும், ஆயுள் விருத்தியும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

தூரத்தில் இருந்து பார்க்கும் போது எமது கண்ணுக்குத் தெரிவது கோபுரம். அக்கோபுர தரிசனமே கோயிலில் ஈர்க்கும் மூலமூர்த்தியை பார்க்கவும், தரிசிக்கவும், அருள் பெறவும், தூண்டுகோலாக இருக்கின்றது. கோபுர தரிசனம் செய்த பின்னரே கோயிலின் உள்ளே செல்கிறோம். மாத்தளையின் எல்லைக்கு வரும் போதே இவ்வாய்ப்பு அடியார்கள் பெற வேண்டும் என்ற நீண்ட கால கனவின் பிரதிபலிப்பே 108, அடி நவதள இராஜகோபுரம்.

நான் அறிந்த மட்டில் 1979ம், 1980ம் ஆண்டுகளில் அப்போதைய நிர்வாகத்தலைவர்களால் வடக்குப்பக்கமாக (மூலஸ்தானத்திற்கு நேராக) வாசல் திறக்கப்பட்டு , சிறய அளவிலான இராஜகோபுரம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அது நிறைவேறவில்லை. வடக்கு வாசல் பக்கம் இப்படியொரு இராஜகோபுரம் அமையுமென்றோ, வீதி அமையுமென்றோ எவருமே நினைத்துப்பார்த்திருக்க முடியாது. வடக்கு வெளிவீதி வாசல் அப்படியானதொரு அமைப்பைக் கொண்டதாக இருந்தது. எட்டி கால் வைக்க முடியாத அளவிற்கு படுபாதாளமாகவும் பாரிய நீரோடையாகவும் அமைந்திருந்தது. இந்த ஓடையிலே எதிர்நீச்சல் போட்டு, இன்று இந்த வானுயர்ந்த வரலாற்றுப்பெருமை கூறும் 108, அடி நவதளங்களைக் கொண்ட நெடிய கோபுரத்தை நிர்மாணித்து 11122005ல் கும்பாபிஷேகம் காணும் பாக்கியம் எமக்கு கிடைக்கப் பெற்றிருக்கின்றது என்றால் உண்மையாகவே அது அன்னை முத்துமாரியின் அற்புதமே என்றால் மிகையாகாது.

நாட்டுக்கே சிறப்பளிக்ககூடிய அழகான சிற்பங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைத்து மாத்தளை மாநகருக்கு மட்டுமன்றி அகிலமெங்கும் அன்னையின் புகழ் சிறப்புற்று விளங்கவும், மாத்தளை மாநகருக்கு அழகும், அருளும், பெருமையும் சேர்த்து கம்பீரமான வானுயர்ந்த 108, அடி நவதள இராஜகோபுரத்தை அழகுற அமைத்து அக்கோபுரத்தில் அதி உன்னதமான 1008, சிற்பங்களையும் வடிவமைத்து, வியக்க வைத்து எம்மையெல்லாம் பக்திப்பரவசத்தில் ஆழ்த்திய தமிழ்நாடு திருப்புல்லாணி இராமநாதப்புரத்தைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் திருவாளர் நாகலிங்கம் ஸ்தபதி அவர்களுக்கும், திருவாளர் இராமநாதன் ஸ்தபதி அவர்களுக்கும், அவருடன் இணைந்து செயற்பட்ட சிற்பக் கலைஞர்களையும் மறக்க முடியாது.



**கலைமாமணி கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா**


**துஷாந்தன் பழக்கடை**
**எம்.நாகேந்திரன்**
**இல. 72/2, தம்புள்ளை வீதி,**
**பலாபத்வள, மாத்தளை,**
077 - 3132124



**தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம். உங்கள் அனைத்து கல்வி தேவைகளுக்கும் மாத்தளையில் நாடவேண்டிய ஒரே கல்வியகம்**

**நவோதயம் கல்வி நிலையம், மாத்தளை**
**0777 – 802402**


# மாதர் மாங்கல்யம் காத்தருள்வாள் முத்துமாரி

மலர் போன்ற மனம் கொண்ட பூமாரி – மா
தலையெனும் நகர் வாழும் மாமாரி
சில்லுக்குள்ளும் உயிர் வாழும் சுகுமாரி –
கடுஞ் சினம் யாவும் மறக்கின்ற மாகாளி
ஆல் போல் குழல் கொண்ட ஓங்காரி
கலைஞான இசைஞான வேற்காரி
மலை மீது குடி வாழும் மஹாமாரி அழகு மலை
அடி மீது குடிகொண்ட திரிசூலி
ஆனந்த கூத்தாடும் அபிராமி
அனைவருக்கும் துணையான சிவகாமி
அலைமோதும் மாந்தர் துயர் போக்கும்
அலங்காரி – அன்னை
அளவில்லா கண்கொண்ட முத்துமாரி
மாத்தளை மாநகருக்கு மகமாயி
மங்கள புகழ் சேர்ப்பாள் முத்துமாரி
மாந்தர் கூட்டத்திற்கு மனதார கருணை
அருள் சேர்ப்பாள் மாத்தளை முத்துமாரி
தேரில் உலவிடுவாள் அன்னை முத்துமாரி
திரவியங்கள் தந்திடுவாள் முத்துமாரி
தமிழ் இசையை வளர்த்திடுவாள்
முத்துமாரி – அன்னை
மாதர் மாங்கல்யம் காத்திடுவாள் தங்க முத்துமாரி



**திருமதி இந்ராதேவி சிவலிங்கம்** அதிபர்
மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறநெறிப் பாடசாலை


அம்பிகையே அருட்சுடரே
நின் விரல் தீண்டிய அமிலமும்
அமுதே! அகிலத்தின் அரணே!
என் அகக்கசடை அறிந்து
அறுத்திடும் அரும்பொருளே!
உனை
போற்றிப்பாட
உள்ளம் களிப்பில்
காந்தமாகியதே!





R.Manivannan
Office :
No. 40, King Steel, Matale
Tel : 066 2232024

Residence :
No. 3A, Circular Road,
Kaludawala, Matale
Mob : 0777 398673



**கொடியேற்றம்**
**02.02.2024**
**காலை 11.00 மணி**

**மகேஸ்வர பூஜை**
**23.02.2024**
**காலை 01.00 மணி**

**பஞ்சரத பவனி**
**24.02.2024**
**காலை 8.00 மணி**

# “மாத்தளை, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான”

## பஞ்சரத பவனி தேர்த்திருவிழா சிறப்புடன் நடைபெற ஸ்ரீ முத்துமாரியம்மனை பிரார்த்திக்கின்றோம்

மத்திய மாகாணத்தில் உள்ள மாத்தளை நகரத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் கடந்த 2024.02.02ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இவ்விழா பகல் இரவு திருவிழாவாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. 2024.02.24ஆம் பஞ்சரத பவனி நடைபெறும்.

இவ்வாலயம் வடக்கை நோக்கியதாக 108 அடி உயரத்தைக் கொண்ட நவதள, நவகலசம் கொண்ட இராஜகோபுரம் அமைக்கப்பெற்றுள்ளது. இது இவ்வாலயத்தின் வரலாற்றுப் பெருமையை உணர்த்துவதாக உள்ளது. இவ்வாலயம் கொழும்பிலிருந்து 144 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றது. வடக்கையும் மலையகத்தையும் இணைக்கும் ஒரு கேந்திரத் தளமாக மாத்தளை மாநகர் விளங்கி வந்திருக்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பெருதோட்டத்துறைக்கு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் அழைத்து வரப்பட்டபோது “தலைமன்னார்” “அரிப்பு” இறங்கு துறையூடாக அழைத்து வரப்பட்டனர். இவர்கள், மலையக தலைவாசலான பண்ணாகமம் என்று அப்போது அழைக்கப்பட்டு வந்த மாத்தளையை வந்தடைந்தனர். ஆதியில் மன்னாரிலிருந்து காட்டு வழியாக கால்நடையாக பெரும் துன்பப்பட்டு மாத்தளையை வந்தடைந்த மக்கள் அங்கிருந்த சிறு சிறு குழுக்களாக மலையக பெருந்தோட்டங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். அப்படி பெருந்தோட்டங்களில் குடியேற்றப்பட்ட மக்களே இந்திய வம்சாவளி மக்களாவார்கள். இம்மக்களின் உழைப்பாலேயே மலையகம் இன்று செழிப்பாக இருக்கின்றது. இப்படி சிறு சிறு குழுக்களாக மலையகமெங்கும் வியாபித்த மக்கள் மாத்தளையிலும் குடியேறினர். எங்கும் வியாபித்த பக்தர்களுக்கு அருள் மழை பொழியும் அன்னை பராசக்தியான ஸ்ரீ முத்துமாரியம்பிகையானவள் சிகை அலங்காரம் செய்யும் ஒருவரின் கனவில் தோன்றி தன் திரு உருவத்தை ஒரு வில்வமரத்தடியில் வெளிப்படுத்தி தன்னை பூஜிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அன்றிலிருந்து அவ் வில்வ மரத்தடியில் திருவுருவச்சிலை வைத்து வணங்கி வந்ததாக ஆரம்பகால கர்ண பரம்பரைக் கதைகளும் ஏடுகளும் சான்று பகர்கின்றன.

இக்காலத்தில் வாழ்ந்த இப்பூர்வீக மக்களால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தின் ஆரம்ப காலம் சரியாக குறிப்பிட முடியாவிட்டாலும் இவ்வாலயம், பல்லாண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது என யூகித்துக் கொள்ளலாம். எழில் மிகு இயற்கை சூழலையும் பௌதீக வளங்களையும் கொண்ட பண்ணகாமத்தில் இம்மக்கள் ஆரம்பத்தில் சிறு கொட்டில் அமைத்து வழிபட்டு வந்துள்ளனர். அக்கொட்டில் காலப்போக்கில் மடாலயமாகி இன்று பேராலயமாக வளர்ச்சிப் பெற்று விளங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இத்திருவிழா காலத்தில் தினமும் காலை 11.00 மணிக்கும் மாலை 7.00 மணிக்கும் சுவாமி உள் வீதி, வெளி வீதி வந்து அருள்பாலிப்பதுடன் தினமும் திருவிழாக்களுக்கான விசேட பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. பஞ்சரத பவனி நடைபெறும் தினத்தில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இன, மத பேதமின்றி எல்லா இன மக்களும் கலந்து கொண்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளை பெற்றுக்கொள்ளவதை காணமுடியும்.


வே. சிதம்பரநாதன் ஜே.பி கண்டி




திரு. கே.நகுலேஸ்வரன்
மாத்தளை



திரு. கே.கமலேஸ்வரன்
மாத்தளை



திரு. ஜே. சரவணன்
மாத்தளை



திரு. வே. சிதம்பரநாதன் JP
கண்டி

வழமைபோல் குளிர்பானம் கோயில் அருகாமையில்
பக்தர்களின் நலன் கருதி ஒவ்வொரு வருடமும்
வழங்குவதைப் போன்று இம்முறையும் வழங்கப்படுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**1. RAJ REST (PVT) LTD 2. UDAYA REST (PVT) LTD M/T 3. GREEN LINE REST (PVT) LTD**
**4. N.K.S PALLEGAMA (PVT) LTD 5. CYLON BEVERAG (PVT) LTD**



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

- கீழ்வரும் உருக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்யுங்கள்.

01.



i. ii. iii.


02.



i. ii. iii.


- முதல் உருவில் இருந்து வேறுபட்ட உருவைத் தெரிவு செய்யுங்கள்.

03.




i. ii iii

04.




i. ii. iii.

05. மாகாணம், மாவட்டம், நகரம் என்பவற்றைக் காட்டுவதற்கான உரு அருகில் காட்டப்பட்டுள்ளது. அவற்றில் C மூலம் காட்டப்படுவது எது?




i. மாகாணம்  ii. மாவட்டம்  iii. நகரம்

06. பின்வரும் செவ்வகம், வட்டம், முக்கோணம் என்பவற்றில் உள்ள எண்களைக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




வட்டத்திற்குரிய எண்கள் யாது?
i. 8, 7
ii. 4, 5, 8, 7
iii. 5, 7, 8


07. அமாவாசை தினத்திற்கு அடுத்த நாள் புதன்கிழமை இரவு நாம் சந்திர ஒளியில் விளையாடினோம். இவ் வாக்கியம்,
i. சரி  ii. பிழை  iii. கூற முடியாது


08. ஐந்து திங்கட் கிழமைகளைக் கொண்ட டிசம்பர் மாதத்தில் அந்த ஐந்து திங்கட்கிழமைகளின் நாட்களின் கூட்டுத்தொகையின் பெறுமானத்தை கொண்டிருக்கக் கூடிய விடையாக அமைவது
i. 85  ii. 75  iii. 70

09. நிசாந்தன் துஷானின் தந்தை ஆவார். நிசாந்தனின் மனைவி விமலா. தர்சனின் தந்தை நிசாந்தன் எனின் விமலாவினதும் தர்சனினதும் உறவு முறை யாது?
i. தாய் - மகன்  ii. பாட்டி – பேரன்  iii. மாமி – மருமகன்

10. விலங்குப் பண்ணையில் கோழிகளும், ஆடுகளும், செம்மறி ஆடுகளும் உள்ளன. பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை 78 எனின் கோழிகளை விட 5 ஆடுகள் குறைவாக உள்ளன. ஆடுகள் 8 எனின் அங்குள்ள செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை யாது?
i. 4  ii. 5  iii. 7


- கீழே காட்டப்பட்ட குறியீடுகளை அவதானித்து வினாக்களுக்குரிய விடையை தெரிந்து கோடிடுக.




11.  இன் பெறுமதி
i. 25  ii. 20  iii. 18

12.  இற்கான பொருத்தமான விடை
i. 32  ii. 38  iii. 45

13.




B பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு யாது?
i. 450 ml  ii. 650 ml  iii. 750 ml

14. A = 5 M = 4 R = 6 எனின் A + M + A + R + A என்ற சொல்லின் பெறுமதி
i. 15  ii. 25  iii. 18

15. 1*l* எரிபொருளினால் 40km தூரம் பயணஞ் செய்ய முடியும். ஒரு பேருந்து 100km தூரம் செல்வதற்கு தேவையான எரிபொருளின் அளவு யாது?
i. 2*l*  ii. 2*l* 500ml  iii. 1*l* 500ml


16. மயில் ஒரு தடவை ஒலி எழுப்பும் போது கிளி 6 தடவைகளும், கிளி ஒரு தடவை ஒலி எழுப்பும் போது மைனா 3 தடவைகளும் ஒலி எழுப்பும் எனின் அதிக தடவைகள் ஒலி எழுப்பும் பறவை எது?
i. மைனா  ii. மயில்  iii. கிளி

17. முன்னால் இருந்து பார்க்கும் போது குமுதா வரிசையில் 18ஆவதாக அமர்ந்திருக்கிறாள். இறுதியிலிருந்து பார்க்கும் போது 11 ஆவதாக அமர்ந்து இருக்கிறாள் எனின் வரிசையில் அமர்ந்திருப்போர் எத்தனை பேர்?
i. 28  ii. 26  iii. 27

18. சாரங்கனின் வயதுடன் 12 வருடங்களைக் கூட்டினால் அவன் மாதவியை விட 3 வருடங்கள் இளையவனாக இருப்பான். மாதவியின் வயது 30 எனின் சாரங்கனின் வயது யாது?
i. 21 வருடங்கள்  ii. 15 வருடங்கள்  iii. 17 வருடங்கள்

19. மீனுக்கு துடுப்பு போன்று பறவைக்கு
i. சிறகு  ii. கால்  iii. சொண்டு

20. மணிக்கூடு காட்டும் அடுத்த நேரம் எது?



i. ii. iii.


21. சொற்சோடிக்கு மிகவும் பொருத்தமான உரு – ஊர்வன் - கால்கள் உண்டு




i. A  ii. B  iii. C

- **முதலாவது படத்திற்கு ஒத்த உருவைத் தெரிவு செய்யுங்கள்.**

22.




i. ii. iii.

23.



i. ii. iii.


24. இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?



i. 18  ii. 20  iii. 10

25. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்யுங்கள்.
i. புலவர் அரசனிடம் சென்றார்.  ii. புலவர் அரசணிடம் சென்றார்.
iii. புலவர் அரசனிடம் சென்ரார்.

26. சமச்சீர் அச்சு ஒன்றை மாத்திரம் கொண்டுள்ள உருவின் கீழ் கோடிடுக.



i. ii. iii.

27. தந்தையொருவர் தனது சம்பளத்தில் மூத்த மகனுக்கு ¼ ஐயும், இரண்டாவது மகனுக்கு 1/5 ஐயும் மூன்றாவது மகனுக்கு 1/8 ஐயும் கொடுக்கின்றார் சந்தையின் சம்பளம் ரூ. 12,000.00 எனின் தனது பிள்ளைகளுக்கு வழங்கிய மொத்தப் பணத்தொகை யாது?
i. ரூ. 7400.00  ii. ரூ. 6900.00  iii. ரூ. 4600.00

28. ஒரு குளத்தில் பூக்கும் பூக்கள் அடுத்த நாளில் இரண்டு மடங்காக அதிகரிக்கும். 5 நாட்களின் பின் காணப்பட்ட பூக்களின் எண்ணக்கை 256 எனின் மூன்றாம் நாள் பூத்த பூக்களின் எண்ணிக்கை யாது?
i. 32  ii. 64  iii. 512

29.

| 2 பென்சில்கள்<br>3 புத்தகங்கள் |
| --- |
| ரூ. 90.00 |

| 2 பென்சில்கள்<br>2 புத்தகங்கள் |
| --- |
| ரூ. 70.00 |


| 2 பென்சில்கள்<br>1 பசை |
| --- |
| ரூ. 40.00 |

i. ஒரு பென்சிலினதும் ஒரு புத்தகத்தினதும் விலை
i. 35.00  ii. 40.00  iii. 45.00

30. ஒரு வேலியில் ஒவ்வொரு 8 மீற்றர், தூரத்திலும் ஒரு தூண் நடப்பட்டுள்ளது. அவ்வேலியில் 15 தூண்கள் நடப்பட்டிருந்தால் வேலியின் நீளம் யாது?
i. 120m  ii. 11m  iii. 112m

31. செல்வியும், வருணியும் ஒரே இடத்தில் ஆரம்பித்து செல்வி வலது பக்கமாக 50m உம் வருணி இடது பக்கமாக 150m தூரமும் நடந்து சென்றார்கள் எனின் இப்போது இருவருக்கும் இடையிலான தூரம் யாது?
i. 250m  ii. 200m  iii. 100m

- **ஒரு சதுரமுகியின் பக்கங்கள் இங்கு காட்டப்பட்டுள்ள.**




32. B இற்கு எதிர்ப்பக்கமாக உள்ள எழுத்து
i. E  ii. A  iii. D


(14ஆம் பக்கம் பார்க்க)



(13 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I


1 மணித்தியாலம்

33. கீழுள்ள திண்ம உருவை கடைக்கோடு வழியே வெட்டி எடுத்த போது பெறப்பட்ட முகத்தின் வடிவம்



i.  ii.  iii. 

34. கீழ் உள்ள உருவில் மூன்று சதுரங்கள் மட்டும் மீதப்படுத்துவதற்கு அழிக்க வேண்டிய குறைந்த எண்ணிக்கையான கோடுகளின் எண்ணிக்கை





i. 5
ii. 2
iii. 3

- கீழேயுள்ள கட்டத்தில் காணப்படும் எழுத்துக்களையும் எண்களையும் வாசித்து விடை எழுதுங்கள்


3 8 A 5 C 8 S 3 2 6 K 5 T 4 3 Y

35. இங்கு அதிக தடவைகள் இடம் பெற்றுள்ள எண் எது?
i. 8 ii. 3 iii. 5

36. இங்கு இடம்பெற்றுள்ள ஆங்கில எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
i. 5 ii. 6 iii. 7


37.  - தேங்காய் துருவினார்  - தேங்காயை உரித்தார்
 - தேங்காயை உடைத்தார்  - தேங்காயை பறித்தார்

38. △ = 8 ▲ = 0 ● = 6 ○ = 9
பெறுமானங்களைக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவு செய்யுங்கள்






i. 140 ii. 149 iii. 77




39. கீழே காட்டப்பட்டிருப்பது சிறிய குற்றிகளால் ஆக்கப்பட்ட ஒரு கனவுருவாகும். அதில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதியில் உள்ள எல்லாக் குற்றிகளும் நீக்கப்பட்டுள்ளது. தற்போது எஞ்சியுள்ள குற்றிகளின் எண்ணிக்கை யாது?



i. 48
ii. 60
iii. 56


- முதலில் தரப்பட்டுள்ள உருவை அம்புக்குறி வழியாக மடித்து நிழற்றப்பட்ட பகுதிகளை வெட்டி அகற்றி விரிக்கும் போது காணக்கூடிய விதத்தை தெரிவு செய்க.

40.   

i.  ii.  iii. 

## கடந்த வார (16.02.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

I.
01. குரங்கு பற்றி
02. வானத்தை தொடுமளவுக்கு
03. மரம்
04. நிதானமாக / மெதுவாக
05. கொப்பு / கை
06. மரங்கள் / குரங்குகள்

II.
07. i. வெள்ளம் ii. தீபாவளி
iii. பாகற்காய் iv. இங்கனம் v. தேநீர்
08. i. உவகை / மகிழ்ச்சி - கவலை / துன்பம்
ii. அடவி / வனம் - நாடு
iii. விசாலமான - சிறிய
iv. எழிலான - அலங்கோலமான
v. போனனர் - வந்தனர்
09. i. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன
ii. இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே
iii. அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான்.
10. i. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
ii. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
11. வேதனைப்படுத்துதல்
12. சமாளித்தல்
13. ஆபத்தில் உதவாதிருத்தல்
14. அந்தப் பாலங்கள் மிகவும் நீளம் கூடியதாகும்.
15. காட்டில் மான் கூட்டங்கள் அலைந்து திரிந்தன.
16. கடற்கரையில் மீனவர்கள் மீன் பிடித்தனர்.
17. கரைந்தன
18. உதித்தது
19. i. Grapes ii. Black board
20. i. கிளி மாம்பழம் சாப்பிடுகிறது
ii. நாங்கள் பாடசாலை செல்கின்றோம்
21. XVIII
22. 5 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்
23. i. 36 ii. 4, 49
24. 118
25. 49, 56
26. 
27. i. 70.00 ரூபாய்
180.00 ரூபாய்
ii. 9.00 ரூபாய்
28. i. 5 ii. 25 iii. 15 பேர்
29. சதுரமுகி

| | | |
|---|---|---|
| III. | 39. 3 | 49. 2 |
| 30. 2 | 40. 3 | 50. 3 |
| 31. 3 | 41. 2 | 51. 3 |
| 32. 1 | 42. 3 | 52. 1 |
| 33. 1 | 43. 2 | 53. 2 |
| 34. 3 | 44. 2 | 54. 3 |
| 35. 2 | 45. 3 | 55. 1 |
| 36. 3 | 46. 3 | 56. 3 |
| 37. 2 | 47. 2 | 57. 2 |
| 38. 1 | 48. 1 | 58. 3 |
| | | 59. 2 |

மட்டக்களப்பில்

# கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் நிறுவனத்தால் நலன்புரி திட்டங்கள்

### மாவட்ட செயலகத்தில் கலந்தராய்வு

**மட்டக்களப்பு குறுப், பெரியபோரதீவு தினகரன், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படவுள்ள நலன்புரித் திட்டங்கள் தொடர்பாக உரியவர்களுக்கு தெளிவூட்டும் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை (21) மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் போது, கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் அமைப்பு நிறுவனத்தால் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தற்போது வரை முன்னெடுக்கப்பட்டு வரும் நலன்புரித் திட்டங்கள் மற்றும் எதிர்கால நலன்புரித் திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டன.



பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்குமிக்க சத்துமா வழங்குதல், போசாக்கு குறைந்த சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்குதல், வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், மாதிரி வீட்டுத்தோட்டச் செய்கை, ஜீவனோபாய தொழிலுக்கு கால்நடை வழங்குதல், நிலக்கடலை செய்கையை ஊக்குவித்தல் மற்றும் இவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட நலன்புரி விடயங்களை கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுத்து வருகின்றது.



உலக சாரணர் இயக்கத்தின் தந்தை ரொபட் பேடன் பவுல் பிரபுவின் பேரப்பிள்ளை டேவிட் பேடன் பவுல் பிரபு அவுஸ்திரேலியாவிலிருந்து நேற்று(22) வியாழக்கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளார். திருகோணமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (20) முதல் நடைபெற்று வருகின்ற தேசிய சாரணர் ஜம்போரி நிகழ்வில் கலந்துகொள்ளும் வகையிலேயே அவரது விஜயம் அமைந்துள்ளது. *(திருகோணமலை தினகரன்)*

## அமெரிக்க–இலங்கை புல்பிரைட் ஆணைக்குழு ஏற்பாட்டில் தென்கிழக்கு பல்கலையில் செயலமர்வு

**ஒலுவில் விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்**



தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் உயர் கல்வியை தொடரவுள்ள இறுதி ஆண்டு மாணவர்களுக்கு அமெரிக்க - இலங்கை புல்பிரைட் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் செயலமர்வொன்று அப்பல்கலைக்கழக ஒலுவில் வளாக தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (21) நடைபெற்றது. தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் அமெரிக்க இலங்கை புல்பிரைட் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா கலந்துகொண்டு விளக்கமளித்தார்.

அமெரிக்க - இலங்கை புல்பிரைட் ஆணைக்குழுவானது இரு நாடுகளுக்கும் இடையிலான பரிமாற்றங்கள், கல்விப் பங்காண்மைகள், பரஸ்பர புரிதல் ஆகியவற்றை வளர்க்கும் புதிய சகாப்தத்துக்குள் பிரவேசித்துள்ளதாக, அவர் தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வியை மேம்படுத்துதல், அமெரிக்கா - இலங்கை மக்களுக்கு இடையிலான கல்வி மற்றும் அறிவியல் உறவுகளை மேலும் பலப்படுத்துவதில் ஆணைக்குழு முக்கிய பங்கு வகிக்கின்றது. பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை விருத்தி செய்து, மாணவர்களை சிறந்த பட்டதாரிகளாக வெளியேற்றும் செயற்பாடுகளை அமெரிக்க-இலங்கை புல்பிரைட் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

## அக்கரைப்பற்றில் நூல் வெளியீட்டு விழா

**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

அக்கரைப்பற்றை சேர்ந்த பன்னூலாசிரியர் எம்.ஐ.மதீனா உம்மா எழுதிய 'வாழ்வை நிகர்த்த வானவில்' மற்றும் 'கலை' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) காலை 9.30 மணிக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுபெற்ற நில அளவையாளர் ஏ.முகைதீன் பாவா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொள்ளவுள்ளார்.

## கிழக்கின் குரல்

## காத்தான்குடி ஹிழுறியா பாடசாலையில் உள்ளக விளையாட்டரங்கு திறந்துவைப்பு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட காத்தான்குடி ஹிழுறியா வித்தியாலயத்தில் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கு திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை (22) நடைபெற்றது.

ஃபோரம்ஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த விளையாட்டரங்கை கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் திறந்து வைத்துள்ளதுடன், பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்துள்ளார்.

காத்தான்குடி ஹிழுறியா வித்தியாலய அதிபர் யஸீர் அரபாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர்களான எஸ்.எச்.அஸ்பர், மர்சூக் அகமது லெவ்வை, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் ரவூப் ஏ.மஜீத், கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

இதன்போது இப்பாடசாலையில் தரம் 01க்கான புதிய மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு, இனிப்புப்பண்டம் வழங்கி வரவேற்கப்பட்டனர்.



தரம் 01க்கு புதிய மாணவர்களை இணைக்கும் வித்தியாரம்ப நிகழ்வு, பாலமுனை அல் ஹிதாயா மகளிர் பாடசாலையில் அப்பாடசாலை அதிபர் பீ.முஹாஜிரீன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (22) நடைபெற்றது. *(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)*

**(வரலாற்று பாதையில் 114ஆவது ஆண்டை எட்டிப்பிடித்திருக்கும் கொறக்கான நக்ஷபந்தியா ஜும்ஆ மஸ்ஜித் வரலாறு (105வது வருட பெரிய கந்தூரி தமாம் வைபவம் நாளை (24.02.2024)**

114 ஆவது வருட நிறைவைக் காணும்

# பாணந்துறை, கொறக்கானை நக்ஷபந்தியா ஜும்ஆ பள்ளிவாசலின் 105 ஆம் வருட கந்தூரி தமாம் மஜ்லிஸ்

மேல் மாகாணத்தின் , களுத்துறை மாவட்டத்திலுள்ள, பாணந்துறை தேர்தல் தொகுதியில் 671 A கிராம சேவகர் பிரிவில் அமையப்பெற்றுள்ள அழகிய சிறு கிராமமே எமது கொறக்கான கிராமமாகும்.

கொறக்கான கிராமம் மரங்களால் சூழப்பட்ட வனப்பிரதேசமாக காணப்பட்டதால், சிங்கள மக்களால் கொறக்காகம என அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இப்பெயர் 'கொறக்கான' என தமிழ் மொழியில் திரிபடைந்து அழைக்கப்பட்டதாக முன்னோர்களின் ஒரு சான்றாகும். சுமார் 1900 ஆம் ஆண்டளவில் இக்கிராமத்தில் கிட்டத்தட்ட 10 குடும்பங்கள் அளவில் குடியேறி அது காலப்போக்கில் 50 குடும்பங்களுடன் 50 வீடுகளாக வளர்ச்சி பெற்றதாக சரித்திரம் கூறுகின்றது.

இக்கால கட்டத்தில் தொழுகைக்காக பள்ளிவாயல் ஒன்று இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வந்துள்ளது. தத்தமது வீடுகளிலே ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றி வந்துள்ளனர். ஜும்ஆ தொழுகைக்காகவும் ஜனாஸா நல்லடக்கத்திற்காகவும் அயல் ஊரான ஊர்மனை ஜும்ஆ மஸ்ஜிதையும் பள்ளிமுல்லை ஜும்மா மஸ்ஜிதையும் இக்கிராம மக்கள் நாடினர். அந்நாட்களில் கால்நடையாகவே செல்லும் வழமை இருந்து வந்துள்ளது.

இவ்வூரைச் சேர்ந்த பிரபல மாணிக்கக்கல் வியாபாரியும் கொடை வள்ளலுமான மர்ஹூம் அப்துல் லத்தீப் மரிக்காரினால் 1910 ஆம் ஆண்டில் தனது சொந்தப்பணத்தில் தனக்குரிய காணியில் சுமார் 35' X 35' கட்டடமொன்றை புதிதாக கட்டி அதை நக்ஷபந்தியா தக்கியா எனப் பெயரிட்டு அல்லாஹ்வின் பெயரில் வக்பு செய்துள்ளார். இத் தக்கியாவின் முதலாவது பரிபாலன சபைத் தலைவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியின் நக்ஷபந்தியா தரீக்காவின் அமல்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன.


பள்ளிவாசலின் முகப்புத் தோற்றம்

மர்ஹூம் அப்துல் லத்தீப் மரிக்காரின் மறைவுக்குப் பின் அவரது புதல்வர் மர்ஹூம் மொஹமட் சமீம் ஏ லத்தீப் மரிக்காரும் அவரின் மறைவுக்குப் பின் அவரது சகோதரர் மர்ஹூம் மொஹமட் தாஹிர் மரிக்காரும் இப்பள்ளியில் நிர்வாக சபைத் தலைவர்களாக கடமையாற்றியுள்ளனர்.

நாடு முன்னேற்றம் கண்டிருந்தாலும் நமது கிராமத்திற்கு 1970 க்குப் பிறகே மின்சாரம் கிடைக்கப்பெற்றது. அதுவரை தக்கியாவில் மெழுகுவர்த்தியுடனான லாந்தர் விளக்குகளும் மண்ணெண்ணெய் விளக்குகளுமே பள்ளியை ஒளியூட்டின. முழு கிராமமுமே இருளில் மூழ்கிய காலம் அது. சிறிது காலத்தின் பின்னரே பெட்ரோல் மெக்ஸ் பாவனைக்கு வந்தது.

அக்காலப் பகுதியில் வாழ்ந்த ஊர் பிரமுகர்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்து ஹிழ்ர் (அலை) அவர்களின் பெயரால் கந்தூரி வைபவம் ஒன்றை நடத்துவதற்கு முடிவு செய்து 1919 ஆம் ஆண்டில் முதன் முதல் இந்தக் கந்தூரி வைபவம் கிராம மட்டத்தில் சிறிய அளவில் நடைபெற்றது.

ஆரம்ப காலத்தில் இப்பகுதி பெரும் காடுகள் நிறைந்த இடமாக இருந்ததால் காட்டு முயல்கள் வேட்டையாடப்பட்டு முயல் இறைச்சியால் கறிசமைத்து இந்தக் கந்தூரி வைபவத்தில் பரிமாறப்பட்டதாக முன்னோர்களின் சான்றுகள் உறுதிப்படுத்தப் படுகின்றன. எனவே இந்த கந்தூரி 'முயல் கந்தூரி' என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

1919 இல் ஆரம்பித்த இக்கந்தூரி இன்று நம் நாட்டில் நடைபெறுகின்ற பிரபல்யமான கந்தூரிகளில் ஒன்றாக இன்றுவரை அக்கந்தூரி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 105 ஆவது வருடமாக பெரிய கந்தூரி தமாம் வைபவம் நாளை 24ஆம் திகதி நடைபெற இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

காலப்போக்கில் இக்கிராமத்தில் மக்கள் தொகை பெருகத்தொடங்கியது. தொழுகைக்காக கட்டப்பட்ட நக்ஷபந்தியா தக்கியாவில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. காலத்திற்கேற்ப விஸ்தீரப்படுத்தப்பட வேண்டிய கட்டாய தேவை உணரப்பட்டது. இக்காலப்பகுதியில் பள்ளி பரிபாலன சபைத் தலைவராக இருந்த மர்ஹூம் M .T .A பௌசியின் தலைமையின் கீழ் ஊர் ஜமாத்தினர் ஒன்று கூடி ஆலோசனை நடத்தினர்.

இதன் பயனாக 1977 ஆகஸ்ட் மாதமளவில் சிறிய தக்கியா உடைக்கப்பட்டு கட்டிட புனர் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக ஊர்மக்கள் உடலாலும் சிரமதானப் பணிகள் மூலமும் நிதியுதவியின் மூலமும் இரவு பகலாக அயராது உழைத்துள்ளனர். கட்டிட வேலை ஆரம்பம் முதல் நிறைவடையும் வரை முழுபொறுப்புகளையும் ஏற்று தமது சொந்த நிதியின் மூலம் கட்டிடத்தை முடித்து தந்த அல்ஹாஜ் மர்ஹூம் ஹம்தூன் (ஹம்தூன் சன்ஸ்) அன்னாரினதும் அவர்களின் குடும்பத்தினரதும் சேவையை எமது கிராம மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூர்கின்றனர். நிதியுதவி வழங்கியவர்களுள் இவ்வூரைச் சேர்ந்த அப்துல் லத்தீப் மரிக்கார் அன்னவர்களின் குடும்பத்தினரையும் நாடறிந்த கொடைவள்ளலான பேருவளை மர்ஹூம் நளீம் ஹாஜியாரையும் கிராம மக்கள் நன்றியுடன் நினைவு கூர்கின்றனர். அத்துடன் நக்ஷபந்தியா தரீக்காவின் உலகளாவிய ஆன்மீகத் தலைவராக திகழ்ந்த அஷ்ஷெய்க் முஹம்மது நாசிம் ஹக்கானி 1973,1986,1993 ம் ஆண்டுகளில் எமது பள்ளிவாயிலுக்கு வருகை தந்து முரீதீன்களுக்கு ஆன்மீக தர்பியாக்களும் அவ்ராதுகளும் வழங்கிவிட்டு சென்றதுடன் ஊர்மக்கள் அவரிடம் பைஅத் செய்து கொண்டமையும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய அம்சமாகும் .

அத்துடன் தஃவத் தப்லீக் உடைய பணியும் சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக எமது மஸ்ஜிதில் நடைபெற்று வருகிறது தற்போது அழகுமிக்க தோற்றத்துடன் காட்சியளிக்கின்ற நக்ஷபந்தியா ஜும்மா மஸ்ஜித் புதிய கட்டடம் 1978 ம் ஆண்டு செப்டெம்பர் மதம் திறந்து வைக்கப்பட்டது. எனினும் இவ்வளவு சிறப்பான எமது கிராம பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகை நடைபெறாமல் இருப்பது ஒரு பாரிய குறையாக எனக்குத் தெரியவே அன்றைய பள்ளி பரிபாலன சபைத் தலைவராக இருந்த ஜனாப்

அஹமத் பௌசியை, கபூரியா அரபுக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்த (மௌலவி எம்.ஆர்.எம்.நஜிமுதீன் ஆகிய) நான் நேரடியாக சந்தித்து இது தொடர்பாக எடுத்துக் கூறி ஊர்மக்கள் அனுபவிக்கின்ற சிரமங்களை அவருக்கு உணர்த்தினேன். அல்லாஹ்வின் நாட்டப்படி அவசரமாக ஜும்ஆ தொழுகையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை நிர்வாகக் குழுவுடன் இணைந்து அவர் மேற்கொண்டார். அதன் பயனாக 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதன் முதல் குத்பா எமது மஸ்ஜிதில் ஆரம்பமானது. முதல் குத்பாவை இலங்கையின் அன்று மூத்த ஆலிம்களில் ஒருவராக மிளிர்ந்த மர்ஹூம் மஸ்ஊத் ஆலிம் அவர்கள் நிகழ்த்தி வைத்தார்.


பள்ளிவாசலின் உள்ளக அமைப்பு

இதனைத் தொடர்ந்து சுமார் இரண்டு வருடங்களாக நான் அல்லாஹ்வின் உதவியோடு எவ்வித சன்மானமும் பெறாமல் , கபூரிய்யா மத்ரஸாவில் இருந்து இங்கு வந்து குத்பாப் பிரசங்கத்தை நிகழ்த்திச் சென்றதை இன்று நினைவு கூர்கிறேன். அப்போது கபூரியாவின் அதிபராக இருந்த மர்ஹூம் அல்ஹாஜ் முபாரக் ஹஸரத் குத்பாப் பிரசங்கத்தை நிகழ்த்திவிட்டு வருவதற்கு விசேட அனுமதி வழங்கியது மறக்க முடியாத நினைவாகும்.

1919 ம் ஆண்டு தொடக்கம் எமது நக்ஷபந்தியா மஸ்ஜிதுடன் இணைந்ததாக மன்பஉல் ஹிதாயா குர்ஆன் மத்ரஸாவும் நடைபெற்று வந்துள்ளது. களுத்துறை மாவட்டத்திலுள்ள குர்ஆன் மத்ரஸாக்களுள் மிக பிரபல்யம் பெற்ற மத்ரஸாவாக இது திகழ்ந்ததுடன் பாணத்துறைப் பிரதேசத்தில் நடைபெற்ற மீலாதுன் நபி போட்டிகளிலும் முதலாம் இடத்தைப்பெற்று அனைவரினதும் பாராட்டைப் பெற்ற குர்ஆன் மத்ரஸாவாக திகழ்ந்து வந்துள்ளது. அது இன்றும் அதே பெயரில் நடைபெற்று வருகின்றது. இதில் பகுதி நேர குர்ஆன் மனனப் பிரிவும் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

பிற்காலத்தில் மத்ரஸா மாணவர்களின் சுகாதாரம், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றிற்குப் பொறுப்பாக இருந்து வாரம் தோறும் மத்ரஸாவிற்கு சமுகமளித்து மேற்பார்வைக் கடமையில் ஈடுபட்டதுடன் ரமழான் மாதத்தில் தராவீஹ் தொழுகைக்கு பின் நடைபெறுகின்ற ஹிஸ்பு மஜ்லிஸை தலைமை தாங்கி நடாத்தி மாணவர்களுக்கு திருத்தமாக அல் குர்ஆனை கற்றுக்கொடுத்த மர்ஹூம் முஸம்மில் ஹாஜியாரை இவ்விடம் நன்றி உணர்வுடன் ஞாபகப்படுத்திக்கொள்கிறோம். அத்துடன் எமது பள்ளி பரிபாலன சபையின் கண்காணிப்பின் கீழ் மத்ரஸதுல் மன்பஉல் ஹுதா, குர்ஆன் மத்ரஸாவும் மத்ரஸதுல் மன்பஉல் ஹைராத் குர்ஆன் மத்ரஸாவும் மிகச் சிறப்பாக எமது ஊரில் இயங்கி வருகிறது. இதில் ஆண், பெண் இருபாலருக்கும் குர்ஆனை போதிக்கும் பணியை நக்ஷபந்தியா தக்கியாவின் கதீபாக மிக நீண்டகாலம் சேவை புரிந்த மர்ஹூம் செய்னுதீன் மரிக்கார் லெப்பை, அவருடன் இணைந்து முஅத்தீனாக கடமை புரிந்த மர்ஹூம் மஸ்ஊத் முஅத்தினாரையும் எமது தக்கியாவில் நடைபெற்று வந்த ராத்தீப் வைபவம் கந்தூரி வைபவங்களை முன்னின்று நடாத்தியவரும் பள்ளியில் இமாம்கள் விடுமுறை சென்றுள்ள போதெல்லாம் மஸ்ஜிதின் இமாமாக நின்று தொழுகை நடத்தியதுடன் இப்பிரதேசத்திற்கு அளப்பரிய சேவைகள் செய்த முன்னாள் விவகாப் பதிவாளர் மர்ஹூம் அல்ஹாஜ் ரஷீத் லெப்பை அவர்களையும், எமது கிராமத்தின் முதல் ஆலிம் மர்ஹூம் அப்துல் காதிர் அவர்களையும் நன்றியோடு ஒருகனம் நினைத்துப்பார்க்கிறோம்.

தற்போதுள்ள ஜும்ஆ மஸ்ஜித் அமையப் பெற்றுள்ள இடத்தின் ஒரு பகுதி நிலத்தினையும் அதனைச் சூழவுள்ள தற்போது மதில் கட்டப்பட்டுள்ள பெரிய நிலப்பகுதியை, கொறக்கானையைப் பிறப்பிடமாகவும் களுத்துறையில் வசித்தவருமான மர்ஹூம் நசீர் ஹாஜியாரும் அவரது குடும்பத்தினரும் சுமார் 80 பேர்ச்சஸ் நிலத்தை வக்பு செய்துள்ளனர். அதே போன்று தற்போது மையவாடி அமையப்பெற்றுள்ள நிலத்தை மர்ஹூம் ஏ.எஸ். மொஹமட் தாஹிர் அவர்களின் மனைவி ஹாஜியானி மர்ஹூமா சேய்நம்பு நாச்சியா தனக்கு சொந்தமான 72 பேர்ச்சஸ் அளவுள்ள நிலத்தை வக்பு செய்துள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன் சுமார் 16 ஜனாஸாக்கள் இம்மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டன. எனினும் 2008 ஆம் ஆண்டு முதலே சட்டரீதியாக அங்கீகாரம் பெற்ற மையவாடியாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எதற்கும் அயராது உழைத்த முன்னாள் நிருவாக சபை தலைவர் எம்.ஏ. பிர்தௌஸ் ஹாஜியாரையும் அவர்களது நிர்வாக சபை உறுப்பினர்களையும் என்றும் எமது ஊர் ஜமாஅத்தினர் நன்றியுடன் ஞாபகப்படுத்துகின்றனர் .

2019 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையினர், முன்னைய மையவாடியுடன் இணைந்ததாகக் காணப்பட்ட 7 பேர்ச்சஸ் நிலத்தை வாங்கி மையவாடியுடன் இணைத்துள்ளனர். இதனை வாங்குவதற்கு ஊர் ஜமாஅத்தினர் நலன் விரும்பிகள் தனவந்தர்கள் அனைவரினதும் உதவி ஒத்தாசை கிடைக்கப்பெற்றதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். தற்போது சுமார் ஒரு ஏக்கரை விட அதிகமாக நிலப்பரப்பை தன்னகத்தே உள்ளடக்கியதாகவும் சுமார் 1000 பேரளவில் நின்று தொழக்கூடியதாக விசாலமானதாகவும் இயற்கை எழில்மிகு அழகுத் தோற்றத்துடன் இன்று கம்பீரமாக காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.


பள்ளிவாசல் நிர்வாகிகள்



அல் மத்ரஸதுல் மன்பஉல் ஹைராத் மாணவிகள் பொறுப்பான முஅல்லிமாவுடன்



அல் மத்ரஸதுல் மன்பஉல் ஹைராத் மாணவர்கள்



மத்ரஸதுல் மன்பஉல் ஹுதா மாணவிகள்




மத்ரஸதுல் மன்பஉல் ஹுதா மாணவர்கள்


மத்ரஸதுல் ஹிதாயா மாணவர்கள் பொறுப்பான மௌலவி மார்களுடன்

கட்டுரை தயாரிப்பு உதவி





# ‘நோபோல்’ வழங்காத நடுவரை வேறு வேலை தேடும்படி ஹசரங்க அறிவுரை

## நடுவரின் முறைப்பாட்டால் நெருக்கடி

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டி20 சர்வதேச போட்டியின் பரபரப்பான கடைசி ஓவரில் உயர வந்த பந்துக்கு “நோ போல்” வழங்காத நடுவர் லைடன் ஹனிபல், வேறு வேலை தேடிக்கொள்வது நல்லது என்று இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க தெரிவித்துள்ளார்.

ரங்கிரி தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஸ்கொயர் லெக் நடுவராக இருந்த ஹனிபல், வபா மொமான்ட் கடைசி ஓவரில் வீசிய பந்து புல்டோஸ் பந்தாக கமிந்து மெண்டிஸின் இடுப்புக்கு மேலால் சென்றபோதும் நோபோல் பிடிக்கத் தவறியதை அடுத்தே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

“இவ்வாறான விடயங்கள் சர்வதேச போட்டிகளில் நடைபெறக் கூடாது. (இடுப்புக்கு) நெருக்கமாக பந்து சென்றிருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் அந்தப் பந்து உயரமாகச் சென்றது. இன்னும் சற்று உயரமாகச் சென்றிருந்தால் துடுப்பாட்ட வீரரின் தலையை தாக்கி இருக்கும்.




அதனை பார்க்க முடியாவிட்டால், அந்த நடுவர் சர்வதேச கிரிக்கெட்டுக்கு பொருத்தமாக இருக்க மாட்டார். அவர் வேறு வேலையை தேடுவது நன்றாக இருக்கும்” என்று போட்டிக்குப் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் ஹசரங்க குறிப்பிட்டார்.

கடைசி மூன்று பந்துகளில் வெற்றி பெற இலங்கை அணிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்படும்போதே இது நிகழ்ந்தது.

அந்தப் பந்தை நடுவர் சரியானது என கருதிய நிலையில் துடுப்பெடுத்தாடிய கமிந்து நடுவரிடம் நோபோல் கேட்டார். எனினும் நடுவர் தனது முடிவில் உறுதியாக இருந்தார்.

தொடர்ந்து கடைசிப் பந்தில் கமிந்து சிக்ஸர் ஒன்றை விளாசியபோதும் இலங்கை அணி இந்தப் போட்டியில் 3 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது. எனினும் இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடரை இலங்கை அணி 2–1 என கைப்பற்றியது.

இந்நிலையில் நடுவரை விமர்சித்தது தொடர்பில் வனிந்து ஹசரங்க சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முகம்கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

ஹசரங்கவின் நடத்தை குறித்து நடுவர் ஹனிபல் போட்டி மத்தியஸ்தரிடம் முறையிட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஹசரங்காவின் நடத்தை, ஐ.சி.சி நடத்தை விதிகளின் கீழ் அவருக்கு எதிராக 2ஆம் நிலை குற்றச்சாட்டிற்கு வழிவகுத்துள்ளது. முந்தைய குற்றத்திற்கு ஹசரங்கவுக்கு இரு தகுதியிழப்பு புள்ளிகள் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட டி20 சர்வதேச போட்டிகளில் இடைநிறுத்தப்பட வாய்ப்பு உள்ளது.



இந்த குற்றச்சாட்டு தொடர்பில் ஐ.சி.சி. இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்காதபோதும், ஹசரங்க குறிப்பிடத்தக்க விளைவுகளை எதிர்கொண்டுள்ளார்.

## வட மாகாணத்தில் 'மாபெரும்' மைலோ கால்பந்து சம்பியன்சிப்

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ வர்த்தக நாமத்தின் அனுசரணையில் இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 10 மற்றும் 12 வயதுக்குட்பட்ட வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட தொடரின் முதல் சுற்று போட்டிகள் 05 மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் நாளை (24) நடைபெறும் போட்டிகளுடன் ஆரம்பமாகும் இந்தத் தொடர், தொடர்ந்து முல்லைத்தீவு (மார்ச் 02), வவுனியா (மார்ச் 09), கிளிநொச்சி (மார்ச் 16) மற்றும் யாழ். (மார்ச் 22) மாவட்டங்களில் நடைபெறவுள்ளன. இதில் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் சுமார் 250 அணிகள் பங்கேற்கவுள்ளன. மாவட்ட மட்ட வெற்றியாளர்களாக 02 வயதுப் பிரிவுகளில் இருந்தும் 16 ஆடவர்–மகளிர் அணிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளன. இதன் இறுதிச் சுற்றுப் போட்டிகள் மார்ச் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெறும்.

## சுப்பர் சிக்ஸ் கிரிக்கெட் நாளை

கொழும்பு மாவட்ட மகளிர் கிரிக்கெட் சங்கத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவத்தின் அனுசரணையில் ஆடவர் மற்றும் மகளிருக்கான சுப்பர் சிக்ஸ் மென்பந்து கிரிக்கெட் தொடர் நாளை (24) மற்றும் நாளை மறுதினம் (25) வெலிசர நவலோக்க கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளுக்கான போட்டிகள் வெவ்வேறாக நடைபெறவுள்ளன. ஆட்ட நாயகன், தொடர் நாயகன், சிறந்த களத்தடுப்பாளர் போன்ற விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

இதில் லங்கா ஐ.ஓ.சி. உட்பட முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த 13 அணிகள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திபக் தாஸ் பிரதம அதிதியாக பங்கேற்கவுள்ளார். இவ்வாறான போட்டித் தொடர் ஒன்றுக்கு லங்கா ஐ.ஓ.சி. அனுசரணை வழங்குவது இதுவே முதல் முறையாகும்.

பல தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளில் அடிமட்ட விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கும் விளையாட்டுகளில் பன்மைத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் நெஸ்லே மைலோ, ஊட்டச்சத்தின் மூலம் சிறுவர்களை முன்னேற்றும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

## சர்வதேச செய்திகள்



# காசாவின் ரபா நகரில் இஸ்ரேல் உக்கிர தாக்குதல்: தொடரும் போர் நிறுத்த பேச்சு

## பலஸ்தீன நாட்டை இஸ்ரேல் பாராளுமன்றம் நிராகரிப்பு

தரைவழி தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கும் தெற்கு காசாவின் ரபா நகர் மீது இஸ்ரேல் சரமாரியாக வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தின் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல்–ஹமாஸ் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டிருக்கும் சூழலில், போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சியாக அமெரிக்க தூதுக் குழு ஒன்று நேற்று (22) இஸ்ரேலை சென்றடைந்தது.

மறுபுறம் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் புதிய உடன்படிக்கை ஒன்றில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக இஸ்ரேல் போர் அமைச்சரவை உறுப்பினரான பென்னி கான்ட்ஸ் ஜெரூசலத்தில் வைத்து தெரிவித்துள்ளார். போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்தில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் தாக்குதல் காரணமாக அங்கு ஏற்பட்டிருக்கும் பெரும் உயிரிழப்புகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடி சர்வதேச அளவில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்று அங்கு கூடாரங்களில் மக்கள் நிரம்பி வழிந்து வருகின்ற சூழல் கவலையை அதிகரித்துள்ளது.

இந்த நகர் காசாவில் இஸ்ரேலிய தரைப்படை புகாத ஒரே நகராக இருப்பதோடு எகிப்து வழியாக காசாவுக்கு உதவிகள் வரும் வாயிலாகவும் காணப்படுகிறது.

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள புனித ரமழான் மாதத்திற்கு முன்னர் பணயக் கைதிகள் விடுவிக்கப்படாத பட்சத்தில் ரபா நகர் மீது தரைவழி படை நடவடிக்கை விரிவுபடுத்தப்படும் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

### வீடுகள் இலக்கு

எனினும் இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் குறித்து ரபா குடியிருப்பாளர்கள் நேற்று குறுஞ்செய்தி மூலம் எச்சரிக்கப்பட்டனர். அந்த நகரின் கடற்கரைப் பகுதிகள் கூட இஸ்ரேலிய கடற்படை படகுகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகின.

ரபாவில் உள்ள அல் நூர் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இடம்பெற்ற தாக்குதல் ஒன்றை அடுத்து அங்கு பதிவு செய்யப்பட்ட வீடியோவை ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் வெளியிட்டுள்ளார். தாக்குதலில் அந்த வீடு தரைமட்டமாக்கப்பட்டிருப்பதும், கொல்லப்பட்டவர்கள் வெள்ளை அல்லது கறுப்பு போர்வைகளால் போர்த்தப்பட்டிருப்பதும் அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது.

அல் நூர் குடும்பத்தைச் சேர்ந்த தனது மனைவி நூர், தனது ஒரு வயது மகள் மற்றும் மனைவியின் பெற்றோர்கள், சகோதரர் மற்றும் மற்ற உறவினர்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக அப்துல்ரஹ்மான் ஜுமா குறிப்பிட்டார்.

இரத்தம் தோய்ந்த வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட தனது மகளின் உடலை சுமந்த வண்ணம் இருந்த ஜுமா, “எனது மடியில் இருக்கும் இவள் எனது ஆன்மாவை எடுத்துச் சென்றுவிட்டாள். இவளுக்கு இரண்டரை வயதுதான் ஆகிறது” என்று குறிப்பிட்டார்.

மறுபுறம் கான் யூனிஸ் நகரில் இருந்து மேற்காக மவாசிக்குள் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறி வருவதாக உள்ளூர் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். முன்னர் இந்தப் பகுதி பாதுகாப்பான இடம் என்றும் மக்களுக்கு அடைக்கலம் பெறும்படியும் இஸ்ரேல் அறிவுறுத்தி இருந்தது.

டாங்கிகள் கடற்கரை வீதியை அடைந்த நிலையில் அது காசாவின் மற்ற பகுதிகளில் இருந்து கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களை துண்டிப்பதாக இருந்தது. எனினும் அந்த டாங்கிகள் சில மணி நேரங்களில் அந்தப் பகுதியில் இருந்து வாபஸ் பெற்றதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

காசாவின் தென் பகுதியில் பல வீடுகள் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 20 பேர் வரை கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

மத்திய காசாவில் காதிபான் குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களாவர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில் 90க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று கூறியது. இதன்படி அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 29,410 ஆக உயர்ந்திருப்பதோடு மேலும் 69,465 பேர் காயமடைந்துள்ளனர்.



### மேற்குக் கரையிலும் சூடு

காசாவில் தொடர்ந்து எதிர்ப்பை சந்தித்து வரும் இஸ்ரேலிய படைகள், மத்திய காசாவில் செயல்பட்டு வரும் நான்கு ஹமாஸ் படைப்பிரிவுகளையும் தோற்கடிக்கவில்லை என்று இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது. வடக்கில் உள்ள காசா நகரின் செய்தூன் பகுதியில் பலஸ்தீன போராளிகள் கடந்த புதனன்று நடத்திய மூன்று தாக்குதல்களில் இஸ்ரேலிய படைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கான் யூனிஸின் தென் பகுதியிலும் மோதல் தீவிரமாக இடம்பெற்று வருவதோடு இஸ்ரேலிய சிறப்புப் படைகள் மற்றும் துருப்புகள் மீது பலஸ்தீன போராளிகள் பதுங்கியிருந்து ரொக்கெட்டுகள், ஆர்.பீ.ஜீக்கள் மற்றும் சிறு ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதாக போர் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் ஐ.நா நிறுவனங்கள் உட்பட 18 மனிதாபிமான உதவி அமைப்புகள் கூட்டாக வெளியிட்டிருக்கும் அறிவிப்பு ஒன்றில், காசாவில் நீர் உட்பட உயிர் வாழ்வதற்கு அவசியமான அடிப்படை தேவைகளில் கடும் பற்றாக்குறை நிலவி வருவதாக எச்சரித்துள்ளன.

“உலகமே பார்த்திருக்கும்போது காசாவில் உள்ள பொதுமக்கள் பெரும் ஆபத்தில் உள்ளனர்” என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா போரை ஒட்டி ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்திற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு ஒன்றில் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டு மேலும் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் மாலே அடுமின் குடியேற்றத்திற்கு அருகில் நெடுஞ்சாலை ஒன்றில் வாகன நெரிசலில் சிக்கிய கார் ஒன்றின் மீது மூன்று ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது இஸ்ரேலிய படையினர் இரு துப்பாக்கிதாரிகளை சுட்டுக் கொன்றதாகவும் மூன்றாவது நபரை கைது செய்ததாகவும் அது கூறியது.

காசா போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலம் மற்றும் மேற்குக் கரையில் இஸ்ரேலிய படை மற்றும் குடியேற்றவாசிகள் நடத்திய தாக்குதல்களில் சுமார் 100 சிறுவர்கள் உட்பட 394 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ரமழான் மாதத்தில் ஜெரூசலத்தில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு பலஸ்தீனர்கள் நுழைவதில் இஸ்ரேல் கட்டுப்பாடுகளை விதிக்க திட்டமிட்டிருக்கும் நிலையில் அது காசா போருக்கு மத்தியில் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிக்கும் என்று ஜோர்தான் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

“அல் அக்ஸா பள்ளிவாசலில் ஏதேனும் பதற்றம் ஏற்பட்டால், அது மோதல் முழு பிராந்தியத்திற்கும் விரிவடையும் சாத்தியத்தை கணிசமாக அதிகரிக்கும்” என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

### தொடரும் பேச்சு

வெள்ளை மாளிகையின் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவுக்கான இணைப்பாளர் பிரெட் பக்கேர்க் நேற்று இஸ்ரேலை சென்றடைத்தார். போர் நிறுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அவர் எகிப்து சென்ற நிலையிலேயே இஸ்ரேலை அடைந்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளுக்காக ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே கெய்ரோவில் இருப்பதாக அந்த அமைப்பு கூறியது.

பணயக்கைதிகளை மீட்பதற்கான புதிய திட்டம் ஒன்றை முன்னெடுக்கும் முயற்சி இடம்பெற்ற வருவதாக இஸ்ரேலின் கான்ட்ஸ் குறிப்பிட்டார்.

“முன்னேற்றப் பாதைக்கான சாத்தியத்தை காண்பிக்கும் முதல் சமிக்ஞையை நாம் காண்கிறோம்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணயக்கைதிகளை விடுவித்து, மனிதாபிமான உதவியைப் பெற முடியுமான தற்காலிக போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்தும் ஒப்பந்தத்தை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார். எனினும் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் விபரம் அளிக்க அவர் மறுத்துள்ளார்.

எனினும் ஹமாஸை அழித்து பணயக் கைதிகளை விடுவிக்கும் வரை இராணுவம் தொடர்ந்து போராடும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தி வருகிறார்.

நெதன்யாகு இஸ்ரேல் பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை முன்வைத்த, பலஸ்தீன நாடு ஒன்றுக்கான ஒருதலைபட்சமான அங்கீகாரத்தை எதிர்க்கும் பிரேரணைக்கு அதிகப் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையிலான விரிவான அமைதித் திட்டம் ஒன்றுக்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகமும் அரபு நாடுகளின் சிறு குழு ஒன்றும் பணியாற்றி வருவதாக வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்ட நிலையிலேயே இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் பலஸ்தீன நாடு ஒன்றை அமைப்பதற்கு உறுதியான கால எல்லை ஒன்றை வகுப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாக அந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கேள்விக்கான அழைப்பு

## மத்திய மாகாண சபை

## மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

### 2024ம் ஆண்டிற்கு தேவையான கால்நடை மருந்துகள் மற்றும் பிரயோகப் பொருட்களை கொள்வனவு செய்தல்

### கேள்வி இலக்கம் - சிபீசி/ஏபிஎச்/02/13/2024/01

மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் வேண்டுதலின் பிரகாரம் மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்காக கால்நடை மருந்துகள் மற்றும் பிரயோகப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தகைமை மற்றும் அனுபவமுள்ள அதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு மீளளிக்கப்படாத ரூ. 15,000.00 தொகையை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டியதுடன், மீளளிக்கப்படும் கேளவப் பிணைக்காக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு தொகையை, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் பிணையின் மூலம் அல்லது 2020.10.28ம் திகதிய பெறுகை வழிகாட்டல் அத்தியாயம் 30 இன் பிரகாரம் நிலையாகத் தரப்பட்டுள்ள நிறுவனத்தினால் அல்லது மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் நிதி வைப்புச் செய்தல் மூலம் மேற்கொள்ளலாம். அதன் பிரகாரம் கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் கால்நடை மருந்துகள் மற்றும் பிரயோகப் பொருட்கள் மாத்திரம் அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு நிதித் தொகைக்கு கேள்விப் பிணையை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை 2024.02.26 முதல் 2024.03.15 வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரையான காலத்திற்குள் மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் நிதி உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கால்நடை மருந்துகள் மற்றும் பிரயோகப் பொருட்களை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட சகல விபரங்களும் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொ. இல. | விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி: வங்கிப் பிணைமுறி (ரூபா) | காசாக வைப்புச் செய்தல் (ரூபா) |
|---|---|---|---|
| | **DRUG IMPREST** | | |
| 1 | Amoxycillin Trihydrate Injection | 16,564.80 | 8,282.40 |
| 2 | Anti bloat Oral Preparation | 3,675.52 | 1,837.76 |
| 3 | Atropine Sulphate Injection | 500.50 | 250.25 |
| 4 | Benzathine Penicillin and Procain Penicillin injection - LA | 12,920.00 | 6,460.00 |
| 5 | Diminazine Aceturate Powder /Sachet Packs | 16,925.00 | 8,462.50 |
| 6 | Butaphosphan and Cynocobalamin Injection | 6,570.45 | 3,285.23 |
| 7 | Calcium Borogluconate Injection | 15,545.88 | 7,772.94 |
| 8 | Ceftriaxone (1 gm) Injectable Preparation. | 6,792.50 | 3,396.25 |
| 9 | Chlopheneramine Maleate Injection | 7,984.00 | 3,992.00 |
| 10 | Cotton Bandages -3" | 746.55 | 373.28 |
| 11 | Dexamethasone 2mg/ml Injection | 2,388.00 | 1,194.00 |
| 12 | Dexamethasone 4mg/ml Injection | 7,926.10 | 3,963.05 |
| 13 | Glucose or Dextrose 5 % injection BP in packs of 500 ml | 5,360.75 | 2,680.38 |
| 14 | Glucose or Dextrose 50 % injection BP in packs of 20 ml | 1,952.82 | 976.41 |
| 15 | Diazepam Injection | 2,940.00 | 1,470.00 |
| 16 | Drip Set /Infusion set | 1,143.75 | 571.88 |
| 17 | Enrofloxacine LA Injection | 4,146.69 | 2,073.35 |
| 18 | Frusemide Injection | 486.20 | 243.10 |
| 19 | Hydrocortisone Sodium Succinate Injection | 902.25 | 451.13 |
| 20 | Imidocarb Injection | 4,890.60 | 2,445.30 |
| 21 | Ivermectin 1% Injection | 5,144.25 | 2,572.13 |
| 22 | Multivitamin Injection | 5,856.75 | 2,928.38 |
| 23 | Mepyramine maleate Injection | 3,759.00 | 1,879.50 |
| 24 | Metachlopromide Injection | 285.60 | 142.80 |
| 25 | Metronidazole Injection | 7,888.91 | 3,944.46 |
| 26 | Microscope Glass Slides | 132.00 | 66.00 |
| 27 | Wound healing Powder | 5,943.84 | 2,971.92 |
| 28 | Normal Saline | 4,865.69 | 2,432.84 |
| 29 | Osmofundin 20 % injection | 910.14 | 455.07 |
| 30 | 5% Oxytetracycline Injection | 1,955.00 | 977.50 |
| 31 | 10% Oxytetracycline Injection | 2,379.00 | 1,189.50 |
| 32 | 20% Oxytetracycline Injection | 21,926.10 | 10,963.05 |
| 33 | Oxytocin Injection | 2,054.00 | 1,027.00 |
| 34 | Glucose & Multielectrolytes 500ml Bottles | 7,728.97 | 3,864.48 |
| 35 | Scalp vein set 25 G (Butterfly Needles 100 Nos Packs) | 801.00 | 400.50 |
| 36 | Sodium Lactate Solution | 3,187.30 | 1,593.65 |
| 37 | Stockholm Tar 1L | 6,633.00 | 3,316.50 |
| 38 | Sulpha+Trimethoprim Injection | 4,128.00 | 2,064.00 |
| 39 | Udder Infusion | 14,580.72 | 7,290.36 |
| 40 | Vit A D3 E Injection | 4,721.04 | 2,360.52 |
| 41 | Vit E+Selenium Injection | 2,895.60 | 1,447.80 |
| 42 | Xylazine Injection | 5,111.00 | 2,555.50 |
| 43 | Lignocain Injection | 503.50 | 251.75 |
| 44 | RTU Diminazine Aceturate | 1,540.00 | 770.00 |
| 45 | Ketoprofen | 6,188.00 | 3,094.00 |
| 46 | Adhesive Plasters 3" ( 5 yards )Rolls | 752.60 | 376.30 |
| 47 | Cotton Wool (500 g ) Packs | 3,105.00 | 1,552.50 |
| 48 | Disposable Gloves (100nos Packs) Large size | 562.05 | 281.03 |
| 49 | Disposable Gloves (100nos Packs) Medium size | 6,245.00 | 3,122.50 |
| 50 | Disposable Syringe 20cc (50 Nos Packs) | 6,000.00 | 3,000.00 |
| 51 | Disposable Syringe 3cc (100 Nos Packs) | 4,014.00 | 2,007.00 |
| 52 | Disposable Syringe 10 cc | 3,200.00 | 1,600.00 |
| 53 | Needles Disposable 21G (100 Nos Packs ) | 576.10 | 288.05 |
| 54 | Needles Disposable 22G (100 Nos Packs ) | 411.50 | 205.75 |
| 55 | Needles Disposable 26G (100 Nos Packs ) | 164.60 | 82.30 |
| 56 | Povidone Iodine Solution | 3,125.00 | 1,562.50 |
| 57 | Savlon Cetrimide | 1,000.00 | 500.00 |
| 58 | Surgical Blade 23G | | - |
| 59 | Suture Nylon Medium (100 Nos Packs) | 1,329.00 | 664.50 |
| 60 | Needles suture size 9 or 10 (Regular eye curved cutting edge Packs) | 67.20 | 33.60 |
| | **மொத்தம்** | ***272,032.82*** | ***136,016.41*** |
| | **CONDUCTING OF MOBILE VETERINARY CLINICS - (PSDG)** | | |
| 61 | Mineral mixture for Mobile Clinic | 92,664.00 | 46,332.00 |
| 62 | Tick Control Medicine of Farm Animals | 62,304.00 | 31,152.00 |
| 63 | Deworming Medicine of Farm Animals -2500mg | 27,720.00 | 13,860.00 |
| | **மொத்தம்** | ***182,688.00*** | ***91,344.00*** |
| | **IMPROVEMENT BREEDING EFFICIENCY OF COWS BY PROVIDING VITAMINS & MINERALS - (PSDG)** | | |
| 64 | Mineral Block for Breeding Effecency | 54,000.00 | 27,000.00 |
| 65 | Vitamins for Breeding Effecency | 39,150.00 | 19,575.00 |
| 66 | Deworming Medicine of Farm Animals 3000mg | 6,750.00 | 3,375.00 |
| | **மொத்தம்** | ***99,900.00*** | ***49,950.00*** |
| | **Improve calf health status for reduce calf mortality, Improve growth & birth recording - (PSDG)** | | |
| 67 | Deworming Medicine of Farm Animals 600mg | 16,000.00 | 8,000.00 |
| 68 | Deworming Medicine of Farm Animals 1500mg | 18,000.00 | 9,000.00 |
| | **மொத்தம்** | ***34,000.00*** | ***17,000,00*** |
| | **Hadning of Infertility with Hormones treatments - (PSDG)** | | |
| 69 | PGF2 | 10,395.00 | 5,197.50 |
| 70 | Gnrh Hormone | 12,437.50 | 6,218.75 |
| 71 | Progesterone 1.56g Hormone | 8,000.00 | 4,000.00 |
| 72 | Que-mate Applicator | 500.00 | 250.00 |
| | **மொத்தம்** | ***31,332.50*** | ***15,666.25*** |
| | **முழுத்தொகை** | ***619,593.32*** | ***309.976.66*** |

குறித்த கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளும் கேள்விப் பத்திரம் மூலம் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.03.18 முற்பகல் 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு மத்திய மாகாண விவசாய அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உங்களால் கொண்டு வரப்பட்டு உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி வேறு வேறு உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு பொறியிட்டு ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கால்நடை மருந்துகள் மற்றும் பிரயோகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2024' என்று குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலை மனுக்களை ஏற்றுக் கொள்ளல் நிராகரித்தல் அல்லது இப் பெறுகை பற்றிய இறுதி தீர்மாணத்திற்கு வரும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது. மாதிரிகளை கவணத்தில் கொள்வதற்காக தேவைப்படும் வேளையில் சாம்பிளை சமர்ப்பித்தல் வேண்டும். இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.03.04ம் திகதி மு.ப. 10.00 இற்கு மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் நடைபெறும். அதற்காக உங்களது பிரதிநிதியொருவர் வருகை தரல் கட்டாயமாகும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொழில்நுட்ப விடயங்களுக்காக - மேலதிக மாகாண பணிப்பாளர் (மத்திய) - 0812-386704
பெறுகை விடயங்களுக்காக - கணக்காளர் - 0812-068251

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**மத்திய மாகாண விவாசய அமைச்சு,**
**த.பெ. 65, கெட்டம்பே, பேராதனை.**

2024.02.23

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், வடமத்திய மாகாணம்

### உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நிதியிடல்

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)

### செயற்றிட்ட அடையாளம்: P 163305

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு செலுத்துவதற்கு விரும்புகிறது.

   - **நொச்சியாகம பிரதேச சபை கேட்போர்கூடத்தின் புதுப்பித்தல் வேலைகள்**
   - **வெலிகந்த நீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துதல்**
   - **மதவாச்சி பிரதேச சபையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உள்நாட்டு உணவகத்தில் (Helabojun hala) புதிய பொது மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்தல்.**

2. பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் சார்பாக மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் செயற்படுத்தப்படும்.

4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கான தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் / ஆணையாளரிடமிருந்து மேலதிக தகவல்களை வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 025-2234728, தொலைநகல்: 025-2234738 மின்னஞ்சல்: ncplg2020@gmail.com)

7. 2024-02-22ஆம் திகதி முதல் 2024-03-13ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் / ஆணையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.

8. 2024-03-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் / ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

9. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள இயைபுடைய திட்டங்களின் தொகைக்கான விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு மற்றும் ஒப்பந்தக் காலம் | CIDA தரம் மற்றும் விசேடத் துவம் | விலை மனுக்கள் செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் பிணைத் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் (வரையில்) | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டத் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நொச்சியாகம பிரதேச சபையின் கேட்போர்கூடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 12.35 மில். 120 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024-05-30ஆம் திகதி வரை | 2024-06-27 150,000.00 | 2024-03-04 மற்றும் பி.ப. 1.30 மணிக்கு | 10,000.00 |
| 2. | வெலிகந்த நீர் வழங்கல் திட்டத்தின் மேம்படுத்தல் வேலைகள் | 34.17 மில். 150 நாட்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 2024-07-11ஆம் திகதி வரை | 2024-08-08 700,000.00 | 2024-02-08 மற்றும் மு.ப. 10.30 மணிக்கு | 10,000.00 |
| 3. | மதவாச்சி பிரதேச சபையில் புதிதாக நிர்மாணிக் கப்பட்டுள்ள உள்நாட்டு உணவகத்தில் (**Helabojun hala**) புதிய பொது மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்தல். | 5.86 மில். 120 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024-05-30ஆம் திகதி வரை | 2024-06-27 75,000.00 | 2024-03-04 மற்றும் மு.ப. 10.30 மணிக்கு | 5,000.00 |

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**மாகாண சபைகள் கட்டிடத் தொகுதி,**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அனுராதபுரம்.**

- HOUSES
- LANDS
- COMMERCIAL PROPERTIES
- APARTMENTS
Sunday Observer
adz it's what you want
Buy & Sell
Rent or Lease
Wanted
HOUSE & PROPERTY SECTION


## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு

317

**வெற்றிடங்கள்**

**டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்**

கொழும்பு 12 சுற்றிலிருந்து வீட்டுக்கு வந்து ஜுகி மிஷின் மூலம் தைக்கக் கூடிய அனுபவமுள்ள பெண் ஒருவரைத் தேடுகிறோம். 0777 888358. 011534

---

இணைப்பு 01

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்

### பிரிவு 55

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில் கம்புராகல்லை எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 510633, கண்ட இல 04, துண்ட இல. 66/70/71ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 335/4, ஃபர்னி லங்கா வீதி, கம்புராகல்லை, ருக்கஹவிலை எனும் விலாசத்தைக் கொண்ட ஹரங்கஹ ஆரச்சிலாகே சுனீதா இந்திராணி ஹரங்கஹஆரச்சி எனும் ஆள் 2017.08.27 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 49/1/B பட்டதொலே வீதி, நிட்டம்புவை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.23ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

---

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**
**1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520006 கண்ட இல. 22 துண்ட இல. 0024 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 30, பிட்டிபன வடக்கு, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட மாத்தறகே தொன் லீலாரத்ன (2021.05.27) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.03.23ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**
**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**
**பிரிவு - 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் மத்தேகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல.520008 கண்ட இல.07 துண்ட இல.0005 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த சல்கஸ் சந்தி, மத்தேகொட எனும் விலாசத்தைக் கொண்ட ஓமந்தகே நிமல் ஜயந்த பியசிரி பெரேரா எனும் ஆள் 2023.09.04 திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல.6, முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.03.16 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

---

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்

### பிரிவு 55

கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் மாபாடுல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 320498 கண்ட இல. 02 பத்திர இல. 01 துண்ட இல. 53 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 390, 5வது தூண், நுகவெல (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட நாவலப்பிட்டியே கெதர குணபால சமரநாயக (முழுப் பெயர்) எனும் ஆள் 2023.03.26ம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 1/118/4, கலகெதர வீதி ககெச் தொட என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.03.22 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்

### பிரிவு 55

களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 709B நுககொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 530138 பிரிவு இல. 04 தாள் இல. 01 துண்டு இல.062 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த வஸ்கடுவ, நுககொட பனாபிட்டிய வீதி, தெல்துவ எஸ்டேட், இல. 35 எனும் விலாசத்தைக் கொண்ட மஹபதுகே லலித் பிரனாந்து என்பவர் 2021.12.01 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 02ஆம் மாடி, மாவட்ட செயலாளர் அலுவலகம் களுத்துறை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.03.23 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

## பொது அறிவித்தல்

### 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 244(3)ஆம் பிரிவு மற்றும் 9(2)ஆம் பிரிவுகளின் கீழானது

### எல் ஓ எல் சி டெக்னோலிஜி சேர்விசஸ் லிமிட்டட் உடன் எல் ஓ எல் சி டெக்னோலொஜீஸ் இன் கூட்டிணைவு மற்றும் கம்பனியின் பெயர் மாற்றம் ஆகியவைகளை பூர்த்தி செய்தலின் அறிவித்தல்

2023 ஜுன் 30 ஆம் திகதியிலிருந்து கம்பனிகள் சட்டமூலம் Viii இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமூல 242(2) ஆம் பிரிவின் கீழ் எல் ஓ எல் சி டெக்னோலிஜி சேர்விசஸ் லிமிட்டட் உடன் எல் ஓ எல் சி ஐ கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் எல் ஓ எல் சி டெக்னோலொஜி சேர்விசஸ் லிமிட்டட் (PB 3788) என தொடர்ந்தும் செயலாற்றுமென அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

மேலும், ஒன்றிணைப்பின் விளைவாக மேற்கூறப்பட்ட எல் ஓ எல் சி டெக்னோலொஜி சேர்விசஸ் லிமிட்டட் (PB 3788) 2023 ஜுலை 22 ஆம் திகதியிலிருந்து கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | எல் ஓ எல் சி டெக்னோலொஜீஸ் லிமிட்டட் |
| பதிவிலக்கம் | : | PB 3788 |
| பதிவு முகவரி | : | 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய. |
| புதிய பெயர் | : | எல் ஓ எல் சி டெக்னோலொஜீஸ் லிமிட்டட் |
| மாற்றப்பட்ட திகதி | : | 2023 ஜுலை 22 |

எல் ஓ எல் சி டெக்னோலொஜீஸ் லிமிட்டட் இன் பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப் பிரகாரம்,

**எல் ஓ எல் சி கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**எல் ஓ எல் சி டெக்னோலிஜீஸ் லிமிட்டட்டிற்கான செயலாளர்கள்**

**2024 பெப்ரவரி 22.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்

### உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டம்

1. Skid Steer Loader, Backhoe Loader, Truck with Garbage compactor and Gulley Bawser களை வழங்குதல், இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை அந்தந்த உள்ளூர் அதிகாரசபைகள் (ஊவா மாகாணம்) இன் சார்பாக உள்ளூராட்சித் திணைக்களம் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| இல. | பொருட்களின் விபரம் | விநியோக அமைவிடம் மற்றும் விநியோக காலம் | குறைந்த சட்ப தகைமை | விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|
| LDSP/UP/BD/ EPS/G/24/01 | புத்தம் புதிய பாவிக்காத Skid Steer Loader வழங்குதல், இயக்குதல், பராமரித்தல் | எல்ல 60 நாட்கள் | குறைந்த பட்சம் 10 வருட காலத்திற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஓர் நிறுவனமாக இருத்தல் | ரூபா 55,000.00 2024.06.15 வரை செல்லுபடியாகுதல் |
| LDSP/UP/MO/ BKPS/G/24/01 | புத்தம் புதிய பாவிக்காத Backhoe Loader வழங்குதல், இயக்குதல், பராமரித்தல் | படல் கும்புர 60 நாட்கள் | குறைந்த பட்சம் 10 வருட காலத்திற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஓர் நிறுவனமாக இருத்தல் | ரூபா 110,000.00 2024.06.15 வரை செல்லுபடியாகுதல் |
| LDSP/UP/MO/ MOPS/G/24/01 | புத்தம் புதிய பாவிக்காத Truck with Garbage Compactor வழங்குதல், இயக்குதல், பராமரித்தல் | மொனராகல 60 நாட்கள் | குறைந்த பட்சம் 10 வருட காலத்திற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஓர் நிறுவனமாக இருத்தல் | ரூபா 70,000.00 2024.06.15 வரை செல்லுபடியாகுதல் |
| LDSP/UP/MO/ MOPS/G/24/02 | புத்தம் புதிய பாவிக்காத Gulley Bawser வழங்குதல், இயக்குதல், பராமரித்தல் | மொனராகல 60 நாட்கள் | குறைந்த பட்சம் 10 வருட காலத்திற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஓர் நிறுவனமாக இருத்தல் | ரூபா 30,000.00 2024.06.15 வரை செல்லுபடியாகுதல் |

2. தேவைப்பாடுகளை ஸ்தாபிக்கும் எல்லா ஆவணங்களும் விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தகைமைத் தேவைப்பாடுகள் ஆரம்ப விலைமனு மதிப்பீட்டிற்கு பிரயோகப்படுத்தப்படும். குறைந்தபட்ச தகைமைகளை அடைவதற்கு தவறும் எந்த விலை மனுவும் நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுவூடாக நடத்தப்படும்.
4. ஆர்வமுள்ள தகைமையுள்ள விலைமனுதாரர்கள் உ.அ.ஒ.தி. பதுளை மற்றும் மொனராகலை மாவட்ட பொறியியலாளர் (clguva@gmail.com ) இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2024.02.23 முதல் 2024.03.14 வரை பதுளை, மார்டின் சில்வா மாவத்த, உள்ளூராட்சி திணைக்களத்தில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
5. மின்னஞ்சல் clguva@gmail.com அல்லது வட்ஸ்அப் இல. 071 4951055 ஊடாக ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 5000ஐ செலுத்துவதன் பேரில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை 2024.02.23 முதல் 2024.03.14 வரை கீழே முகவரியிடப்பட்ட உள்ளூராட்சி திணைக்களம் - ஊவா திணைக்கள பெறுகைக் குழு தலைவருக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் 2024.03.15 பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உள்ளூராட்சி திணைக்களம், திணைக்கள பெறுகைக் குழு தலைவருக்கு முகவரியிடப்பட்டு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2024.03.15 பி.ப. 2.00 மணிக்கு உள்ளூராட்சி திணைக்களம் - ஊவா, திணைக்கள பெறுகைக் குழுவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அல்லது ஒன்லைன் மூலம் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024.05.15 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. எல்லா விலைமனுவுடனும் ஓர் விலைமனுப் பிணை இணைத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக்கொள்ளும் வங்கி உத்தரவாதத்தை விலைமனுப் பிணையுடன் இணைத்தல் வேண்டும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டம் (LDSP),**
**திட்ட செயற்பாட்டுப் பிரிவு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**
**055-2222407.**

23.02.2024

---

## கேள்வி கோரலுக்கான அழைப்பு

### கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்

### கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோருதல்

**வலயக் கல்வி அலுவலகம் கொழும்பு மேல் மாகாணம்**

கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | பொருட்கள் / பண்டங்கள்/ சேவைகளின் வகை | மீளளிக்கப்படும் பிணை வைப்பு ரூ. ச. | மீளளிக்கப் படாத கட்டணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | கணனிகள் 15 | 28000.00 | 500.00 |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்வி கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.

04. மேற்படி கேள்விக்காக 2024-02-26ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-03-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான கடமை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் என்பதுடன் கேள்வி ஆவணப் பிரதிகளை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை வலயக் கல்வி அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

05. கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் பெயருக்கு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் (ரூபா 500.00) செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2024-03-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர், கொழும்பு வலயக் கல்வி அலுவலகம், விதானகே மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் .................. பொருட்டான விலைமனுக்கள் எனச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடன் 2024-03-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் 0112447116 எனும் தொலைபேசி இலக்கத்தில் வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு வலயக் கல்வி அலுவலகம்,**
**விதானகே மாவத்தை,**
**கொழும்பு-02.**






# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் காலவரையின்றி கற்றல் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருக்க தீர்மானித்துள்ளனர். விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் வரவு பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக விசேட நிர்வாக கூட்டத்தில் (board meeting) கலந்துரையாடுவதற்கு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையால் வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் தொடர்பாக நேற்றையதினம் விஞ்ஞான பீட பீடாதிபதி மற்றும் துறைத்தலைவர்களுக்கு, விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினரால் எச்சரிக்கை கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

அக்கடிதத்தில் நேற்று நண்பகலுக்குள் சாதகமான தீர்வு கிடைக்காது விட்டால் காலவரையற்ற போராட்டம் முன்னெடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கசிப்புடன் கைதான பெண்ணுக்கு தண்டப்பணம் விதிப்பு

**(யாழ். விசேட நிருபர்)**

கசிப்புடன் கைதான பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் வைத்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் பெண்ணொருவர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் விசாரணைகளுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது குற்றத்தை ஒப்புகொண்டார்.

# வடக்கின் உதயம்

### கரைதுறைப்பற்று

## பிரதேச சபை செயலாளராக ஜெயக்குமார் ராசஜோகினி நியமனம்

**(மாங்குளம் குறூப் நிருபர்)**



கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளராக ஜெயக்குமார் ராசஜோகினி நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்

கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளராக ஜெயக்குமார் ராசஜோகினி அண்மையில் நியமிக்கப்பட்டார்.

2023ஆம் ஆண்டுக்கான வட மாகாண ரீதியில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சேவை பதவியுர்வு பரீட்சை (Supra Exam) பெறுபேறுகள் அடிப்படையில் மாகாண ரீதியில் முல்லைத்தீவு மாவட்ட திணைக்களங்களிலிருந்து தோற்றிய அதிகாரிகளில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் ராசஜோகினி ஆறாவது இடத்தை பெற்றிருந்தார்.

இந்நிலையில் இவர் நேற்றுமுன்தினம் கரைதுறைப்பற்று பிரதேசசபையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

# காதலர் தினத்தன்று மனைவிக்கு பரிசளிப்பதற்காக நகைகள் திருட்டு

### இருவர் கைது செய்யப்பட்டனர்

**(பருத்திதுறை விசேட நிருபர்)**

காதலர் தினத்தன்று தனது மனைவிக்கு பரிசளிப்பதற்காக 29 பவுண் நகைகளை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய கணவர் உள்ளிட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 25 வயதான ஆணும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 49 வயதான பெண் ஒருவருமே இவ்வாறு காங்கேசன் துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

காதலர் தினத்தன்று வல்வெட்டித் துறை பகுதியில் முதியவர்கள் உள்ள வீட்டினுள் 29 பவுண் நகைகள் திருடப்பட்டன. திருட்டுச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் யாழ்ப்பாண நகரில் நேற்று 4 பவுண் நகைகளை அடகு வைக்க சென்றபோது பெண்மணியொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து பிரதான சந்தேகநபர் 25 பவுண் தாலியுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில்

# மேழி 70 விழா

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நிறுவுனர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் "மேழி 70 விழா" வவுனியா நகர கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரனும் சிறப்பு அதிதிகளாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் உடுவை தில்லைநடராசா ஆகியோரும் கௌரவ அதிதிகளாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதி க.பேர்னாட், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் எழுத்தாளர் மேழிக்குமரனின் கொள்ளிக்காசு சிறுகதைத் தொகுப்பு நூலும் 'அல்சைமர்' மருத்துவ நூலும் வெளியீட்டு வைக்கப்படவுள்ளன. மேழிக்குமரனின் 50 ஆண்டுகால தமிழ் இலக்கியப்பணியும் அவரது எழுபதாவது பிறந்ததினமும் இவ்விழாவின் சிறப்பம்சங்களாகும்.

## சென்னையிலிருந்து யாழ். திரும்பியவர் கைது

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபரொருவர் தமிழகத்தில் தலைமறைவாகியிருந்து, மீண்டும் நாடு திரும்பிய போது நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் திரும்புவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விமான நிலைய வளாகத்தில் காத்திருந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் இவர் தொடர்புடையவர் எனவும், நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த நிலையில், சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் திரும்புகையில் கைது செய்யப்பட்டார்.

# மன்னாரில் இராணுவத்தின் கலாசார நடனப் போட்டி







இராணுவத்தின் 542 வது படைப்பிரிவு ஏற்பாடு செய்த கலாசார நடன போட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை (21) மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மற்றும் மடு கல்வி வலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாடசாலை மாணவர்களின் குழு நடன போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்களாக இராணுவத்தின் 54 வது படைப்பிரிவு கட்டளை தளபதி கே.எம்.பி.எஸ்.வி. குலதுங்க,மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது பாடசாலை மாணவர்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு நடனம் மேடையேற்றப்பட்டது. மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை குழு நடன போட்டியாளர்களுக்கு விருந்தினர்களால் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மன்னார் குறூப் நிருபர்)

# மலைச்சாரல்

## வனராஜா தமிழ்ப் பாடசாலையில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



**(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)**

ஹற்றன் கல்வி வலயத்தில் வனராஜா கீழ் பிரிவு தமிழ் வித்தியாலயத்துக்கு 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 01 மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு அதிபர் ரெங்கசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வு தரம் 02 மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகியது.

அதிபரின் தலைமையுரையில் கல்வியின் அவசியத்தையும் பாடசாலையின் 102 ஆண்டு வரலாற்றுப்பயணத்தில் பதித்த சாதனைகளையும் எடுத்துரைத்ததுடன் மாணவர்களுக்கு பாடசாலை (TIE) பட்டியினையும் அணிவித்து வரவேற்றார்.

நிகழ்வின் இறுதியாக நோர்டன் வாசகர் வட்டத்தின் வெளியீடான மலையக ஆளுமைகளின் ஒருவரான இலங்கை கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் தமிழ் பிரிவு பிரதி ஆணையாளர் அமரர் லெனின் மதிவானம் நினைவுத்தொகுப்பு பிரதியை பாடசாலை வாசிகசாலைக்கு வழங்கி வைத்தார்.

இறுதியாக பழ மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.







இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம், கண்டி மாவட்டத்திலுள்ள மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், எல்கடுவ பிளான்டேசன் கம்பனி ஆகிய நிறுவனங்கள் நிருவகிக்கும் பெருந்தோட்டங்களில் சேவையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு இப்பகுதியிலுள்ள பெருந்தோட்டங்களை தனியார்துறை நிறுவனங்களுக்கு வழங்குவதைப்பற்றி விளக்கமளிக்கும் கூட்டம் கண்டியில் இடம்பெற்றது. இதன்போது சங்கத்தின் தலைவர் நிசாந்த வன்னியாராச்சி மற்றும் பொதுச்செயலாளர் ரொபட் பிரான்சீஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## கிரிக்கட் துடுப்பு மட்டையால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழப்பு

**(அக்குறணை குறூப் நிருபர்)**

பேராதனையில் கிரிக்கட் துடுப்பு மட்டையால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் முருதலாவ குருகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் 55 வயதுடைய தோட்ட தொழிலாளியான மாரிமுத்து தர்மலிங்கம் என்பவர் உயிரிழந்துள்ளதுடன் சந்தேகத்தின்பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் அவரது மருமகன் எனவும் மற்றவர் மருமகளின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத்தகராறு காரணமாகவே இக்கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கம்பளை சாஹிரா கல்லூரியின் 1979 ஆண்டு குழாத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு மாத்தளை நொதர்லைட் திட்டத்தில் இடம்பெற்றது. பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்க தலைவருமான கல்லூரியின் பழைய மாணவர் எம்.என்.எம். தாஹிர்பாஸி உள்ளிட்ட குழாம் உறுப்பினர்கள் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: பானந்துறை குறூப் நிருபர்)

## சாமிமலையில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம்

**(மஸ்கெலிய நிருபர்)**

சாமிமலை கவரவில்லை சிங்கள பாடசாலையில் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு நிரந்தர அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தேவை என கோரிக்கை முன்வைத்து சாமிமலை கவரவில்லை பிரதான வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டம் சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்றது.

# இலவச மீன் வழங்குவதில் குழப்பம்

நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபரின் கீழ் இயங்கும் பிரதேசங்களில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சில குடும்பங்களுக்கு இலவசமாக மீன் வழங்கப்பட்டு விற்பனை செய்வதற்கு தேவையான பொருட்களும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்று நடைபெற்றது. இதன் போது ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சில குடும்பங்களை தெரிவு செய்யும் நடவடிக்கை அனைத்து பகுதிகளிலும் சுமூகமான முறையில் இடம் பெற்றது.

இதில் கிரிமிட்டி 476/A கிராம சேவகர் பிரிவில் மாத்திரம், சமுர்த்தி உத்தியோகத்தரின் உறவினர் ஒருவரை அழைத்து சென்றமையால் அப்பிரதேசத்தில் வாழும் ஏனைய பொதுமக்கள் குழப்பமான நிலையில் உள்ளனர். குறிப்பாக சமுர்த்தி உதவித்தொகை வழங்குவதிலும் இவர் தமக்கு தேவையானவர்களை மாத்திரம் தன்னுடன் இணைத்துக் கொள்வதாகவும் ஏனையோரை புறந்தள்ளி வைப்பதாகவும் இப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்று கூடல் நிகழ்வு

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. அங்கத்தவர்களின், மீலாத் பரிசளிப்பு, மற்றும் அதிபர் கௌரவிப்பு நிகழ்வும், இம்மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாவனல்லை நாகூர்கம "திவ்மினி" மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வை.எம்.எம்.ஏ. சப்ரகமுவ பணிப்பாளர் எம்.கே.ஏ. லுக்மான் அவர்கள் தெரிவித்தார்கள். மாலைதீவு உயர்ஸ்தானிகர் கௌரவ பட்லி ஹிசாம் ஆதம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக, வை.எம்.எம்.ஏ யினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட மீலாத் விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், கேகாலை மாவட்ட ஓய்வு பெற்ற அதிபர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், இங்கு நடைபெறவுள்ளது.

# டொக்டர் விக்கினேஸ்வரா நினைவாக நூல் வெளியீடு

டொக்டர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக "கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்" எனும் நூல் தற்போது இலங்கையில் வெளிவருகிறது.

சுன்னாகம் புகழ் டொக்டர் ப. விக்கினே ஸ்வரா மண்பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பாணம மக்கள் என்றும் நினைவில் கொள்வர்.

சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவப் பணியாற்றிய வைத்தியர் ப. விக்கினேஸ்வரா அவர்கள் அமரராகி இரு வருடமாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.


ஜீவநதி பதிப்பகத்தின் 332 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் டொக்டர் விக்கினேஸ்வரா அவர்களின் ஈராண்டு நினைவாக, 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' வெளிவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் டொக்டர் ப.விக்கினேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை அறிந்ததே. 2022 இல் மறைந்த டொக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31ம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' எனும் நூல் வெளியானது.

இதன்பின் கடந்த வருடம் 2023 இல் டொக்டர் ப.விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக இலங்கையின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'பள்ளிக் கூடங்கள் கட்டடக்கூடுகள் அல்ல' எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

இவ்வருடம் டொக்டர் விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணி அவர்களால் எழுதப்பெற்ற 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' எனும் நூல் தற்போது வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ஏறாவூர் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் செலவினங்களுக்கு நிதி சேகரிக்கும் உண்டியல் திட்டம்



புற்றுநோயால் அவதியுறும் மக்களுக்கான இலவச பராமரிப்பு சேவைகளை நாடளாவிய ரீதியில் பாகுபாடுகளின்றி வழங்கிவரும் ஏறாவூர் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் நிதி சேகரிப்பு திட்டத்தின் கீழ் உண்டியல்கள் விநியோகிக்கும் நிகழ்வு நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான பராமரிப்புச் செலவுகள் முழுவதையும் இலவசமாக வழங்கி வரும் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் செலவினங்களை ஈடு செய்யும் முகமாகவே நன்கொடை நிதி சேகரிப்பு உண்டியல்களை நாடு பூராகவும் விநியோகித்து வருகின்றனர்.

இத்திட்டத்தினை பாலமுனை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் உத்தியோகத்தர் சமூக செயற்பாட்டாளர் ஏ.ஏ. அழீமின் வழிகாட்டலில் இளைஞர்கள் சபையின் தலைவர் ஏ.எல்.எம்.சீத் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.அன்சார், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையின் அதிபர் கே.எல்.உபைதுல்லா, அட்டாளைச்சேனை பிரதேச செயலக கிராம நிருவாக உத்தியோகத்தர் ஏ.எல். ஜஹ்பர், இறைவரி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எம்.எம்.முஸம்மில், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி பீ.எம். நியாத் மற்றும் கழகங்களின் தலைவர்கள், சமூக அமைப்புக்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



புற்றுநோய் பராமரிப்பு நிலையத்தின் முக்கியத்துவம் சம்மந்தமான விளக்கத்தினை பாலமுனை ஸஹ்வா இஸ்லாமியா கல்லூரியின் நிறைவேற்று அதிபர் ஏ.எல். றமீன் மதனி வழங்கினார்.

கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிறுவனத்தின் சந்தைப்படுத்தல்முகாமையாளர் எஸ்.எம்.இர்ஷாத் (இஸ்லாஹி) உட்பட குறித்த நிறுவனத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டு உண்டியல்களை கையளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐ.ஏ.ஸிறாஜ்
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# ஊவா மாகாண தனியார் பஸ் ஆசன முன்பதிவு நிலையம்

ஊவா மாகாண சபையின் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையினால் நீண்டதூர தனியார் பேருந்து போக்குவரத்து வசதிக்காக ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைவர் சுசில் குமார தலைமையில் ஆசனமுன்பதிவு நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பதுளையில் இருந்து தூர இடங்களான கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, அநுராதபுரம், கட்டுநாயக்க போன்ற பிரதேசங்களுக்கு தனியார் பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் தேவைக்காகவே இது ஆம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பதுளையிலிருந்து தூர இடங்களுக்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாசன முற்பதிவு நிலையம் பிரயாணிகளுக்கு வரப்பிரசாதமாகும் எனவும் ஊவா மாகாண வீதிப் பயணிகள்



போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைவர் சுசில் குமார தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் பொதுமுகாமையாளர் நவரத்ன பண்டார, மாவட்ட முகாமையாளர் வசந்த ஜயலத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.ஏ. எம்.ஹசனார்
(ஊவா சுழற்சி நிருபர்)

# சாய்ந்தமருது எம்.எஸ்.எம்.பர்ஸான் இந்தியாவில் நிகழ்த்திய சாதனை

## சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்க வைக்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.பர்ஸான் மீண்டும் இந்தியாவின் ஆலந்தூர் நகரில் மொன்போட் மெற்றிக் உள்ளக அரங்கில் இடம்பெற்ற world karate master Association ஒழுங்கு செய்திருந்த திறந்த கராத்தே சம்பியன்சிப் போட்டியில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று இரட்டை சாதனை புரிந்துள்ளார்.

இப்போட்டியில் இந்தியாவின் சகல மாநிலங்களில் இருந்து பிரசித்தி பெற்ற கராத்தே வீரர்கள் பங்கேற்றிருந்தனர். இதேவேளை இந்தியாவில் இதுவரை நிலைநாட்டப்படாத ஐந்து ஓடுகளை ஒரே







நேரத்தில் உடைத்தல், இரண்டு கண் இமைகளாலும் 10 மி.மீ.கம்பியை வளைத்தல், இரண்டு கண் துருவங்களாலும் சங்கிலியால் பாரம் தூக்குதல், மூக்கினூடாக குளிர்பானம் அருந்துதல், பல்லினால் தேங்காய் உரித்தல், மூக்கினால் வயரை விட்டு அதனை வாய்வழியாக எடுத்து மின்குமிழை எரியச் செய்தல், மூக்கினூடக 4 அங்குல கத்தரிக்கோலை செலுத்துதல், பல்லில் வைத்து 10 மி.மீ.கம்பிகள் இரண்டை வளைத்தல், வயிற்றில் பாரமான கற்களை வைத்து சுத்தியலால் உடைத்தல், உடம்பு பாகங்களினால் ஓடுகளை உடைத்தல், மரப்பலகையில் கையினால் ஆணிகளை அடித்து ஏற்றுதல், மரப்பலகைகளை கைகளினால் உடைத்தல், நாணயக்குற்றிகளை இரு கண்களுக்குள்ளும் வைத்து மறைத்தல், பல்லினால் 15 கிலோ கிராம் எடையை தூக்குதல், பெப்ஸி குளிர்பான அலுமினிய டின்களை கையால் உடைத்தல் போன்ற 16 சாதனைகளை தஞ்சாவூரிலுள்ள பாரத் விஞ்ஞான முகாமைத்துவ கல்வியல் கல்லூரியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர் மத்தியில் நிகழ்த்திக்காட்டி மீண்டும் உலக சாதனைக்காக சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தடம்பதித்து இலங்கைக்கும் தான் பிறந்த சாய்ந்தமருது மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

சோழன் உலக சாதனை புத்தகத்தின் நிறுவனர் நீலமேகம் நிமலன் இவரின் செயற்பாடுகளை உலக சாதனைக்காக ஏற்றுக் கொண்டு சான்றிதழையும்,பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் தலைவரும்,தென்கிழக்கு பல்கலைக்கழக கராத்தே போதனாசிரியருமான முஹம்மத் இக்பால் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# சிறுவர்களின் கல்வியில் பெற்றோர் கூடிய கரிசனையுடன் இருக்க வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் சித்தி பாத்திமா

ஒலுவில் விசேட நிருபர்

சமூகத்தின் எதிர்கால வழிகாட்டியாக திகழ்கின்ற சிறுவர்களின் கல்வியில் பெற்றோர் கூடிய கரிசனையுடன் செயற்பட வேண்டும். அப்போதே சமூகம் எதிர்பார்க்கின்ற இலக்கை அடைய முடியுமென, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான தரம் 01க்குரிய புதிய மாணவர்களுக்கான வித்தியாரம்ப நிகழ்வு பாலமுனை ஹிக்மா வித்தியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை (22) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,



"பெற்றோர் தமது பிள்ளைகளை உரிய முறையில் வளர்க்க வேண்டியது அவர்களின் கட்டாயமாகுமென்பதுடன், இலங்கையில் கல்வி மிக முக்கியமாக உள்ளது.

உரிய முறையில் பிள்ளைகள் கல்வியை பெறுவதன் மூலம் பிஞ்சு உள்ளங்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக முடியும்.

வறுமை கல்வியை விடுவதற்கு ஒரு காரணமல்ல. வறுமையில் இருந்தவர்களே இன்று கல்வியில் சிறந்த தலைவர்களாக உள்ளனர். பிள்ளைகள் மீதான இலட்சியம் பெற்றோரிடம் காணப்பட வேண்டும்.

அப்போதே எமது பிள்ளைகளை சிறந்த சமூகத்தின் தலைவர்களாக மாற்ற முடியும்.

பாடசாலையில் மாணவர்களுக்கு சிறந்த கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்பிப்பதற்கு ஆசிரியர் சமூகம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. அதற்கு பெற்றோராகிய நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஒரு கிராமத்தின் வளர்ச்சியும் சமூகத்தின் வளர்ச்சியும் அக்கிராமத்தில் உருவாகின்ற கல்வியாளர்களிலேயே தங்கியுள்ளது" என்றார்.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் காதருக்கு கௌரவம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர், பேராசிரியர் எம்.எல்.ஏ.காதரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (21) அப்பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

கடந்த 27 வருடங்களில் மேற்படி பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்துக்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க சேவைகளுக்காக அவருக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் அதன் வரலாற்றில் கல்வி, ஆராய்ச்சி, மேம்பாடு ஆகியவற்றில் வழிநடத்தும் புகழ்பெற்ற பல உபவேந்தர்களை பெற்றுள்ளமை அதிர்ஷ்டமாகும். அந்த வகையில் பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் பல்கலைக்கழக பாரம்பரியத்தில் ஒரு தனித்துவமான



இடம் பிடித்துள்ளார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான அவரது அர்ப்பணிப்பு இன்றும் மாறாமல் உள்ளது.

2021 இல் சமூகவியலில் இளங்கலை கலை திட்டத்தை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் தொடங்க ஒப்புதல் அளிப்பதில் பேராசிரியர் காதர் முக்கிய பங்கு வகித்திருந்ததாக, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

கல்முனை மாநகரில் இன்று

# முத்துச்சப்ரத்தில் பவனி வரும் விநாயகப் பெருமான்

கல்முனை மாநகர் அருள்மிகு தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் பதினோராம் நாளான இன்று ( 23) முத்துச்சப்பரத் திருவிழா இடம்பெறுகிறது. இன்று பிற்பகல் 4:30 மணி அளவில் வீதி உலா வரும் விநாயகப் பெருமான், யானைகள் முன்னே அணிவகுத்து செல்ல, முத்துச்சப்பரத்தில் வலம் வந்து அடியார்களுக்கு அருளாசி வழங்குவார்.

இந்துக்களின் கலை, கலாசாரங்களை பிரதிபலிக்கும் நிகழ்வுகளும் இந்த முத்துச்சப்பர பவனியின் போது இடம்பெறும்.கல்முனை மாநகர் ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த (13)இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நடைபெற்று வருகிறது. 12 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த விழாவில் நாளை (24) தீர்த்தோற்சவம் நடைபெற்று, உற்சவம் இனிதே நிறைவுறும்.




தரம் 01க்கு புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு, கமு/சது/ வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் அதிபர் க.தியாகராசா தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வேப்பையடி பிள்ளையார் ஆலய குருக்கள் கிரியாஜோதி சிவசிறி நேசராசா உட்பட அதிதிகள் கலந்துகொண்டனர். (மணற்சேனை நிருபர்)

# பொதுச்சபை கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் புதன்கிழமை காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைவர், உப தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் செயற்பாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டதுடன், கணக்கறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது



கிண்ணியா ரீ.பி.ஜாயா மகளிர் மகா வித்தியாலயத்தில் தரம் 01க்கு புதிய மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (22) அவ்வித்தியாலய அதிபர் எஸ்.ரீ.நஜீம் தலைமையில் நடைபெற்றது. (கிண்ணியா மத்திய நிருபர்)

# சம்மாந்துறை பிரதேச செயலக Harvest- 2023 ஒன்றுகூடல்



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் Harvest 2023ஆம் ஆண்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (21) அப்பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, ஓய்வுபெற்றுச் சென்ற, இடமாற்றமாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் நினைவுச்சின்னங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெற்றதுடன், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# தேற்றாத்தீவில் ஆண் சடலம் மீட்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு குடியிருப்புக் கிராமத்தில் ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை (21) மாலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதே கிராமத்தைச் சேர்ந்த 84 வயதுடைய ஆறுமுகம் கிருஸ்ணபிள்ளை என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

வீதியிலிருந்து இச்சடலத்தை மீட்டதாக, களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்

களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வி.தியாகேஸ்வரன் உத்தரவுக்கமைய சடலத்தை பார்வையிட்ட களுவாஞ்சிக்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியாலையில் ஒப்படைக்க பணித்தார்.